
மாதாந்த பல்சுவை சஞ்சிகை

அறிமுக விலை ரூ100/-


# பனங்கூடல்

*Panangkoodal*

இதழ் 01 மார்கழி 2013




எம் மண் எமக்களித்த அருஞ்செல்வமே பனை



இந்தப் பூனை என்ன நினைக்கிறது? சொல்லுங்கள் பார்ப்போம்!

# பனங்கூடல்

இதழ் 01 மார்கழி 2013 உள்ளே....






மனித இன சமத்துவத்திற்கான போராட்டத்தில் ஒரு சகாப்தம் நெல்சன் மண்டேலா – படத்துடன் சிறப்புப் பக்கம்



கே.சி.நித்தியானந்தா 05
முதலாவது தலைவர்–பனை அபிவிருத்தி சபை

பாரம்பரியத்தை அறிவியலுடன் இணைக்கும் 06
பனை ஆராய்ச்சி நிறுவனம்



உனை விரும்பார் யார் உண்டோ 09
கவிதை – அபராசுதன்

பனை அம்மை பனை அப்பர் பல காலம் 10
பனை அபிவிருத்தி சபை தலைவரின் பேட்டி




பனங்காய் காலம் அன்றும் இன்றும் 12
கட்டுரை – சௌதிரி

கொழும்பு காமன்வெல்த் மாநாடு ஒரு 16
மாற்றுப் பார்வை – எஸ்.அருளானந்தம்

செய்திக்கூடல் 23




வெள்ளரி நிலத்தில் ஒரு பிள்ளைப் பேறு 27
– மொழிபெயர்ப்பு சிறுகதை



அழகியல் குறித்து தற்செயலான வரிகள் 30
– மொழிபெயர்ப்பு கவிதை

பரந்து விரிந்து கிடக்கும் கடலில் வடபகுதி 31
மீனவர்களின் பிரச்சினை – கட்டுரை



வன்முறை வாழ்வில் சிதையும் சிறுபயிர்கள் 37
–– கவிதை

முச்சந்திப் பிள்ளையாரை வருத்தும் 40
ஐந்தாம் தரம்.. – குட்டிக்கதை




சினிமா விமர்சனம் 44

ஒழயல் கூழ் தயாரிப்பு 47

அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது.. 48
– கவிதை



**ஆசிரியர்குழு**

எஸ்.அருளானந்தம்
சு.சசிரேகா
க.அபராசுதன்
இ.இளங்கன்



தொடர்புகளுக்கு:
பனங்கூடல் சஞ்சிகை
கீவ பவனம், மல்வம், உடுவில்.
தொலைபேசி: 0779114549 0775304317 0777568734
மின்னஞ்சல் : panangkoodal@gmail.com


ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், சொந்த ஆக்கங்களையும் அனுப்பி உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– ஆசிரியர்குழு

**சமூக, பொருளாதார, அரசியல் தளத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு, இன்று தமது வாழ்விற்கான உரிமையை வேண்டி நிற்கும் மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதே எமது இலக்கு.**

## எமது இயற்கை வளத்தை நஞ்சூட்டி, எமக்கே வழங்கும் உலகமயமாதல்

மனித இனத்தில் சமத்துவமின்மை தனி சொத்துடமையின்போதே உருவானது. இதன் மூலம் நாம் விளங்கிக்கொள்வது. பொருளாதார ஏற்றத் தாழ்வே மனிதர்களுக்கிடையே உயர்வு தாழ்வை ஏற்படுத்துகின்றது. அதிகாரத்தை தம்வசம் கொண்டுள்ள வர்க்கம் பொருளாதார வளத்திலும் தன்னை உயர்வான நிலையில் வைத்துக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

நவகாலனித்துவம் உலகமயமாதலை ஊக்குவிக்கிறது. பொருளாதார மேலாண்மையின் சூத்திரம் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கு உலகமயமாதல் வாய்ப்பானது. அபிவிருத்தியடைந்த நாடுகள். வளர்முக நாடுகளின் பொருளாதார மட்டத்தை உயரவிடாமல் செய்வது. சகல நாடுகளிலும் செல்வந்தர்களின் கையில் அதிகாரம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது. இவையே அந்த சூத்திரம்.

நாடுகளின் ஆட்சி அதிகாரத்தை சாதாரண மக்கள் தீர்மானிப்பதில்லை. தேர்தல்களில் செல்வந்தர்களின் பணம் இறைக்கப்படுகிறது. கோழக் கணக்கான செலவில் செய்யப்படும் பிரச்சாரத்தினால் சாதாரண மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தாத ஒரு ஆட்சி அமைவதற்கே வாக்களிக்கத் தூண்டப்படுகிறார்கள். பணத்தை வாரியிறைத்த செல்வந்தர்களினாலேயே அரசியல்வாதிகள் ஆட்டுவிக்கப்படுகிறார்கள். இந்த செல்வந்தர்கள் வளர்ந்த நாடுகளின் செல்வந்தர்களுடன் கூட்டிணைந்து செயற்படுகிறார்கள். இத்தகையவர்களின் சகல வியாபார நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாகவிருப்பார்கள் குறிப்பிட்ட அரசியல்வாதிகள்.

பதப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உணவுப் பொருட்கள். அரச மருத்துவமனையினால் சிபார்சு செய்யப்படாத மருந்துகள். அதிக சத்துள்ள பால்மா வகைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. இவற்றைப் பாவிப்பதால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கு மற்றுமொரு மருந்து தயாராகவேயுள்ளது. உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் இவை எம்மை வந்தடைவதற்கும் ஏற்பாடு உள்ளது. நாம் நிரந்தர நோயாளியாகிறோம். எமது பணம் செலவாகிறது பொருளாதாரத்தில் மேலும் நாம் நலிவடைகிறோம்.

வளர்ந்த நாடுகளிலுள்ள மக்கள் இயற்கைப் பசளையில் விளைவிக்கப்பட்ட உணவுகளை உண்கிறார்கள். மூலிகை மருந்துகளை அதிகளவில் பயன்படுத்துகிறார்கள்.

எமது தேசத்திற்கு கிடைத்திருக்கும் பனை வளம் முற்றிலும் இயற்கையானது. எமது நாளாந்த உணவுத் தேவையில் நாலில் ஒரு பங்கினையாவது நாம் பனைசார் உற்பத்தி உணவுகளினால் நிறைவு செய்ய முடியும். பனம்பழம் கேட்பாரற்று விழுந்து கிடப்பதால் அதன் சிறப்புகளை உணராமல் உள்ளோம். எமது பனம்பழத்தை வெளிநாட்டிற்கு எடுத்துச் சென்று பனங்களியாக அழகாகப் பொதி செய்யப்பட்டு இங்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டால் நாங்கள் என்ன செய்வோம் என்பது எல்லோருக்குமே தெரிந்த விடயம்.

அதிக செலவில் செய்யப்படும் கவர்ச்சியான பிரச்சாரங்களினால் எமது மனம் பேதலித்துவிட்டது.


பனங்கூடல்

விலை:100/- பக்கங்கள்:52

### விளம்பரக் கட்டணம்

முழுக்கலர் விளம்பரம் (18.5செ.மீ. X 27செ.மீ.)

| | |
|---|---|
| பின் அட்டை | : ரூ.15,000/- |
| முன்அட்டை உட்பக்கம் | : ரூ.10,000/- |
| பின் அட்டை உட்பக்கம் | : ரூ. 8,000/- |


கறுப்பு வெள்ளை ( உட்பக்கங்கள்)

| | |
|---|---|
| முழுப்பக்கம் 16செ.மீ. X 24செ.மீ. | : ரூ. 5,000/- |
| அரைப்பக்கம் 16செ.மீ. X 12செ.மீ. | : ரூ. 3,000/- |
| 16செ.மீ. X 4செ.மீ. | : &. 1,000/- |

விளம்பரம் · விநியோகம்
தொடர்புகளுக்கு:
பனங்கூடல், மயிலங்காடு, ஏழாலை தெற்கு,
தொலைபேசி: 0779114549 / 0777568734
மின்னஞ்சல் : panangkoodal@gmail


### நான் காற்று

இந்த
மண்ணில்
நான் உலாவ
சிறிது இடம்
கொடுங்கள்
மனிதர்களே!



உங்கள்
வாய்களிலிருந்து
புறப்படும்
கடூரமான
சொற்கள்
அலறும் பாடல்கள்
விஷத்தைக் கக்கும்
அணு உலைகள்
உடல்களைச் சிதறடிக்கும்
நவீன குண்டுகள்
தெருக்களில் ஓடும் இரத்தம்

நான் உலாவ
மாற்றுலகம் தேடிப்
புறப்படுகிறேன்

மனோசுஷா

நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரை
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு
நாட்களாக ஐ.நா. பிரகடனம்

## பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

பனங்கூடல் சஞ்சிகையின் முதலாவது இதழுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது நாட்டில் தமிழ்மொழி மூலமான சிறு சஞ்சிகைகளின் வருகையானது பெருகியுள்ள இன்றைய காலகட்டத்தில் பனங்கூடல் சஞ்சிகையும் வெளிவருகின்றது.

தமிழகத்து சஞ்சிகைகளின் முன்பாக எமது சிறு சஞ்சிகைகள் வர்த்தக ரீதியில் தோல்வி கண்டுள்ள போதிலும் எமது தனித்துவங்களைப் பேணும்வகையிலும் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை யதார்த்த ரீதியில் வெளிக்கொண்டு வருவதிலும் முன்னின்று செயற்படுவது பாராட்டுக்குரியதாகும்.

கடந்தகால தவறான வழிகாட்டுதல்கள் எமது சமுதாயத்தை அழிவுக்கு இட்டுச் சென்றிருந்த நிலையில், ஒரு சில சிறு சஞ்சிகைகள் கூட இதற்குத் துணை போயிருந்த துரதிர்ஷ்டமும் நிகழ்ந்திருந்தன.

எனவே, எமது சமுதாயத்தை நேர்மைப்படுத்தி, அதனது சுயமான முன்னேற்றத்திற்கான வழிகாட்டியாக பனங்கூடல் சஞ்சிகை திகழ வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அந்தவகையில், இச் சஞ்சிகை முயற்சிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதன் வளர்ச்சியில் என்றும் நான் துணையிருப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

டக்ளஸ் தேவானந்தா
செயலாளர்நாயகம் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
2013.11.10

வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் சமாச தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



"பெருமையுடையார் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளுக்கமைய பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு.பசுபதி சிவரத்தினம் அவர்கள் பனங்கூடல் என்னும் சஞ்சிகையை வெளியீடு செய்யவுள்ளமையினையிட்டு பனம் தொழில் வல்லுனர்களாகிய கூட்டுறவாளர்கள் சார்பில் அதற்கான வாழ்த்துச் செய்தியனை வழங்குவதில் நான் பெரும் மனநிறைவடைகின்றேன்.

பனை வளத்தின் அருமை பெருமைகளை அதன் சிறப்பியல்புகளை எமது இளைய சந்ததிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு நூல்கள் சஞ்சிகைகளாக வெளியிடவேண்டியது காலத்தின் தேவையாகும். அந்த வகையில் பனங்கூடல் என்ற இப் பொதுச் சஞ்சிகை நிச்சயம் பேசும் என்பதில் எந்தவித சந்தேகங்களும் இல்லை.

எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகி 40ஆவது ஆண்டு நிறைவினை குறிக்குமுகமாக அண்மையில் மலர் ஒன்றினையும் வெளியிட்டிருந்தோம். இவ்வேளையில், பனை அபிவிருத்தி சபையின் தலைவரினால் பனங்கூடல் சஞ்சிகை வெளிவருவது மிகவும் பொருத்தமானதே.

இச் சஞ்சிகை பல சிறப்பான ஆக்கங்களைத் தாங்கி எமது பனைவளம் சார்ந்தோர் பயன்பெறும் வகையில் வெளிவர வேண்டும் என பாராட்டி வாழ்த்துகிறோம்.

திரு.நா.கணேசன்
தலைவர்
வட மாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்
52. சோமசுந்தரம் ஒழுங்கை
சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்
25.11.2013

# கே.சி.நித்தியானந்தா
## பனை அபிவிருத்தி சபையின் முதலாவது தலைவர்

வண்டமிழர் வாழ்வில் வளம் கொழிக்கும் கற்பகம் போல
பண்டுநாள் கண்ட பழுதில்லாப் பெருந் தலைவன்
விண்டிடும் சொல்லாட்சி விறல் உள்ள மனச்சாட்சி
கண்டு மகிழ்ந்திட்டோம் கே.சி.எனும் பெருந்தகையில்



தனது கவிதாஞ்சலியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் கல்வியியலாளர் கோ.சி.வேலாயுதம்.

கே.சி.நித்தியானந்தா மலேசியாவில் பிறந்து சுன்னாகத்தை சொந்த இடமாகக் கொண்டிருந்தார். ஆனாலும் அவர் கூடிய காலத்தை கொழும்பிலேயே செலவிட்டிருந்தார். அரசாங்க திறைசேரியில் சாதாரண எழுதுவினைஞராக சேவையில் இணைந்து கொண்டு படிப்படியாக உயர்ந்து செயலாளராக பதவி வகித்திருந்தவர். அக்காலத்தில் சிறந்த தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த கே.சி. அவர்கள் பன்னிரண்டு வருட காலங்கள் பொது எழுதுவினைஞர் சேவையாளர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை வகித்திருக்கிறார். அன்றைய நிலையில் இன உணர்வுகள் மக்கள் மத்தியில் கூர்மையடைந்திருக்கவில்லை. மூவினத்தையும் சேர்ந்த அரச பணியாளர்கள் இச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பனை அபிவிருத்திச் சபை 1978ஆம் ஆண்டு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் எம்.டி.எச். ஜெயவர்த்தனாவினால் ஆரம்பிக்கப்பட்டு அதன் முதலாவது தலைவராக கே.சி. நித்தியானந்தா நியமிக்கப்பட்டார். கே.சி.அவர்கள், சபையின் தலைமையலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவினார். தமிழ்பேசும் மக்களின் பொருளாதார வல்லமையில் கற்பகதரு முதன்மை பெற தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டார்.

இதேவேளை 1977 ஆவணியில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தெற்கில் தமிழ் மக்கள் அகதிகளானார்கள். அப்போது பெரும்பாலும் மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் அகதிகளாகி மிகுந்த சிரமங்களைச் சந்தித்தார்கள். அகதிகள் என்னசெய்வதென்று தெரியாது தவித்துக் கொண்டிருந்தபோது தமிழர்களை வடக்கிற்கு அனுப்பிவைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. தமிழ் அகதிகளை லங்காராணி கப்பலில் ஏற்றி வடக்கிற்கு அனுப்பி வைக்கும் பணியில் தீவிரமாக உழைத்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்ற அரசசார்பற்ற அமைப்பை கரவை கந்தசாமி, விஸ்வலிங்கம், அ.நல்லதம்பி போன்றோருடன் இணைந்து நிறுவினார். இதனூடாக சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் அகதிகளுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்துவதற்கு அயராது உழைத்தார்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயரில் இந்த நிறுவனத்தை பதிவு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜே.ஆர். அரசாங்கம் தமிழ் என்ற பெயரை நீக்கினால் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற அழுத்தத்தைக் கொடுக்க தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பின்னர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமாக மாற்றம் பெற்று 1982ம் ஆண்டு யூன் 22ம் திகதி கொம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது

அகதிகளை வைத்து அரசியல் நடத்தவில்லை அவர். வடக்கிற்கு வந்தவர்களை இங்கேயே வாழ வைக்க முயற்சி எடுத்தார். வன்னியில் காடுகளை வெட்டி, டொலர் பண்ணை, கென்ற் பண்ணை, நாவலர் பண்ணை போன்ற குடியேற்றத் திட்டங்களை காந்தீயத்துடன் இணைந்து மேற்கொண்டார். காணி அற்றவர்களுக்கு காணி கிடைத்தது. பாலமோட்டை, கன்னாட்டி, கணேசபுரம் போன்ற கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இன, மத, மொழி, சாதி பேதமற்ற மக்கள் நலப் பணிகளில் ஓய்வின்றி உழைத்த கே.சி.நித்தியானந்தா அமரத்துவமடைந்து 33 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவருடைய எண்ணங்களிலும், அரவணைப்பிலும் வளர்க்கப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழேயே தற்போது பனை அபிவிருத்தி சபை இயங்குகிறது. அமைச்சரின் திடமான பணியில் பனைசார் உற்பத்திப் பொருட்களால் தமிழர்களின் பொருளாதார வளம் உயர்வடையும் என நம்புகின்றோம்.

# பாரம்பரியத்தை அறிவியலுடன் இணைக்கும் பனை ஆராய்ச்சி நிறுவனம்

இந்திய, இலங்கை அரசாங்கங்களினது நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு ஆடி மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனம் அன்று தொட்டு இன்றுவரை பனைவளத்தின் பயன்பாட்டை அதிகரித்தலுடன் அதன் தரத்தையும் மேம்படுத்தும் தனது நோக்கக்கூற்று மற்றும் தூரநோக்குக்கமைவாகப் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. தற்பொழுது சந்தையில் இருக்கும் பனை சார்ந்த பொருட்களின் தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தி அவற்றின் சந்தைப்படுத்தலை விரிவாக்கல், அவற்றின் இரசாயன, பௌதீக மற்றும் நுண்ணுயிரியல் கூறுகளை ஆய்வு செய்தல், பனை சார்ந்த புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு பனையின் பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் பனைவளம் சார்ந்தோரின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் ஆகிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 01. பனங்கட்டியின் தரத்தை மேம்படுத்துதல்

இவ்வாராய்ச்சியின் முடிவில் உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் சுண்ணாம்பின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியின்போது பனங்கட்டியில் சேரும் மாசுக்களின் அளவு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. பனங்கட்டியின் நிறம், சுவை, கட்டமைப்பு, பாவனைக்காலம் என்பவை இதன் மூலம் அதிகரிக்கின்றன. இலங்கைத் தராதரக் கட்டளைச் சட்டத்துக்கமைவாக பனங்கட்டியின் தரம் அமையும் வகையில் உற்பத்தியின் தரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 02. பனங்கள்ளின் தரத்தை மேம்படுத்தல்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளில் மதுசாரத்தின் செறிவு, அமிலத்தன்மை, மொத்த நுண்ணங்கிகளின் எண்ணிக்கை என்பன அதற்குரிய மதுவரித்திணைக்களத்தின் கட்டளையிலிருந்து மிகப்பெருமளவில் வேறுபட்டுள்ளதை அவதானித்து அதன் தரத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியே இதுவாகும். பனங்கள் உற்பத்தி செய்யும் முறையை பல்வேறு மாற்றங்களுடன் கூடிய அதேவேளை சங்கத்தினரால் செயலாக்கக்கூடிய நியம செயன்முறையை உருவாக்கியதுடன் கள்ளின் தராதரமும் நியமப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 03. பனங்களியைப் பதனிடல்

தற்சமயம் சந்தையில் இருக்கும் பதப்படுத்தப்பட்ட பனங்களியானது காலாவதித் திகதிக்கு முன்னரே மாற்றங்களுக்கு உட்படுவதால் சந்தைப்படுத்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்முகமாக இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு இலங்கைத் தரக்கட்டளைச் சபையின் கட்டளைக்கமைவாக தரமான பனங்களியை பதனிடும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு அதனைக் கெடாமல் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

### 04. பனைசார் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கான புதிய உத்திகளின் உருவாக்கம்

பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அவர்களின் பொருட்களை சந்தைப்படுத்தலிலும் நீண்டகாலம் பேணுவதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் புதிய சந்தை வாய்ப்புக்களையும் மரபு வழியில்லாத சந்தைகளையும் கண்டறிவதன் மூலம் உற்பத்தியாளரின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் அதிகரிக்கவும் இந்த விடயங்களைக் கண்டறியவும் அதனை நிவர்த்தி செய்வதற்கான சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குவதற்கும் இவ்வாராய்ச்சியானது மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டது. அளவறி மற்றும் பண்பறி கருவிகளைப் பயன்படுத்தி தரவானது சேகரிக்கப்பட்டு ஆராயப்பட்டு விளைத்திறனான சந்தைப்படுத்தல் உத்திகள் உருவாக்கப்பட்டது. இவ்வாய்வில் ஆறு சந்தைப்படுத்தல் உத்திகள் உருவாக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டம் மற்றும் செயல் கண்காணிப்புத்திட்டம் என்பன உருவாக்கப்பட்டன.



05. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனைசார் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்களின் சமூக பொருளாதார நிலைகளை ஆராய்தல்

பனைசார் உற்பத்தியில் ஈடுபடும் மக்களின் பிரச்சினைகளைக் இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயரத்தும் முகமாக இவ்வாராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாராய்ச்சியில் பனைசார் உற்பத்தியில் மக்களின் ஈடுபாடு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் வாழ்வாதாரத்தில் பனைசார் உற்பத்தி ஏற்படுத்தும் தாக்கம், பனைசார் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக மேற்கொள்ளப்படக்கூடிய திட்டங்கள் என்பன ஆராயப்பட்டுள்ளன.

06. பனையோலையில் நுண்ணங்கித் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

பங்கசுக்களின் தாக்கத்தால் பனையோலை மிக விரைவில் மங்கிப் போவதுடன் சாயமூட்டும் அளவிலும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டது. பிரதானமாக முனவைக்கப்பட்ட இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஓலையின் தரத்தைக் குறைக்கும் பங்கசுக்கள் இனங்காணப்பட்டு அவற்றை வளரவிடாது தடுக்கும் மருந்துக் கலவையும் கண்டறியப்பட்டு ஓலையை நிறமூட்டுவதற்கான பொருத்தமான படிமுறையும் உருவாக்கப்படடுள்ளது.

07. பனங்களியிலிருந்து பெக்ரின் பிரித்தெடுத்தலும் அதன் இயல்புகளை ஆராய்தலும்

பெக்ரின் உணவு உற்பத்தியில் மட்டுமன்றி மருத்துவத்துறை, விலங்கு மருத்துவத்துறை, ஒப்பனைத்துறை, புகையிலை உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் எண்ணற்ற வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது. மிக வேகமாக அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப அதிகரித்துவரும் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான அளவு பெக்டினை உற்பத்தி செய்ய முடியாமை வளர்ந்துவரும் நாடுகளில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து தற்போது பிரித்தெடுப்புக்குப் பயன்படும் மூலப்பொருட்களில் உள்ள பெக்டினின் அளவை விட அதிக அளவு பெக்டினைப் பனங்களி கொண்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாராய்ச்சியில் பனங்களியிலிருந்து இலாபகரமாகப் பெக்டின் பிரித்தெடுப்பதற்குரிய பிரித்தெடுப்பு முறை வடிவமைக்கப்பட்டதுடன் பெக்டின் பிரித்தெடுப்பின்போது உண்டாகும் கழிவுப்பொருளை பெறுமதிசார் பொருளாக மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்காக உலர்த்தப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

08. பனங்களி சேர்ந்த யோகட் தயாரிப்பு

பனங்களி உடலாரோக்கியத்துக்குத் தேவையான உயிரிரசாயனக்கூறுகளையும், விட்டமின் A, நார்ச்சத்து, ஒக்சிஜனேற்றத் தடுப்பான் (Anti-oxidants) உட்பட பல ஊட்டச் சத்துக்களையும் நிறமூட்டிகளையும் கொண்டுள்ள ஒரு சிறந்த இயற்கை வளமாகும். பனங்களி யோகட்டில் பனங்களியும் பாலும் சேர்க்கப்படுவதால் ஊட்டச்சத்து மிக்க ஒரு உணவாக அமைகின்றது. இவ்வாராய்ச்சியில் சுவிஸ் யோகட், செற் யோகட், ஜெலி யோகட், ட்விஸ்ட் யோகட் என நான்கு வகையான யோகட்டுகளுக்கான சிறந்த சேர்மானக் கலவைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் ஊட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணுயிரியல் காரணிகள் என்பனவும் பாவனை காலமும் பரிசோதிக்கப்பட்டன. மேலும் இலங்கைத் தரக் கட்டளைச் சபையின் 824:1989 இலக்க கட்டளைக்கமைவாக யோகட் தயாரிப்பதற்கு ஏற்ற ஒரு உற்பத்திசாலையை அமைக்கத் தேவையான நிதி மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான அனைத்தும் ஆராயப்பட்டு அதனைச் செயலில் கொண்டுவருவதற்கான செயலாக்க ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

**ஆராய்ச்சிக்குழு**
**பனை ஆராய்ச்சி நிறுவனம்**
**கைதடி**

இவை தவிர விஞ்ஞானமாணி கற்கையினைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களும் தமது கல்வியின் ஓர் அங்கமாக பனைசார் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர். அவர்களது பல்கலைக்கழகங்கள் மற்றும் அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் என்பன கீழே

தரப்பட்டுள்ளன.

**01. விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பனைசார் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஸ்பொஞ்ச் கேக் தயாரித்தல். இதற்கு புழுக்கொடியல் மா, பனம்பாணி என்பன பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன.

**02. விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -**

இயற்கையான அதேநேரம் உள்ளூர் வளங்களைக் கொண்டு உடனடிப் பனங்கூழ் தயாரித்தல்

**03. உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் – இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**

இயற்கையான உள்ளூர் வளங்களைக் கொண்டு பாம்போஷா போன்ற பனைசார் துணை உணவின் தரத்தை அதிகரித்தல்.

**04. பாம் மற்றும் பால் மரங்கள் தொடர்பான கற்கைநெறி – ஊவா வெல்லச பல்கலைக்கழகம்**

பனங்கருப்பணியில் நுங்கு பதனிடல்.

**05. இரசாயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

சந்தையிலுள்ள பனங்கட்டியின் தூய்மைத்தன்மையை அறிவதற்கான முறையை வடிவமைத்தல்.

ஆராய்ச்சிகளுக்கு மேலதிகமாக பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களால் சமர்ப்பிக்கப்படும் பனைசார் உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பனங்கள்ளிற்கு மதுவரித் திணைக்களத்தின் சான்றிதழ் பெறுவதற்கு பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிசோதனை அறிக்கை பெற்றிருப்பது தற்போது அவசியமாக்கப்பட்டுள்ளது.


ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் பாம் மற்றும் பால் மரங்கள் தொடர்பான கற்கைநெறி பயிலும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான 30 மணித்தியால விரிவுரையும் 15 மணித்தியால செய்முறையும் இங்கு நடாத்தப்பட்டது. அதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கும் உயர் தொழில்நுட்பக் கல்லூரி இறுதி வருட மாணவர்களுக்கும் இங்குள்ள உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஒருநாள் பயிற்சிப்பட்டறையும் இவ்வாண்டு இடம்பெற்றது.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் 2013, ஆடி மாதம் 26 ஆம் திகதி முதல் ஆவணி மாதம் 05 ஆம் திகதி வரை இந்நிறுவன உத்தியோகத்தர்களுக்காக நுண்ணுயிரியல் பரிசோதனை மற்றும் அதியுயர் தொழில்நுட்ப உபகரணங்களை ஆய்வுகளில் பயன்படுத்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் ஆராய்ச்சி முகாமையாளர் உட்பட அனைத்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் ஆராய்ச்சி உதவியாளர்களும் கலந்துகொண்டனர்.

இதுவரை பூர்த்தியாக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் 2013 கார்த்திகை 13 மற்றும் 14ஆம் திகதிகளில் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களுக்காக நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் வெளியிடப்பட்டன.

2014ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள ஆராய்ச்சிகளும் பனை சார்ந்த பொருட்களின் தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தி அவற்றின் சந்தைப்படுத்தலை விரிவாக்கும் நோக்குடனே திட்டமிடப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கான அனுமதியும் அமைச்சிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

## ஆபிரகாம் லிங்கன்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் கறுப்பினத்தவர்களை அடிமைத்தளையிலிருந்து விடுவித்தவருமான ஆபிரகாம் லிங்கன் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்து அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானவர். 1860 மற்றும் 1864 ஆம் ஆண்டுகளில் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் கூட்டம் ஒன்றில் உரையாற்றிக்கொண்டிருந்தார் அப்போது அங்கிருந்த ஒருவர், "உங்கள் அப்பா தைத்துத் தந்த செருப்பைத்தான் இப்போதும் நான் போட்டிருக்கிறேன்" என்றாராம்.

அந்த நபர், காழ்ப்புணர்ச்சியுடன் அதனைத் தெரிவித்த போதும், ஜனாதிபதியான ஆபிரகாம்லிங்கன், "ஆகா! மிக நல்லது. இதிலிருந்து இரண்டு விஷயங்களை நான் தெரிந்துகொண்டேன். ஒன்று, எனது அப்பா ஒரு திறமையான தொழிலாளி என்பது இரண்டாவது அந்த செருப்பு, இவ்வளவு நீண்டகாலம் பாவிக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

உங்களுக்கு தேவையாயின், அந்தச் செருப்பில் ஏதாவது பழுதிருந்தால் வெள்ளை மாளிகைக்கு எடுத்து வாருங்கள், நானே அதைத் திருத்தித் தருகிறேன். நானும் செருப்புத் தைப்பதை அப்பாவிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறேன்" என்றாராம். இதைக் கேட்ட அந்த மனிதர் வெட்கித் தலைகுனிந்தாராம்.

# உனை விரும்பார் யார் உண்டோ!

## குறும்பா

பனம் பழத்தின் சுவை அறிந்த போது
மனம் விரும்பும் வேறு பழம் ஏது
தனம் கொடுக்கும் மணம் கொடுக்கும்
தன்னி ஆனால் களி கொடுக்கும்
இனம் இந்த பழத்தின் சுவை நூறு

வேலை இல்லை வேலை இல்லை என்று
வெட்டிக் கதை பேசும் பெண்கள் உண்டு
காலையிலும் மாலையிலும்
கைப்பணியாய் செய்ய - பனை
ஓலையிலே வேலை பல உண்டு

வீடு கட்டி வாழ்வதற்கு நினை
ஓடு போட்டு முடிக்க வேண்டும் பனை
தேடு சென்று கேட்டாலும்
கிடைத்திடாது களவு செய்து
நாடு போற்றும் பனை தறித்தல் பிணை

ஒடியல்கூழ் வாசனையில் மயங்கி
விடியலோடு வந்திடுவர் தயங்கி
தடியுடைய தாத்தாவும்
ஞாயிறு தவறணையில்
பொடியனோடு கூத்தடிப்பார் கிறங்கி

பீர் அன்று நமக்கு மெல் ஆகாரம்
சீர் உண்டு பனையில் நல் ஆகாரம்
வீர் கொண்டு உண்டிடலாம்
விதவிதமாய் பல மருந்து
நீரிழிவிற்குமுண்டு கல்லாக்காரம்

பனை மரத்தின் திறன் அதனைப் போலே
தனை உவந்த மரம் உண்டோ வேறே
உனைக் காத்து எனைக் காத்து
பதுங்குகுழியில் சனம் காத்த
கனம் பெற்ற பனைக்கு நிகர் ஏது

க. அபராசுதன்

# பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களுடனான நேர்காணல்

# "பனை அன்னை பனை அப்பர் பல காலம் காப்பர் எனை"

இன்றைய உலகில் செயற்கையான உணவு உற்பத்திகள் அதிகரித்து வருகின்றபோதும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இயற்கையான உணவுகளுக்கு மதிப்பு உயர்ந்துள்ளது. எமது தேசத்தில் இயற்கையாக எமக்கு கிடைத்துள்ள பனை வளத்தை பலரும் கண்டுகொள்ளாமலே உள்ளமை வருத்தத்திற்குரியது. பலர் பனைவளத்தின் அருமை. பெருமைகளை அறியாமலும் உள்ளனர். கடந்த காலத்தில் அதாவது 1978ஆம் ஆண்டில் பனை அபிவிருத்தி சபையின் முதலாவது தலைவராக பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமரர் கே.சி. நித்தியானந்தா அவர்கள் பனம் பொருட்களுக்கும். பனைசார் தொழிலாளர்களுக்கும் உரிய அந்தஸ்தை வழங்குவதற்காக உழைத்தார். பனைவளங்களை பயன்படுத்துவதற்கும் அதன் சிறப்புகளை மக்கள் அறிவதற்கும் அவர் களம் ஏற்படுத்தினார். பின்னர் வந்த தலைவர்கள் அதனைத் தொடர்ந்து செய்தனர். எனினும். நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையில் பனைகள் பாதிக்கப்பட்டது போல பனை அபிவிருத்தி சபையின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டு கொழும்பிலேயே முடக்கப்பட்டது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2009 நவம்பரில் பத்தாவது தலைவராக திரு. பசுபதி சீவரட்னம் அவர்கள் நியமிக்கப்பட்டதும். இந்த நிலைமைகள் யாவும் மாற்றப்பட்டது.

பனை அபிவிருத்தி சபையின் 10ஆவது தலைவராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நியமிக்கப்பட்டு தனது அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் மற்றும் திறமையான நிர்வாகத்திறன் அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்தால் சிறந்த நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. பசுபதி சீவரத்தினம் "பனை வளம் எம் வாழ்வையும் நம் தேசத்தையும் வளப்படுத்தும்" என்கிறார். பனங்கூடல் சஞ்சிகைக்காக அவருடன் கலந்துரையாடியபோது.



**தற்சார்பு பொருளாதாரத்தில் பனை வளமும் ஒன்றாக காணப்படுகிறது. பனை வளத்தின் பயன்பாடு தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது?**

தற்சார்புப் பொருளாதார வளமானது ஒரு தேசத்தின் பொருளாதர வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமான அம்சமாகும். அந்த வளமானது எமது தற்சார்பு பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான ஓர் வளமாகும் அந்த வகையில் பனை வளப் பயன்பாடு சம்மந்தமான எமது நடவடிக்கைகள் தொடருகின்றன.

கடந்த காலங்களை விட தற்போதைய எமது வளப் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. பனை ஓலை சம்பந்தப்பட்ட பணியாளர்களின் உற்பத்திப் பொருட்களை நாமே கொள்வனவு செய்து சந்தைப்படுத்தி வருகின்றோம். கடந்த வருடம். பனை ஓலை சார் உற்பத்திப் பொருட்களிலிருந்து அறுபது மில்லியன் வரையிலான வருமானம் எதிர்பார்க்கப்பட்டபோதும் எண்பத்தைந்து மில்லியன் ரூபா வரையிலான வருமானம் எமக்கு கிடைத்துள்ளது. அத்துடன் எம்மால் பயிற்றப்பட்டவர்கள் தமது கைப்பணிப் பொருட்களை தனிநபர்களாகவும் சந்தைப்படுத்தி வருகின்றார்கள்.

இவை தவிர பனை சார் உணவுப் பண்டங்களான புழுக்கொடியல். பனங்கட்டி. ஒடியல் மா. பனங்களி. கோடியல். பனம் கேக். பனம் ஜாம்

போன்ற பல்வேறு வகைப்பட்ட பனை சார் உணவுப் பொருட்களும் எம்மால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதுடன் பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களிற்கான சந்தை வாய்ப்பும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தேசியப் பொருளாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் எமது அந்நியசெலாவணியும் மீதப்படுத்தப்படுகின்றது.

ஒரு தேசத்தின் தற்சார்புப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டுமெனில் அத்தேசத்தின் சூழலை பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும். ஆனால் இன்றைய நிலையில், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையானது எமது சூழலை மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றது. தற்போது பனை ஓலைப் பொருட்களின் பாவனை அதிகரிப்பால் மாசடைந்த சூழல் வளப்படுத்தப்படுகின்றது. எனவே "பனை அப்பர் பனை அம்மை பல காலம் எமைக் காப்பர்" என்ற அடிப்படையிலேயே எமது செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. பனையின் அடியிலிருந்து நுனிவரை 801 வகையான பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென எமது முன்னோர்கள் தாலவிலாசம், பஞ்சம்போக்கி, பனைக் காவியம் என்ற நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள். இவற்றையெல்லாம் ஆராய்ந்து எமது உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்வதுடன் பனை ஓலை, பனைநார், தும்பு போன்றவற்றைக்கொண்டு நவீன பொருட்களை தயாரிக்கும் கைப்பணிப் பயிற்சியையும், பனை சார் உணவு வகைகளை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகளையும் வழங்கி வருவதன் மூலமும் எமது தற்சார்புப் பொருளாதாரத்தை ஊக்குவித்து வருகின்றோம்.

**முன்னைய காலங்களைவிட தற்போது பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளில் வளர்ச்சிப்போக்கு அதிகமாக காணப்படுவதாக பலராலும் கூறப்படுகிறது. நீங்கள் இச்சபையின் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றதன் பின் இதன் மேம்பாட்டிற்காக எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?**

1978ஆம் ஆண்டு நல்நோக்குடனும், சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடனும் திரு.கே.சி.நித்தியானந்தா தலைமையில் பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை, பனை அபிவிருத்திச் சபையினால் சீராகச் செயற்பட முடியவில்லை.

தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பனை அபிவிருத்திச் சபையின் ஆரம்பகால பணியாளர் என்ற வகையில் அவரது அனுபவம் பனை வளத்தின் மீதும், பனை வளம் சார் மக்களின் மீதும் அவர் கொண்ட அபிமானம், சிறந்த திட்டமிடல், அதை நடைமுறைப்படுத்துவதற்கான வழி காட்டல் என்பன ஓர் இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் தொழில் விரிவாக்கத் திறனை அதிகரிக்கச் செய்துள்ளது. இதற்கு மீள்நிர்மாணம் செய்யப்பட்ட கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தின் பங்களிப்பு காத்திரமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.


மேலும், தேசிய அருங்கலைப் பேரவையுடன் தொடர்பு கொண்டு தமிழ் - சிங்கள மக்களிடையே ஓர் தொழில் நுட்பப் பரிமாற்றத்தை ஏற்படுத்தி பனை சார் தொழிற் பயிற்சிகளை கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச் சபை வழங்கிய போதும், அப்பயிற்சியைப் பெற்ற உற்பத்தியாளர்கள் சரியான முறையில் ஒன்றிணைக்கப்படவில்லை. ஆனால் தற்போது "சிறு சுவடுகள்" என்ற அமைப்பினூடாக உற்பத்தியாளர்கள் ஒன்றிணைக்கப்பட்டு அவர்களது உற்பத்தித் திறனை ஊக்குவிப்பதோடு அவர்களது உற்பத்திக்கான சந்தை வாய்ப்பையும் விரிவாக்கி வருகின்றோம். குறிப்பாகப் பனைசார் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான புதிய வடிவமைப்புக்களை உருவாக்கி அதன் மூலம் புதிய வடிவங்களில் பொருட்களை உற்பத்தி செய்தல், இயந்திரம் மூலம் பனம் களியைப் பெறுதல், பனம் பொருள் நுகர்வை அதிகரிக்கச் செய்வதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல், பனைசார் உணவுப் பொருட்களின் சித்த மருத்துவக் குணங்களை பிரச்சாரம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பனம் பொருள் பாவனையை அதிகரிக்கச் செய்து வருகின்றோம்.

அத்துடன் உள்நாட்டுச் சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்தல் என்ற வகையில் உள்நாட்டு நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருவதோடு, வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பையும் உள்நாட்டு முகவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். "கற்பகச் சோலை" என்ற இணையத் தளத்தினூடாக பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் தற்போது பனைமரம் வளர்த்தல் வினைத்திறனுடன் நடைபெற்று வருகின்றது. பனை விதை நடுகை மூலமே பனை மர உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது வழமை. அவ்வாறான செயற்பாடு போதியளவு வெற்றி தராமையினால், நாம் பனை நாற்றுக்களை எமது பண்ணைகளில் வளர்த்து மீள் நடுகை செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். எனவே, தற்போது பனை விதைகளை மட்டுமல்லாமல் பனை நாற்றுக்களின் மூலமும் பனைமரங்கள் வளர்க்கப்படுகின்றன. மேலும் விரைவில் பயன்தரக் கூடிய குட்டைப்பனை நடுகையையும் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றோம்.

**பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகத்தை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றியுள்ளீர்கள் இதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?**

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்)



# பனங்காய் காலம் அன்றும் இன்றும் ஒரு பார்வை

பொதுவாக பனங்காய் காலமானது ஆடி மாதம் தொடங்கி ஐப்பசி மாதம் வரை. பனம் பழம் பழுத்து விழுந்தாலும் அது பனங்காய் எனத்தான் ஊரவர்களால் அழைக் கப்படுகின்றது. பனங்காய்க்கும் வடபகுதி மக்களுக்குமான தொடர்பு, இரத்தமும் சதையும் போன்றதாகும் நாட்டின் வடபகுதி குறிப்பாக யாழ்ப்பாணம் என்றாலே பனையை அடையாளப்படுத்திப் பார்க்கும் வழக்கம் ஏனைய பிரதேசங்களுக்கு உள்ளது. அந்தவகையில் அன்றைய காலத் தோடு இன்றைய காலத்தை ஒப்பிட்டு நோக்குவோமாக.

## அன்று.....

அன்றைய காலத்தில் ஊரவர் பெயருடன் பனங்காய் செல்வர், பனங்காய் பொன்னம்மா எனப் பல பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. பனங்காய்களைப் பொறுக்கி எடுத்துச் சேகரிப்பதில் முன்னணி வகித்தோரை இவ்விதம் பெயர் சூட்டினார்கள். அடுத்தவர் வீட்டு வளவுகளில் கள்ளமாக பனங்காய்களை பொறுக்கி, வீட்டு உரிமையாளர்களிடம் பிடிபட்டு அடி வாங்கிய சிறார்களின் கதைகளும் உண்டு.

பனை மரம் இல்லாத வளவோ, வீடோ இல்லாத அளவுக்கு ஒவ்வொருவர் வீட்டிலும் பனை மரங்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டதோடு அவற்றின் மூலமாக அவர்கள் பெற்ற பயன்களும் அதிகமாகவே இருந்தன. இதற்கு ஓர் திருக்குறளை இங்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாய்க் கொள்வார் பயன் தெரிவார்"**

இக்குறளானது நன்றி யுடமையை வெளிப்படுத்தினாலும் அதன்மூலம் பனையின் உச்ச பயன்பாட்டையும் எமக்கு வெளிப் படுத்தி நிற்கின்றது. தமது சொந்த காணி களிலும் தோப்புக்களிலும் விழும் பனம் பழங்களை பொறுக்கி எடுத்து அவற்றிலிருந்து பனங்களியை தமது கைகளினால் பிசைந்து எடுத்து அப் பனங்களியைக் கொண்டு பல்வேறுபட்ட உணவுப் பொருட்களை செய்து உண்டார்கள். குறிப்பாக பனங்களியில் தினை, சாமை, அரிசி போன்றவற்றைக் கலந்து பிசைந்து பனங்காய்ப் பணியாரம் போன்ற பலகாரங்களை செய்தனர். வறுமையான குடும்பங்கள் தமது பசியைப் போக்குவதற்காகவும், பனம் பழம் விழும் காலத்தில் அவற்றைப் பிசைந்து பனங்களி எடுத்து பழப்புளி சேர்த்து உண்ட காலமும் உண்டு.

பனம் பழத்தை பிசைந்து பதமாக்கி பரன் கட்டி சூரிய ஒளிபட ஓலைப்பாயில் அவற்றை வார்த்து பனாட்டு ஆக்குவர். பனாட்டை வீடுகளில் "உமல்" எனும் ஓலையால் செய்யப்பட்ட பையில் வைத்திருப்பார்கள். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பனாட்டை சிறு துண்டுகளாக வெட்டி பனம் பாணியில் ஊற விடுவார்கள். பனையிலிருந்து பெறப்படும் கருப்பனியை மட் பானையில் நன்றாக தடிக்கக் காய்ச்சுவார்கள். அந்தப் பாணியில் மிளகு, சீரகம், என்பவற்றைக் கலந்து பாணிப் பனாட்டை தயாரிப்பார்கள். இப் பனாட்டு மிகவும் சுவையானதாக இருப்பதோடு மருத்துவரீதியான பயன்கள் பலவற்றைக் கொண்ட தாகவும் அமைகின்றது. பதனீரிலி ருந்து பனங்கட்டிகள் தரம் பிரிக்கப்பட்டு பான வகைகளுக்கு பயன்படுத்தப்படுவதோடு, பனங்கட்டி மற்றும் பதனீரிலிருந்து பெறப்படும் பனங்கற்கண்டு, சீனி, புளித்த பாணி (பனம் வைன்) போன்றவையும் பல்வேறுபட்ட மருத்துவத் தேவை களுக்கு துணையாக அமைகின்றன.

புரட்டாதி மாதம் முதல் மழை கண்டவுடன் பதமான மண்ணில் 3அடி உயரத்திற்கு மண்ணைப் பாத்தியாக்குவார்கள். பனம் பழங் களை அல்லது பனம் விதைகளை சிறப்பாக அடுக்கி பனம் பாத்தி போடுவதற்கான நடவடிக்கைகளை தாமே மேற்கொள்வார்கள். இந்த வேலைகளுக்காக வேறு கூலி ஆட்களைப் பிடிப்பது கிடையாது.

இதுவே அன்றைய கால மக்களின் சிறப்பம்சமாகும். மக்கள் தாமாகவே குழுக்களாக இணைந்து பனம் பாத்தி போடுவார்கள். பாத்தி போடும் நிகழ்வன்று ஊர்கூடி சமைத்து உணவு உண்பார்கள். இவ்வாறான நடவடிக்கைகள் கிராமங்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்டியது.

மாசி, பங்குனி மாதங்களில் அதிகாலையில் பனம்பாத்தி கிண்டுவார்கள். பாத்தியிலிருந்து பெறப்பட்ட பனங்கிழங்கை உடன் அவித்து அப்படியே உண்ணுவார்கள். சிலர் கிழங்கை சிறு சிறு துண்டுகளாக முறித்து அவற்றை மர உரலில் இட்டு நன்கு இடிப்பார்கள். பின் அதில் மிளகு, உள்ளி, போன்றவற்றையும் சேர்த்து இடிப்பார்கள். பின் அவற்றை சிறு உருண்டைகளாக உருட்டி ஊர் கூடி, உறவுகள் கூடி உண்பார்கள். இவ் உருண்டையின் சுவையே தனிதான். பாத்தி கிண்டியதும் பூரான் வெட்டும் படலம் தொடங்கும். பெரியவர், சிறுவர் றேபாடின்றி பூரான் வெட்டி உண்பார்கள். பனம் பாத்தியில் முளைவிட்டதும் கருகியது முளைப்பூரான் எனப்படும். இது மிகவும் சுவையானதாக இருக்கும். சிறுவர்களும் பெரியவர்களும் போட்டி போட்டு இப் பூரானை உண்ணும் வழக்கம் அன்று மக்களிடையே காணப்பட்டது.

கிழங்கு பிடுங்கிய பின்னர் கிடைக்கும் ஊமல் விறகாகவும், புகையிலை பதப்படுத்துவோரும், அலங்காரப் பொருட்களை செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

பனங்கிழங்கை காயவைத்து ஒடியலாக்கி அதனை மாவாக்கி பல்வேறு வகையான உணவுகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தினர். உதாரணமாக பிட்டு, கூழ், லட்டு, போன்றவை. ஒடியல் பிட்டு சாப்பிட்டு நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்த எம் மூதாதையர், ஒடியல்மா உணவுகளை காலையில் உண்ட பின்னர் ஓட்டமும் நடையுமாக பாடசாலை சென்று அங்கு சிறப்பாக கல்வியை சோர்வின்றி கற்றமை பற்றி, அவர்கள் கூறிய கதைகளும் எமக்கு பனை உணவுகளை ஞாபகப்படுத்திய வண்ணம் உள்ளன.

இவை மட்டுமல்லாது பனை ஓலை, பனைமரம் போன்றவற்றிலிருந்து பல்வேறுபட்ட கைவினைப் பொருட்களை தாமாகவே உருவாக்கி, உதாரணமாக பனையோலையால் செய்யப்பட்ட கூடைகள், தொப்பிகள், சுளகு, பெட்டி, நீத்துப்பெட்டி போன்ற பல்வேறு பொருட்களை வித்தியாசமான முடிச்சுக்களில் உருவாக்கி அவற்றை விற்று பெறப்பட்ட பணத்தில் தமது குடும்பம் மற்றும் குழந்தைகளுக்கான செலவுகளையும் ஈடு செய்தனர்.

இவ்வாறாக அன்றைய காலத்தில் பனை எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்த அம்சமாக காணப் பட்டதோடு சிறந்த வாழ்வாதாரமாகவும் அமைந்தது எனக் கூறலாம்.

**இன்று.....**

பனங்காய் காலம் எப்போது என்று தெரியாதவர்களாக குறிப்பாக வட பகுதியின்பல்வேறு இடங்களில் பனம்பழங்கள் தேடுவாரற்று காணப் படுகின்றன. வீடுகளிலும் வீட்டு வளவுகளிலும் பனை மரங்களை நடுகை செய்வோரின் வீதம் அருகிக்கொண்டு செல்கின்றது என்று சொல்வதை விட முற்று முழுதாக இல்லை என்றே சொல்லலாம்.

வீடுகளிலும் வீட்டு வளவுகளிலும் பனை மரங்களை நடுகை செய்வோரின் வீதம் அருகிக்கொண்டு செல்கின்றது என்று சொல்வதை விட முற்று முழுதாக இல்லை என்றே சொல்லலாம். இதன் காரணமாக பனை யிலிருந்து பெறப்படும் பனங்காய் மற்றும் அதிலிருந்து பெறக்கூடிய உணவுப்பொருட்கள் போன்ற பயன் களை அனுபவிக்க முடியாமல் உள்ளது.

இதன் காரணமாக பனையிலிருந்து பெறப்படும் பனங்காய் மற்றும் அதிலிருந்து பெறக்கூடிய உணவுப்பொருட்கள் போன்ற பயன்களை அனுபவிக்க முடியாமல் உள்ளது.

பனைமரம் மற்றும் பனை ஓலையிலிருந்து செய்யப்படும் கைவினைப் பொருட்கள் மூலம் வருமானம் ஈட்ட முடிகிறது. எனினும் இளந் தலைமுறையினர் இத் தொழிலை கௌரவக் குறைச்சலாக எண்ணி வருமானத்தை இழந்து பனை வளத்தையும் அவமரியாதை செய்கின்றனர்.

பனை மூலம் பெறக்கூடிய மருத்துவ குணம் மிக்க சத்தான உணவுகளை தவிர்த்துவிட்டு நவீன போலியான, கவர்ச்சியான உணவுகளை நாடுவதன் மூலம் தமக்குத் தாமே உடல் உபாதைகளை ஏற்படுத்திக்கொண்டு பணத்தை வீணே மருத்துவத்திற்கு செலவழிக்கின்றார்கள்.


தற்காலத்தில் பனையின் பயன்களைப் பெறுவோரும் அதனைப் பாதுகாப்போரும் மிகக் குறைவாகவே உள்ளனர். இன்னமும் கிராமப்புறங்களில் பனையையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு சில பேர் வாழ்கின்றனர். அவர்களை நாம் இந்த நேரத்தில் பாராட்டி வரவேற்க கடமைப்பட்டுள்ளோம்.

பனை அபிவிருத்திச் சபை, பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அமைப்புக்கள் பனையினை பேணி வளர்க்க தமது பங்களிப்பை வழங்கினாலும் சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றது.

நாம் அனைவரும் பனையின் பயனை உணர்ந்தவர்களாக செயற்படுவோமாக. நமது மூதாதையருக்கு சவாலாக எம்மாலும் பனையை வளர்க்க முடியும். அதன் மூலம் உச்ச பயன்பாட்டைப் பெற முடியும் என உறுதி கொள்வோம். எம் உயர்ந்த வளத்தை பாதுகாப்பதற்கு முன்வருவோமாக■

# மலரும் நினைவுகள்

பல நூற்றுக் கணக்கான இலக்கியப் படைப்புகளை தமிழ் கூறும் உலகுக்கு தந்த சீரிய எழுத்தாளர் செ.கணேசலிங்கன் அவர்கள் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் தனது பிள்ளைப் பருவத்தை அசை போட்டிருக்கிறார். ஞாபக சக்தி குறைந்து விட்ட போதிலும், குறையாத இலக்கிய நயத்துடன் தனது ஆற்றலை எமக்காக வெளிப்படுத்தி யிருக்கிறார். அவரது "மலரும் நினைவுகள்" கட்டுரையிலிருந்து...



1928 ஆம் ஆண்டாக இருக்கலாம். அப்போது எனக்கு வயது நான்கு. நான் பிறந்து வளர்ந்த கிராமம் பொன்னாலை. இது யாழ் குடாநாட்டின் வடமேற்கு மனையில் அமைந்திருக்கிறது.

மிகச் சிறிய கிராமம். அப்போது மிக ஏழைக் கிராமம் என்று கூடச் சொல்லலாம்.

ஏழைக் கிராமமாக இருந்த போதிலும் அதற்கு ஒரு செல்வாக்கும், நல்ல வரலாறும் உண்டு. அந்தப் பெருமையைத் தந்தது, பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம். அந்தச் சுற்று வட்டாரமெங்கும் மிகவும் புகழ் வாய்ந்த ஆலயம். ஏதோ ஒரு காலத்தில் அந்தக் கோயிலுக்கு பிரமாண்டமான கட்டிடங்களும், ஏழு வீதிகளும் இருந்ததாகச் சொல்வார்கள். கடைசியாக ஒல்லாந்தர் அந்தக் கோயிலை இடித்து, சங்கிலித் தொடராக ஆட்களை நிறுத்தி அந்தக் கற்களைச் சங்கானைக்கும் வேறு இடங்களுக்கும் கொண்டு சென்று வேறு கட்டிடங்களைக் கட்டியதாகச் சொல்வார்கள்.

எனக்குத் தெரியத்தக்கதாக இப்போதுள்ள வயிரக்கல் மூலத்தானமும், முன் பண்டபமும், உள் வீதியைச் சுற்றி மதிலும், அந்த மதிலைச் சுற்றி வெளி வீதியும் இருந்தன. கோபுரம் கட்டுவதற்கு அடித்தளம் இடப்பட்டிருந்தது.

சிறு வயதில் எங்களுடைய விளையாட்டுக் களம் இந்தக் கோயிலும் அதன் வீதிகளும் தான்.

கோயில் மண்டபங்களின் மேல் ஏறி ஒழிந்து விளையாடியதும், தேர் முட்டியிலிருந்து பந்தயம் போட்டுக் குதித்ததும், மேற்கு வீதியில் "தாச்சி" விளையாடியதும், மாரி காலத்தில் கோயில் கேணியில் ஒல்லு கட்டி நீந்திப் பழகியதும் எனக்கு இப்போது நினைவுக்கு வந்து நெஞ்சை நிறைக்கின்றன. திரும்பக் கிடைக்க முடியாத அற்புதமான, மகிழ்ச்சியான காலம் அது.

பொன்னாலைக் கோயில் அந்தக் காலத்தில் வருடம் பதினொரு மாதங்களும் வெறிச்சோடிக் கிடக்கும்.

ஆவணி மாதத்தில் பதினேழு நாட்கள் திருவிழா நடக்கும்போது மட்டும் கோயில் களைகட்டும் எல்லா நாட்களுமல்ல. சில திருவிழா நாட்களில் சாமி தூக்கவும் ஆளில்லாமல், தற்காலிகத் தேனீர்க் கடையின் முன்னால் சீட்டு விளையாடிக் கொண்டிருப்பவர்களைக் கூட்டிக் கொண்டு போகவேண்டியிருக்கும்.

ஏழாந் திருவிழா, பன்னிரண்டாந் திருவிழா என்றால் "கூத்து" நடக்கும் கூத்து என்றால் ஏழாந் திருவிழாவன்று கொட்டகைக் கூத்து. கொட்டகை போட்டு, அதனிடையே மேடை அமைத்து, "சீன்" கட்டி "பெற்றோல்மாக்ஸ்" வெளிச்சத்தில் நடக்கும் ஏழாந் திருவிழாவுக்கு ஆண்டுதோறும் "லங்கா தகனம்" நாடகந்தான். இணுவில் நாகலிங்கம் இராமனாக வருவார்.

"ஐயோ என் ஜானகியை அரக்கன் கொண்டு போயினானே......"

என்று அவர் பாடிக் கொண்டு தலையில் கைவைத்துப் புலம்புவது என் கண்முன் இன்றும் தெரிகிறது. கடைசியில் ராவணனாகவும் அவரே பத்துத் தலைகளைக் கட்டிக் கொண்டு வருவார்.

நெல்லியடி ஆழ்வாப்பிள்ளை சீதை, பபூன் செல்லையாவும் முக்கியம். அனுமானாக வந்தவர் யாரென்று நினைவில்லை. ஆனால் அவர் மேடையில் ஒரு சால்வையை விரித்துவிட்டு, அதையே, கடலாகப்

மேளக் கச்சேரியை விட சின்ன மேளத்துக்குக் கூட்டம் அதிகமாக வரும். நேரத்தோடு வந்து அங்காங்கே படுத்துத் தூங்கியவர்களெல்லாம் மத்தளச் சத்தம் கேட்டதும் துள்ளி எழுந்து மண்டபத்துக்கு வந்துவிடுவார்கள். றலிசெற், பண்டிருட்டி செற் என்று அந்த நாளில் மிகப் பிரபலம். மக்களுக்கு அவர்களுடைய நடனச் சிறப்புகள் முக்கியமல்ல.

பாவனை செய்துகொண்டு
பாய்கிறேன் கடலை......

என்ற பாட்டுடன் தொடங்கிப் பாய்ந்தது நினைவிருக்கிறது. (இந்த லங்கா தகனம் நாடகத்திலும் வேறு பல நாடகங்களிலும் 1940 மட்டில் பொன்னாலை வரகவி பி. கே. கிருஷ்ணபிள்ளை பங்குபற்றி "போட்டா போட்டிகள்..." நடத்தியது மிக பிரசித்தம்.

பன்னிரண்டாந் திருவிழாவில் நடப்பது கொட்டகைக் கூத்தல்ல. அது மக்கள் கூட்டத்தினிடையே நடக்கும். பொன்னாலைக் கோயில் கூத்து என்றால் சுமார் பத்து ரதல் சுற்றாடலிலுள்ள மக்களெல்லாம் வந்து குவிவார்கள். ஒற்றை மாட்டுத் திருக்கை வண்டிகளும், வில் வண்டிகளும் இரட்டை மாட்டு வண்டிகளும், இரட்டை மாட்டு வண்டிகளும் கோயிலின் பக்கத்தேயுள்ள வளவுகளில் நிரம்பிவிடும்.

அந்தக் காலத்தில் வானொலி, தொலைக்காட்சி, சினிமா கூட இல்லை மக்களுக்கு முக்கிய பொழுது போக்கு கோயில் திருவிழாக்கள்தான்.

திருவிழாக்களிலும் மேளக் கச்சேரி, சதிர்க் கச்சேரி என்ற சின்னமேளம், கூத்து முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றால் மக்கள் திரண்டு கூடுவார்கள்.

மேளக் கச்சேரியை விட சின்ன மேளத்துக்குக் கூட்டம் அதிகமாக வரும். நேரத்தோடு வந்து அங்காங்கே படுத்துத் தூங்கியவர்களெல்லாம் மத்தளச் சத்தம் கேட்டதும் துள்ளி எழுந்து மண்டபத்துக்கு வந்துவிடுவார்கள். றலிசெற், பண்டிருட்டி செற் என்று அந்த நாளில் மிகப் பிரபலம். மக்களுக்கு அவர்களுடைய நடனச் சிறப்புகள் முக்கியமல்ல. ஏதோ அந்தப் பெண்கள் அலங்கரித்துக் கொண்டு சபை நடுவே துள்ளிக் குதிப்பதும், அவர்கள் பாடும் பாட்டுகளும் தான் முக்கியம்.

"பண்ஜத மோதிரமால்
நேரைப் பரிகொடுத்தோமே
பரிகொடுத்தோமே. நெஞ்சம்
பரிதவித்தோமே......" (பண்ஜத)

என்று ஒரு பாட்டு

"வாங்கித் தர வேண்டும்
கதராடை
அடுத்த தீபாவளிக்கு
எங்கம்மாவுக்கும் எனக்கும்." (வாங்கி)

என்று ஒரு பாட்டு. எல்லாம் தென்னிந்திய இறக்குமதிகள், மக்களுக்கும் பாட்டின் பொருள் முக்கியமல்ல. இசையும், பாடுபவரும்தான் முக்கியம்.

பன்னிரண்டாந் திருவிழாக் கூத்து "கிருஷ்ண லீலா" மக்கள் மத்தியில் நடக்கும். மேடையோ, சீனோ எதுவும் கிடையாது.



என்னுடைய இன்றைய நினைப்பில் பெரிய சன சமுத்திரம், நடுவில் பாதை விட்டு இரு பிரிவாக மக்கள் அமர்ந்திருப்பார்கள். ஒரு பக்கம் ஆண்கள், மறுபக்கம் பெண்கள், நடுவே இருக்கும் பாதையில் தான் கூத்து நடக்கும்.

திருவிழா ஆரம்பிக்கும் முன் கோயிலில் முன் மண்டத்தில் கூத்தின் முதற் காட்சி நடைபெறும். பூதகி என்ற அரக்கி வருவதும் அவளைக் கண்ணன் கொல்வதும் அங்கே நடக்கும். பூதகியாக மூளாய் பெரியதம்பி என்ற நடிகர் சபையில் வந்ததும் "பூ.." என்று பெரியதாக வாயால் ஊதுவார். நெருப்புப் பொறிகள் பறக்கும் (அப்போது அது எனக்கு மிகுந்த அச்சம் தந்த காட்சி. அது ஏதோ குங்கிலிய விளையாட்டு என்று பிற்காலத்தில் தெரிந்து கொண்டேன்.

சாமி புறப்பட்டு வந்து தெற்கு வீதி தாண்ட முன்னாலுள்ள கேணியடியில் கூத்தின் இரண்டாம் காட்சி நடைபெறும். கோபிகைகளின் துணிகளைக் கண்ணன் கவர்கிற காட்சி.

வடக்கு வீதியில் கூத்தின் கடைசிக் காட்சி நடைபெறும். கம்சனைக் கண்ணன் கொல்கிற காட்சி. கழிவுபுரம் பண்டாரி என்பவர் கம்சன் வேடத்தில் வந்து மிக அட்டகாசமாகப் பாட்டுகள் பாடி வாசனங்களும் பேசுவார். கண்ணனாக வந்தவர் பெயர் நினைவில்லை. யாரோ அண்ணாவி என்று சொல்லுவார்கள். ஒரு சால்வையைக் கயிறு போல உருட்டி அதை இரண்டு பேர் வழியின் குறுக்காக பிடித்திருக்க, கயிற்றின் ஒரு பக்கத்தில் கண்ணனும் மறுபக்கத்தில் கம்சனும் நின்று துள்ளிக் குதித்து சண்டையிடுவதாகப் பாவனை செய்வார்கள்.

கடைசியில் கண்ணன் கயிற்றைத் தள்ளிக் கொண்டு மறுபக்கம் போய் கம்சனை விழுத்திக் கொல்லுவார்.

இவ்வளவுடன் கூத்து முடியும். பொழுதும் விடியும்.●

# கொழும்பு காமன்வெல்த் மாநாடு ஒரு மாற்றுப் பார்வை



பின் காலனித்துவ நாடுகளின் அமைப்பான காமன்வெல்த்தின் இருபத்தி மூன்றாவது அரசு தலைவர்களின் மாநாடு கடந்த மாதம் கொழும்பில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. முக்கியமாக அரச தலைவர்களின் மாநாடு இடம்பெற்ற போதிலும் அதனையொட்டி காமன்வெல்த் இளைஞர் பேரவை. பொதுமக்கள் பேரவை. வர்த்தகப் பிரதிநிதிகளின் கூட்டம் போன்றவையும் கொழும்புக்கு வெளியே வெற்றிகரமாக இடம் பெற்றன என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த அரச தலைவர்களின் மூன்று நாள் மாநாட்டில் ஒன்பது நாடுகளின் ஜனாதிபதிகளும் 15 நாடுகளின் பிரதமர்களும் பங்குபற்றினர். மொத்தம் இருபத்திநாலு நாடுகளின் அரச தலைவர்கள் மட்டுமே பங்குபற்றினர்.

சுமார் 54 நாடுகள் பங்கு வகித்த காமன்வெல்த் அமைப்பிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் ஆபிரிக்க நாடான காம்பியா விலகிக்கொண்டது. சுமார் 53 நாடுகளில் 24 நாடுகளின் அரச தலைவர்கள் மட்டுமே பங்குபற்றினர். 5 நாடுகளின் உப ஜனாதிபதிகளும் வந்திருந்தனர். பதினொரு நாடுகள் தமது வெளிவிவகார அமைச்சர்களை அனுப்பி வைத்திருந்தன. ஏனைய நாடுகள் வேறு துறைசார் அமைச்சர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் சிரேஷ்ட அதிகாரிகளையும் அனுப்பி வைத்திருந்தன.

அண்மைக் காலங்களில் ஆகக் கூடிய அரச தலைவர்கள் 1999 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க டர்பன் நகரில் இடம்பெற்ற மாநாட்டிலேயே கலந்து கொண்டனர். 1977ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற மாநாட்டில் 42 நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றினர். 2003 ஆம் ஆண்டு நைஜீரியாவில் இடம்பெற்ற மாநாட்டில் 38 நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றினர். மோல்டாவில் 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற மாநாட்டிலும் 38 நாடுகளின் அரச தலைவர்கள் பங்குபற்றினர். 2007ஆம் ஆண்டு உகண்டாவில் நடைபெற்ற மாநாட்டில் 36 நாடுகளின் அரச தலைவர்களும். 2009இல் டொபாக்கோ அன்ட் கினிலாட்டில் நடைபெற்ற மாநாட்டில் 34 அரச தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர். 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் பேர்ட் நகரில் நடைபெற்ற மாநாட்டில் 36 நாடுகளின் அரச தலைவர்கள் கலந்துகொண்டனர்.

2009ஆம் ஆண்டு இலங்கை இறுதி யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் குற்றம்சாட்டி கனடாவும் மொறிசியஸும் அரச தலைவர்களின் மாநாட்டை பகிஸ்கரித்தன. இலங்கை அரசு யுத்தக் குற்றங்களை இழைத்ததாகவும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டில் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரன் மாநாட்டில் பங்குபற்றினார். அரசின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக இடித்துரைப்பதற்காகவே கொழும்பு மாநாட்டில் தான் பங்குபற்றுவதாகவும் அவர் நியாயம் கற்பித்தார். 2015ஆம் ஆண்டு மொறிசியஸில் நடைபெறவிருந்த மாநாட்டை நடத்தப் போவதில்லை என்று அந்த நாடு அறிவித்தது. இலங்கை மீது யுத்தக் குற்றத்தை சுமத்திக்கொண்டே இந்த நியாயத்தை மொறிசியஸ் முன்வைத்தது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டுக்கு வருகை தரவில்லை. வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷிட்டே இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார். தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க.. தி.மு.க. மற்றும் தொல் திருமாவளவன். வைகோ. நெடுமாறன் போன்றவர்கள் விடுத்த அழுத்தமே மன்மோகன்சிங்கை இலங்கை வரவிடாமல் தடுத்தது என்பதே அப்பட்டமான உண்மை. அத்துடன் இந்திய உபகண்டத்தில் செல்வாக்குப் பெற்ற நாடுகளான சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போட்டா போட்டியும் சீனா பக்கம் இலங்கை சாய்வதை தடுக்கும் நோக்குடன் ஒரு தந்திரோபாய அணுகுமுறையை இந்தியா கைக்கொண்டது எனச் சொல்லலாம். ஆகவேதான் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரன் கொழும்பு மாநாட்டில் அளவுக்கதிகமான விமர்சனங்களை மேற்கொண்டார் என்ற பாணியில் இந்தியா கருத்தும் தெரிவித்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் உள்ளக விசாரணை ஒன்றினை நடத்த வேண்டும் என்று டேவிட் கமரன்

கொழும்பு மாநாட்டில் வலியுறுத்தியிருந்தார். எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இந்த விசாரணையை நடத்த இலங்கை தவறுமேயானால் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் என்றும் கமரன் எச்சரித்தார். அதாவது நான்கே நான்கு மாதங்கள் காலக்கெடு விதித்துள்ளார். இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே கமரனின் எச்சரிக்கையாகும்.

இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதிலடி கொடுத்தார். "கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறியக் கூடாது" என்று எச்சரிக்கும் பாணியில் இலங்கை ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருந்தார். கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இலங்கை தனக்கு தேவையான கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். காமன்வெல்த் அமைப்பு குற்றம் சாட்டும் அமைப்பாகவோ அல்லது தண்டனை விதிக் கும் அமைப்பாகவோ இருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக டேவிட் கமரன் வைத்த விமர்சனங்கள் பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை எனவும் இந்தியா கருத்துத் தெரிவித்திருக்கிறது.

ஏற்கனவே 2012ஆம் ஆண்டிலும் 2013ஆம் ஆண்டிலும் ஜெனீவா ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான குற்றப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவே முன் முயற்சி களை மேற்கொண்டது. அடுத்த மூன்று வருடங்களுக்கு இந்த ஐ.நா. மனிதவுரிமைகள் அமைப்பில் அங்கம் வகிப்பதற்கு அமெரிக்கா கடந்த நவம்பரில் தெரிவாகியுள்ளது. 2013ஆம் ஆண்டு அமெரிக்கா வைத்த குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகளும் எதிராக 15 நர்டுகளும் வாக்களித்திருந்தன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டு சர்வதேச விசாரணை கோரப்படுமானால், அதில் நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியமே பெரும்பாலும் உண்டு. இருந்தாலும் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் சற்றுப் பின்வாங்கக்கூடிய சூழல்களும் ஏற்படலாம் என்கிறார்கள் சில விமர்சகர்கள். கடந்த முறை யுத்தக் குற்றப் பிரேரணையை அமெரிக்கா முன்வைத்தபோது அதற்கு இந்தியா ஆதரவாகத் திகழ்ந்தது. எதிர்வரும் மார்சில் குற்றப் பிரேரணை முன்வைக்கப்படுமானால் இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் பின்புலமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

"பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும்" பாணியில் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் செயற்பட்டமையே கடந்த கால வரலாறாகும். 2003ஆம் ஆண்டு ஐ.நாவின் அங்கீகாரம் இல்லாமலேயே



லண்டனிலுள்ள தமிழர் அமைப்புகளுடன் 2013 நவம்பர் 7ஆம் திகதி பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரன் கலந்துரையாடினார்



வடக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் போராட்டம்

சதாம் ஹுசைனின் ஈராக்கிய துருப்புகளை அமெரிக்கத் துருப்புகள் ஆக்கிரமித்தன. இதற்கு அனுசரணையாகத் திகழ்ந்த பிரிட்டன் 45000க்கு மேற்பட்ட துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்பி வைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே பிரிட்டன் துருப்புகளை அனுப்பியது என்பது குறிப்பிடத்தக்கது. ஈராக்கில் அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கொண்ட ஆக்கிரமிப்பின்போது ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஈராக்கிய சிறுவர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர். ஈராக்கில் பிரிட்டன் நிகழ்த்திய அக்கிரமங்களை அம்பலப்படுத்தும் சில்க்கொட் விசாரணை அறிக்கையை இன்றுவரை வெளியிடாமல் பிரிட்டன் காலம் கடத்துவது ஏன்? சில தகவல்கள் வெளிவருமேயானால் அது பிரிட்டனுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் கமரன் சில்க்கொட்டைக் கேட்டுக் கொள்ளவில்லையா?

1970களில் வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் துருப்புகள் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தன.

சிலியில் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சல்வடோர் அலன்டேயின் அரசாங்கத்தை இராணுவச் சதி மூலம் கவிழ்த்த அகஸ்டோ பினோசெட் மேற்கொண்ட மனிதப் படுகொலைகளை பிரிட்டன் ஆதரிக்கவில்லையா? கம்யூனிஸ்டுகள் என்று சந்தேகிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான அப்பாவிகளை எந்தவித பயமோ பச்சாதாபமோ இன்றி பினோசெட் கொன்று குவித்தானே அவனை பிரிட்டன் இறுதிவரை பாதுகாக்கவில்லையா? போக்லன்ட் யுத்தத்தின்போது பினோசெட் பிரிட்டனுக்கு வழங்கிய ஆதரவுக்கு கைமாறாகவே பிரிட்டன் பினோசெட்டின் கொடூரங்களை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஈராக்கை அமெரிக்காவும், பிரிட்டனும் ஆக்கிரமித்தபோது பேரழிவு ஆயுதங்களை சதாம் ஹுசைன் வைத்திருந்தார் என்றுதானே இந்த இரு நாடுகளும் குற்றம் சாட்டின. இன்றுவரை இந்தவிரு நாடுகளாலும் பேரழிவு ஆயுதங்களை ஈராக்கில் கண்டுபிடிக்க முடியாமல் போனது ஏன்?.


1918இல் இலங்கையில் ஊவா. வெல்லஸ பகுதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த சுமார் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களை பிரிட்டிஷ் துருப்புகள் கொன்று குவித்தன. பெண்கள், பிள்ளைகள், முதியோர் என்ற வேறுபாடின்றி அப்பாவி மக்களை வெட்டியும், குத்தியும் தான் பிரிட்டிஷ் துருப்புகள் கொன்று குவித்தன. கொரியா, வியட்னாம், ஆப்கானிஸ்தான் உட்படப் பல்வேறு நாடுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்புக் படைகள் இலட்சோப இலட்சம் மக்களை கொன்று குவிக்கவில்லையா?

இலங்கை மாநாட்டிற்கு கமரோன் வருவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர்தான் லண்டனில் செயற்படும் ஏழு புலிச்சார்பு புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியிருந்தார். "உங்களை நான் கைவிட மாட்டேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்" என்று அவர்களிடம் கூறிவிட்டே பிரிட்டிஷ் பிரதமர் கொழும்பு மாநாட்டிற்கு வந்தார்.

இந்தியா மட்டும் என்னவாம்? இலங்கை தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்கள், ஆயுதப் பயிற்சி, பணம் எல்லாம் கொடுத்ததும் இந்தியாதான். 1987ஆம் ஆண்டு வடமராட்சி ஒப்பரேசன் நடவடிக்கையை ஜே.ஆர் அரசாங்கம் மேற்கொண்டபோது இலங்கையின் வான் பரப்பிற்குள் அத்துமீறி புகுந்து இந்திய விமானங்கள் பருப்பும் சீனியும் போட்டன. இந்திய இராணுவம் இலங்கையின் வடக்குக் கிழக்கில் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தது. பல பெண்களை பாலியல் வல்லுறவு செய்ததுடன் பல்லாயிரக் கணக்கான தமிழ் பெண்களை மானபங்கப் படுத்தியது. இரத்தக் கறை படிந்த இந்திய, அமெரிக்கப் படைகள்தான் இன்று அகிம்சாமூர்த்தி வேடம் புனைய முனைகின்றன.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதிக் கட்டத்தை எட்டியபோது அப்போதைய பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட்டும் பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சர் பேர்னாட் குச்சரும் கூட்டாக இலங்கைக்கு காவடி எடுத்து வந்து யுத்தத்தை நிறுத்துமாறு கூறினார்கள். இலங்கை அரசாங்கம் அவர்களின் முகத்தில் கரி பூசித் திருப்பி அனுப்பியது. பிரிட்டனில் தொழிற்கட்சியின் செல்வாக்கு மிக்க தொகுதிகளில் புலம்பெயர் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இலங்கைக்கு விஜயம் செய்து யுத்த நிறுத்தத்தைக் கோரினார் என்பதை டேவிட் மிலிபான்ட் ஒத்துக் கொண்டிருந்தார். இதனை விக்கிலீக்ஸ் அண்மையில் அம்பலப்படுத்தியிருந்தது.

கொழும்பு காமன்வெல்த் மாநாட்டில் உரையாற்றிய



நேசப்படைகளின் குண்டு வீச்சில் கால்களை இழந்த ஆப்கான் சிறுவர்களில் ஒருவன் இவன்

அழிவடைந்த ஈராக்கிய நகரம்





யுத்த அவலத்துள் அநாதரவான ஈராக்கிய சிறுமி

சிங்கப்பூரின் வெளிவிவகார மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.கே.சண்முகம் இலங்கைப் பிரச்சினையை மிகக் கச்சிதமாகச் சுட்டிக் காட்டினார்.

"யுத்தத்திற்குப் பிந்திய நல்லிணக்கம் என்பது எவருடைய தொண்டைக்குள்ளும் பலாத்காரமாகத் திணிக்கும் ஒரு விவகாரமல்ல. அரசியல் நல்லிணக்கம்

வெளிச் சக்திகளால் வலிந்து திணிக்கப்படக் கூடாது" என்று மிகச் சரியாகவே சுட்டிக் காட்டினார்.

இப்படியெல்லாம் சொல்வதால் இலங்கை அரசினதோ அல்லது இராணுவத்தினதோ நடவடிக்கைகள் சகலதையும் நியாயப்படுத்த முடியாது. இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல யுத்தம் இடம்பெற்ற மூன்று தசாப்த காலத்திலும் அத்துமீறல்களும் வக்கிரச் செயற்பாடுகளும் நிறையவே இடம்பெற்றிருக்கின்றன. யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட அரச படைகளும் புலிகளும் மிக மோசமான அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. வீரமிக்க படையினர் என்று துருப்புகளை அரசாங்கமும் மாவீரர்கள் என்று புலிகள் தம்மவர்களையும் அழைத்துக்கொண்டனர். படையினர் வீரமிக்கவர்களும் அல்லர் புலிகளும் மாவீரர்கள் அல்லர். இரு தரப்புகளுமே அப்பாவி மக்களை வேட்டையாடிய அக்கிரமங்களின் கதாநாயகர்கள்.

1951ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் மேற்கொள்ளத் தொடங்கிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், 1956இல் அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் 1956ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எட்டுக்கும் மேற்பட்ட இனப் படுகொலை நடவடிக்கைகள், 1983 ஜூலையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆசீர்வாதத்தோடு மேற்கொள்ளப்பட்ட இனசங்காரம் போன்ற இன்னோரன்ன கொடூரங்களும்தான் புலிகள் அமைப்பு போன்ற கொடூர கொலைக் குழுக்கள் இலங்கையில் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணம்

யாழ் நூலக எரிப்பு, மைலந்தனை படுகொலை, கொக்கட்டிச் சோலை படுகொலை, வவுனியா படுகொலை, மூதூர் படுகொலை போன்ற இன்னும் பலவற்றை வீரமிக்க சிங்களப் படையினர்தான் மேற்கொண்டார்கள். தலதா மாளிகைத் தாக்குதல், அரந்தலாவ படுகொலை, பஸ்கள் ரயில்கள் மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, வடக்கு முஸ்லிம்களின் பலாத்கார வெளியேற்றம் போன்ற இன்னும் பலவற்றை தமிழ் மாவீரர்கள்தான் மேற்கொண்டார்கள். ஆயுதம் ஏந்தாத அப்பாவி மக்களைத்தான் இரு தரப்புகளுமே ஏட்டிக்குப் போட்டியாக வேட்டையாடின.

1951ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் மேற்கொள்ளத் தொடங்கிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், 1956இல் அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் 1956ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எட்டுக்கும் மேற்பட்ட இனப் படுகொலை நடவடிக்கைகள், 1983 ஜூலையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆசீர்வாதத்தோடு மேற்கொள்ளப்பட்ட இனசங்காரம் போன்ற இன்னோரன்ன கொடூரங்களும்தான் புலிகள் அமைப்பு போன்ற கொடூர கொலைக் குழுக்கள் இலங்கையில் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணம் என்பதை நிராகரிக்க முடியாது.

படையினர் வீரமிக்கவர்களும் அல்லர் புலிகளும் மாவீரர்கள் அல்லர். இரு தரப்புகளுமே அப்பாவி மக்களை வேட்டையாடிய அக்கிரமங்களின் கதாநாயகர்கள்

இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தானதென்று இனவாதக் கூச்சல் போட்டுக்கொண்டே புனிதர்கள் என்று தங்களைக் காட்டிக்கொண்டு காவியுடை தரித்த தேரர்கள் பலர் இன்று சந்திக்கு வந்து சத்தம் போடுகிறார்கள். பொதுபல சேனா, ராவண பலய, ஹெல உருமய போன்ற இனவாத மதவாத அமைப்புகள் இன்று காட்டுக் கூச்சல் போடுகின்றன. சிங்களப் பகுதிகளில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள் இந்து ஆலயங்கள் தாக்கித் தகர்க்கப்படுகின்றன.

போதாக் குறைக்கு, புலிகளை விடுதலைப் போராளிகள் என்று புகழ்பாடும் அளவுக்கு தமிழ் எம்.பிக்கள் என்று கூறப்படும் சிலர் தரம் தாழ்ந்து போயிருக்கிறார்கள். மீண்டும் அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை இன மத வெறி நெருப்பிற்குள் பொசுக்குவதற்கான முயற்சிகள் ஏராளம், தாராளமாக இடம்பெறுகின்றன.

இந்த நிலையில்தான் கொழும்பு காமன்வெல்த் மாநாட்டிற்கு வருகைதந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமா இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்புகளுக்கும் பயன்மிக்க ஆலோசனையொன்றை முன்வைத்துச் சென்றிருக்கிறார். அவர் தென்னாபிரிக்கப்பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அவசியம் பற்றி வலியுறுத்தியிருந்தார். இது நல்லதொரு யோசனை தான். உண்மைகளைக் கண்டறிவதற்கும் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடுகளை வெளிக் கொணர்வதற்கும் இது நல்லதொரு யோசனை என்பதை மறுக்க முடியாது. இருந்தும் கடந்த காலங்களில் எமது நாட்டில் நியமித்த ஆணைக்குழுக்கள் எல்லாம் வெறும் கடதாசி அறிக்கைகளோடு காணாமல் போயிருக்கின்றன. கடந்த காலங்களைப் போலல்லாமல் உண்மைகள் அப்பட்டமாக வெளிக் கொணரப்பட வேண்டுமானால் பிரச்சினைக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பது தேவையானால் அரசாங்கம் நேர்மையோடு செயற்பட வேண்டும். தமிழர் தரப்புகளும் நல்லிணக்க நோக்கோடு செயற்பட வேண்டும்.

அமரர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் வைத்த நல்ல பல யோசனைகள் இன்னமும் கிடப்பிலேயே போடப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தை சேர்ந்தவர்களை வைத்து விசாரணை நடத்த முயல்வதாக அரசு தரப்பில் யோசனை முன்வைக்கப்படுகிறதாம். இராணுவம் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருக்கும் ஒரு தரப்பு. இராணுவமோ புலிகளோ நடத்தும் ஒரு விசாரணை நீதியாக இருக்க முடியாது. இனவெறிச் சக்திகள் எந்தத் தரப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவை அடக்கப்பட்டு நீதியான விசாரணைகளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத வரை பிரச்சினைகள் தீரப்போவதில்லை◆

# ஆயுத கலாசாரத்தின் பின்விளைவுகள் இன்னும் மக்களைப் பலியெடுக்கின்றன

அமலியானைசன் அருண்

மூன்று தசாப்தகால யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்களுக்கு மேல் கடந்துவிட்டன. இருந்தாலும் யுத்தம் விட்டுச் சென்ற வலிகளும் வடுக்களும் இன்னமும் அப்பாவி மக்களை வருத்திக்கொண்டே இருக்கின்றன. வடுக்களுக்கும் வலிகளுக்கும் மட்டுமல்ல யுத்தக் கலாசார பின் விளைவுகளுக்கும் அப்பாவி மக்கள் அதிக விலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் மையம் கொண்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல நாடு பூராவுமே ஆயுத கலாசாரம் மக்களை துயர வெள்ளத்திற்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது.

யுத்தம் அரச படைகளுக்கும் புலிகளின் ஆயுததாரிகளுக்கும் இடையில்தான் இடம்பெற்றது. அரச படைகளைப் பொறுத்த வரையில் நூற்றுக்கு 99 சதத்திற்கு மேற்பட்டவர்கள் சிங்களவர்கள். புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு 100 சதவிதமும் தமிழர்கள்தான். யுத்தங்கள் நடைபெறுவது களமுனைகளில் மட்டுமல்ல அங்கு இங்கு என்றில்லாதபடி எங்குமே நடைபெறுகின்றன. காரணம் கெரில்லா தாக்குதல்களும் கெரில்லாக்களை அழிக்கும் பாணியில் அரச படைகள் நடத்தும் தாக்குதல்களும்தான். எதிரிகளை அழிப்பது அல்லது எதிரிகளின் ஆயுத சக்திகளைப் பலவீனப்படுத்துவதே யுத்தத்தின் அடிப்படை நோக்கமாகும். சரியான அரசியல் தலைமையும் மக்கள் மீதான மனித நேயமும் கொண்டிராத எந்த ஆயுத சக்தியும் அத்துமீறல்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டுக்கொண்டே இருக்கும். இலங்கை யுத்தத்திலும் இதுதான் நடைபெற்றது. மனித உரிமைகள் மீறல்கள் பற்றி வாய் கிழியக் கத்தும் பெரிய நாடுகளும் மனித உரிமை மீறல்களைச் செய்து வருகின்றன.

யுத்தத்தோடு எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களை புலிகள் இயக்கமும் பலியெடுத்திருக்கிறது அரச படையினரும் பலியெடுத்திருக்கிறார்கள். இனத்துவ முரண்பாடு இலங்கை யுத்தத்தின் அடிப்படைக் காரணம் என்பதால் இந்தப் பலியெடுப்புகள் தங்கு தடையின்றி பல இடங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன.

களமுனையில் போராடிய அரச படையினர் என்றாலும் சரி புலிகளின் போராளிகள் என்று கூறப்படுவோர் என்றாலும் சரி இவர்களில் பெரும்பான்மையினர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். யுத்தம் முடிவடைந்த பின்னரும் இவர்களில் அநேகமானோர் ஆயுத கலாசாரத்திற்கு பழக்கப்பட்டுவிட்டதால் இன்றுங்கூட வக்கிர மனோபாவத்தோடுதான் வாழ்ந்து வருகிறார்கள். இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள், இராணுவத்திலிருந்து விலகியவர்கள், புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள்தான் இன்று நாடெங்கும் நடைபெறும் வன்செயல் சம்பவங்களுக்கு காரணிகளாகத் திகழ்கிறார்கள். பொருளாதாரப் பிரச்சினைகள், விரக்தி உரிய தொழில்வாய்ப்பின்மை உட்பட பல்வேறு சமூகக் காரணிகள் இந்த வக்கிர மனம் படைத்தவர்களை குற்றச் செயல்களில் ஈடுபட உந்தித் தள்ளுகின்றன. நாடெங்கும் நடைபெறும் பெரும்பாலான கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற வன்செயல்களில் இவர்கள்தான் ஈடுபடுகிறார்கள்.

அநுராதபுரத்திலுள்ள ஹல்துமுல்ல என்ற கிராமத்தில் கொள்ளை அடிக்கச் சென்ற இராணுவ வீரர் ஒருவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை வெட்டியும் குத்தியும் கொன்றிருக்கிறார். கொல்லப்பட்டவர்களில் இருவர் சிறு பிள்ளைகளாவர். கடந்த நவம்பர் முதல் வாரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மூன்றரை இலட்ச ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் தப்பிச் சென்றிருக்கிறார். இவ்வாறான சம்பவங்கள் வடக்கிலும் இன்று தாராளமாகவே இடம்பெற்று வருகின்றன. இந்த வருடத்தின் நவம்பர் மாதம் மட்டும் நாடெங்கும் 16 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்கிறார் பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண.

2012ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் வரையான ஒரு வருட காலப் பகுதிக்குள் நாட்டில் பல்வேறு இடங்களில் 599 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் 16 சம்பவங்களில் இராணுவத்தை விட்டுத் தப்பிச் சென்றவர்களும் இன்னமும் சேவையில் இருக்கும் இராணுவத்தினரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

இக்காலப் பகுதியில் நாடெங்கும் இடம்பெற்ற மொத்தம் 2295 பாலியல் வல்லுறவு சம்பவங்களில் 78இல் முன்னாள் இந்நாள் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளனர். குறித்த

ஒரு வருட காலப் பகுதிக்குள் நாடெங்கும் மொத்தம் 5650 திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் 52 சம்பவங்களில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டு சட்டத்தின் பிடியில் சிக்காத இராணுவ வீரர்களும் இருக்கவே செய்கின்றனர். சுமார் 60 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடி இருக்கிறார்கள். இவர்களில் பிடிபட்ட 40ஆயிரம் பேர் மட்டுமே உரிய நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்னமும் பிடிபடாமல் 20ஆயிரம் பேர் டிமிக்கி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த 20ஆயிரம் பேரும் குற்றச் செயல்களில் ஈடுபடக் கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண. கடந்த 10ஆம் திகதி கூட வவுனியா கலபொஸ்காவெவ என்ற சிங்களக் கிராமத்தைச் சேர்ந்த 14வயது சிறுமியொருவரை வல்லுறவுக்குள்ளாக்கிய இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இராணுவத்தினர் மட்டுமல்ல முப்படையினரைச் சேர்ந்தவர்களும் பொலிசாரும்கூட குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள், ஈடுபடுகிறார்கள். நவம்பர் மாத மத்திய வாரத்தில் நுவரெலியா பேதுருகாலதால மலை உச்சியில் உள்ள காவலரண் ஒன்றில் கடமையிலிருந்த விமானப் படை வீரர் ஒருவர் சக விமானப்படை வீரர் ஒருவரை சுட்டுக்கொன்றுவிட்டு அதே ரைபிளாலேயே தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். தனிப்பட்ட தகராறே இதற்குக் காரணம் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. நவம்பர் மாதம் 3ஆம் வாரத்தில் தென்பகுதியைச் சேர்ந்த கம்பிறுப்பிட்டிய என்ற இடத்திலுள்ள குற்றச் செயல்கள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் அவரது மனைவியையும் கும்பல் ஒன்று வீட்டிற்குள் புகுந்து நள்ளிரவு வேளையில் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுவிட்டது. ஹக்மல என்ற கிராமத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. கொலையாளிகள் மூவரும் போதைவஸ்து கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள். பழிவாங்கும் நோக்கிலேயே இந்த பொலிஸ்காரரும் மனைவியும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பொலிஸ் காவலில் இருந்தபோதே மூன்று சந்தேக நபர்களும் மரணமடைந்துள்ளனர். பொலிசார் வழமைபோலவே கதை அளந்துள்ளனர். மூவரும் தப்பியோட முனைந்தபோது சூடு பட்டு அல்லது நீரில் மூழ்கி மரணித்துள்ளனர் என்று பொலிசார் தம்மை நியாயப்படுத்தியுள்ளனர்.

தலங்கம என்ற இடத்திலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மூன்று பொலிஸ்காரர்களும் இரகசிய பொலிஸ் விசாரணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பைச் சேர்ந்த கோடீஸ்வரப் பெண்மணியொருவர் ஒப்பந்த அடிப்படையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பணத்திற்காக இன்ஸ்பெக்டரின் கொலைத் தகவலை மறைத்ததற்காகவே இந்த நான்கு பொலிஸ்காரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கொலை பற்றிய மர்மம் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அம்பலத்துக்கு வந்தது.

இதே பாணியில் புலிகளும், ஏனைய ஆயுதக்குழுக்களும் சக்தி மிக்கவர்களாக இருந்த காலப்பகுதியில் பல குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. புலிகள்



பிறந்தவுடன் கழுத்து நெரித்து கொல்லப்பட்ட சிசு



கொலையுண்டு கிடக்கும் ஒருவரின் விசாரணை

அழித்தொழிக்கப்பட்டு விட்டனர் என்று கூறப்படும் நிலையிலும் அதன் மிச்ச சொச்சங்கள் எச்சங்களாக இன்னும் தொடரவே செய்கின்றன.

கொள்ளை அடிக்க வருபவர்கள் எந்தவித தயக்கமுமின்றி கொலைகளையும் செய்கிறார்கள். குற்றம் புரிபவர்களை சட்டம் தண்டிக்கட்டும் என்ற எண்ணங்கள் மாற்றப்பட்டிருப்பதால் சாதாரண மக்களும் பழிவாங்கும் எண்ணத்துடன் நடந்துகொள்கிறார்கள்.

ஆயுத கலாசாரம், ஆயுதம் ஏந்தியவர்களை மட்டுமல்ல ஆயுதம் தரிக்காத மக்கள் மத்தியிலும் வக்கிர உணர்வுகளை வளர்த்து விட்டிருக்கிறது. அந்தளவுக்கு ஆயுத கலாசாரம் முப்படையினரையும் பொலிசாரையும் முன்னாள் புலிகளையும் குற்றச் செயல்களுக்கு பழக்கப்பட்ட கேடிகளையும் வளர்த்துவிட்டிருக்கிறது.

# மீண்டுமொரு கிளர்ச்சிக்கு இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தால் நாமே அதற்குப் பொறுப்பு: - அமைச்சர் டலஸ்

வடக்கில் மீண்டும் இளைஞர்கள் சயனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்து கொண்டு கிளர்ந்தெழுந்தால் அதற்கு நாமே பொறுப்பு அதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. இளைஞர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு புரிகின்ற மொழியில் அவர்களுடன் பேச வேண்டும் என இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாம் இதற்கு முன்னர் வடக்கிலும் தெற்கிலும் மூன்று கிளர்ச்சிகளுக்கு முகம் கொடுத்திருக்கிறோம். இது எதனால் ஏற்பட்டது என்பதையும் நாம் அறிவோம்.

இந்நிலையில் வடக்கில் இளைஞர்கள் மீண்டும் சயனைட் குப்பிகளை கழுத்தில் அணிந்தாலோ தெற்கில் இளைஞர்கள். "வாழ்வதை விட சாவதே மேல்" என சுவர்களில் எழுத ஆரம்பித்தாலோ என்னை பிரதானமாகக் கொண்டு நாம் அனைவரும் அதற்கு பொறுப்பாளிகளாக இருப்போம் என்றும் கூறினார். இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பும் சகல அரசியல்வாதிகளும் அமைச்சரின் கூற்றை சிரமேல் கொண்டு செயற்பட முன்வர வேண்டும். செயற்பாட்டுக் குழுவிற்கு தலைமை வகிக்க வேண்டியவர்களும் அவர்களே.

## வெளிநாடு செல்வோர் தங்க நகைகள் எடுத்துச் செல்ல புதிய கட்டுப்பாடுகள்

வெளிநாடு செல்பவர்கள் தங்க நகைகள் எடுத்துச் செல்வது தொடர்பில் புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பிரஜைகள் தமது பயணப் பொதிகள். ஆவணங்கள். அணிந்து செல்லும் நகைகள் தவிர வர்த்தக நோக்கத்துடன் நகைகளோ பொருட்களோ எடுத்துச் செல்வது, கடந்த வாரம் முதல் தடுக்கப்பட்டுள்ளது. திரும்பி எடுத்து வரும் அடிப்படையிலே பொருட்களை கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட இருப்பதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இதற்கு முன்னர் 5 முதல் 15 பவுண் வரை தங்கம் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் தங்கத்தின் விலை குறைந்துள்ளதால் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு தங்கம் கடத்தும் நடவடிக்கைகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதன் காரணமாகவே இப் புதிய விதிமுறை அமுலாகியுள்ளது.

## முஸ்லிம் கடையின் முன்னால் பிரித் ஓதினர் பொதுபல சேனா தேரர்கள்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான அழகுசாதனப் பொருட்களை விற்பனை செய்யும் கடையில் புத்தரின் உருவ சித்திரம் கொண்ட கையுறைகளை விற்பனைக்காக வைத்திருந்தமை தொடர்பாக ஆத்திரம் கொண்ட பௌத்த தேரர்கள் ஏற்படுத்திய பிரச்சினையை அடுத்து சில தினங்களாக மூடியிருந்தது.

குறித்த கடையை கடந்த சனிக்கிழமை மீண்டும் திறக்க முற்பட்ட போது பௌத்த தேரர்கள் அந்த முஸ்லிம் கடையின் முன்பாக பிரித் ஓதும் ஒலி நாடாவை ஒலிக்கவிட்டனர். இதன் போது அந்த கடையிலும் அயலிலும் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டமை ஒலிபெருக்கி மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் அந்த வர்த்தக நிலையம் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## 12000 தோட்டத் தொழிலாளர்களின் ரூ.1888 மில்லியன் வழங்கப்படவில்லை

- மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மலையகத்தைச்சேர்ந்த சுமார் 12 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் சேவைக்கால கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் ஒத்துழைப்பு சங்கத்தின் சார்பிலேயே கண்டி மனித உரிமை ஸ்தாபனத்தின் தலைவர் சிவப்பிரகாசம் தலைமையிலான குழுவினரால் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவாக ரூ.1888 மில்லியன் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவசம. பெருந்தோட்ட யாக்கம் மற்றும் எல்கடுவ பிளான்டேசனைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகளே வழங்கப்படவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தில் விசேட நெறிமுறைகள்

டிசம்பர் மாதம் 16ஆம் திகதி சிவனொளிபாதமலைக்கான யாத்திரைக் காலம் ஆரம்ப மாகவுள்ள நிலையில், சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பக்தர்களுக்காக விசேட நெறி முறைகளை பொலிஸார் அறிமுகப் படுத்தியுள்ளனர்.

டிசம்பர் முழு பௌர்ணமியன்று யாத்திரை காலம் ஆரம்பித்து 2014ஆம் ஆண்டு மே மாதம் முழு பௌர்ணமியுடன் யாத்திரைக் காலம் முடிவடையும். இந்தக் காலப்பகுதியில் பெருமளவிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பக்தர்களும் பார்வையாளர்களும் சிவனொளிபாதமலைக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதாக பொலிஸார் தெரிவித்து ள்ளனர்.

வாகனச் சாரதிகள் மற்றும் வருகை தருவோர் எவரும் மதுபானம் அருந்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ள பொலிசார், எந்தவித இசைக்கருவிகளையும் கொண்டு வரவேண்டாம் எனவும் கூறியுள்ளனர். மேலும், பக்தர்கள் நேர்த்தியான ஆடைகளை அணிந்து கொண்டு வந்து நன்நடத்தையுடன் ஒழுகவேண்டும் எனவும் பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தங்களது பிள்ளைகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் நடந்துகொள்ளுமாறும் பெற்றோரிடமும் பாதுகாவலர்களி டமும் பொலிசார் கேட்டுக்கொண் டுள்ளனர்.

ஹட்டன், நோர்வூட், மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணி வீதி வழியே மலைக்குச் செல்லுமாறும் பின்னர் அங்கிருந்து மௌசாக்கலை நோர்ட்டன் பாலம், ஹட்டன்-கொழும்பு வீதி வழியாக திரும்பு மாறும் பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், பாதுகாப்பற்ற நீரோடைகள் ஆகிய வற்றில் குளிப்பதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸ்துறை யினரால் அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

## அம்பாறையில் 16 ஆவது பல்கலைக்கழகம் ஆரம்பம்

அடுத்த வருட முற்பகுதியில் அம்பாறை நகரில் இருக்கும் ஹாடி தொழில் நுட்பக் கல்விக் கல்லூரி இலங்கையின் 16 ஆவது பல்கலைக்கழகமாக செயற்படவிருக்கிறது.

இந்தக் கல்லூரி வளாகத்தில் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் போது 173 ஏக்கர் பரப்புள்ள பிரதேசத்தில் பல மாடிக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளன. ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக அடுத்த வருட முற்பகுதியில் இது 16 ஆவது பல்கலைக்கழகமாக செயற்படவிருக்கிறது ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி 1959 ஆம் ஆண்டு கல்லோயா அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

## 100 ஆண்டுகளுக்கு முன்னரும் சாரதியின்றி ரயில் ஓடியது

சாரதி எவருமின்றி கடந்த ஐந்தாம் திகதி ரயில் எஞ்சினொன்று தெமட்டகொடையிலிருந்து ரத்மலானை வரை பயணித்ததை எல்லோரும் அறிந்திருப்பீர்கள்.

எனினும், இதுபோன்ற சம்பவமொன்று 1913ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி அதிகாலை 1.45 இற்கு இடம்பெற்றிருப்பதாக ரயில்வே ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ரயில் மூன்றரை மைல் தூரம் பயணித்துள்ளது. அன்று நடந்த சம்பவத்தை அப்போது மூன்று சதத்திற்கு விற்பனையான "தினமின" பத்திரிகை முன்பக்கச் செய்தியாக வெளியிட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான நம்ப முடியாத அதிசயமும் எமது நாட்டில் நடந்துள்ளது.

## இலங்கையின் தேசியக் கொடியிலுள்ள சிங்கம் தான் பிரச்சினை

இலங்கையின் தேசியக் கொடி மாற்றியமைக்கப்பட வேண்டும் என நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கும் சிங்கம் நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக விவசாயி ஒருவரின் உருவமோ வேறு பொருத்தமான உருவமோ பொறிக்கப்பட வேண்டும் என விக்ரமபாகு குறிப்பிட்டார்.

இன நல்லிணக்கம் ஏற்படுவதற்கு தேசியக் கொடி, தேசிய கீதம் என்பனவும் உறுதுணையாக அமையும் என்பதை பலரும் வலியுறுத்தி வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 30 வருடங்களுக்குப் பின்னர் சிங்கப்பூரில் வன்செயல்

சிங்கப்பூரில் லிட்டில் இந்தியா என அழைக்கப்படும் பிரதேசத்தில் இந்திய பிரஜை ஒருவர் தனியார் பஸ் ஒன்றில் மோதுண்டு மரணமானார். இச் சம்பவத்தைக் கண்டித்து பாரியளவிலான ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதில் 400 வெளிநாட்டு பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் வன்செயலில் ஈடுபட்டு பொலிசார் மீதும் தாக்குதல் நடத்தினர்.

சிங்கப்பூரில் 30 வருட இடைவெளிக்குப் பின்னர் இடம்பெறும் முதலாவது வன்செயல் சம்பவம் என்று சிங்கப்பூர் பொலிஸ் ஆணையாளர் என்.ஜி.ஜோ தெரிவித்துள்ளார். வன்செயலில் 18 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மா சே துங்கின் கொள்கைகளுடன் முரண்படும் இன்றைய சீனா

சீனவைக் கட்டியெழுப்பிய மக்கள் தலைவர் மா சே துங்கின் 120ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்முகமாக மாபெரும் இசைநிகழ்ச்சி சீனத் தலைநகரில் ஏற்பாடாகியிருந்தது. எனினும் பின்னர் அது புத்தாண்டு கொண்டாட்டமாக வர்ணிக்கப்படுவதன் கருத்து என்ன? என்பது பற்றி உலக அரசியல் தலைவர்கள் ஆராயத் தொடங்கியுள்ளார்கள்.

# இலங்கையில் மர்மமான சிறுநீரக நோய் பரவ ஐ.நா.வே காரணம்!

மர்மமான சிறுநீரக நோய் ஒன்று இலங்கையில் சுமார் ஐந்து லட்சம் மக்களுக்கு பரவக் காரணமாக இருந்ததாக ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் மீது இலங்கையின் சிவில் சமூக அமைப்பு ஒன்று புகார் செய்துள்ளது.

"பல்தேசிய நிறுவனங்களின் சார்பில் ஐ.நா உணவு மற்றும் விவசாய நிறுவனம், விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையை ஊக்குவித்ததாக வளர்ச்சிக்கான செயற்பாட்டுக் குழுவான வூந ஞுநயசயெ ர்யளெய குழரனெயவழைெ என்னும் அமைப்பு கூறுகிறது. இதேவேளை, மூன்று வகையான இரசாயனங்களை தாம் தடைசெய்துள்ளதாக இலங்கை விவசாய அமைச்சு கூறியுள்ளதாகவும் பி.பி.சி. தெரிவித்துள்ளது.

அதன் விஷத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அந்த சிவில் சமூக அமைப்பு கோரியுள்ளது. ஐ.நா உணவு மற்றும் விவசாய நிறுவனம் அந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது.

## மீள்குடியேற்றத்தை எதிர்க்கும் பொன்தீவு கண்டல் கிராம மக்கள்

மன்னார், நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள பொன்தீவுகண்டல் கிராமத்தில், மீள் குடியேற்றக் காணி பகிர்ந்தளித்தலில் அதிருப்திகள் ஏற்பட்டுள்ளன. கிராமத்தின் காணிகளை இரண்டாகப் பிரித்து முஸ்லிம்களுக்கும், கிராம மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், கிராம மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் முரண்பாடுகள் நீடித்து வருகின்றன. இந்நிலையில், பொன்தீவு கிராமத்தில் பொலிசாரின் பாதுகாப்புடனேயே முஸ்லிம் மக்களின் வீடமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## இராணுவ வீரருக்கு ஆனையிறவு தட்டுவன்கொட்டியில் சிலை


1991ஆம் ஆண்டு புலிகள் ஆனையிறவு படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். அந்த சண்டையின்போது பெரும் உயிரழிவைத் தடுத்த இராணுவ வீரரான காமினி குணரத்ன என்ற இராணுவ வீரருக்கே ஆனையிறவில் படையினரால் சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு படைத்தளத்தை அழிக்க வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட இராணுவ டாங்கியினை புலிகள் அனுப்பியிருந்தார்கள். அந்த டாங்கியினை தட்டுவன்கொட்டியில் தடுத்து நிறுத்தியபோது உயிரிழந்தவரே குறிப்பிட்ட இராணுவ வீரராவார்.

## அரியநேந்திரன் குற்றம் சாட்டுகிறார் – மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம், கிழக்கு மாகாணம் தொடர்பான அக்கறை குறைந்து வருவதாக அக்கட்சியின் பா. அரியநேத்திரன் எம்.பி. குற்றஞ்சாட்டுகின்றார்.

"வடக்கு மாகாண சபை தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடனான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்து தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருந்தது"

எனினும் "குறிப்பாக, வடக்கு மாகாண முதலமைச்சர் தன்னை சந்திக்கும் ராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் வட மாகாணத்தையே முதன்மைப்படுத்திப் பேசுகின்றார். சில சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூட வடக்கை முதன்மைப் படுத்தியே இத்தகைய சந்திப்புகளில் பேசியிருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது" என்றும் அவர் தெரிவிக்கின்றார்.



அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா

மண்டேலா இறந்த பின்னர் ஏற்பட்ட உறவு. 60 வருடங்களின் பின்னர் கை குலுக்கிக் கொண்ட அமெரிக்காவும் கியூபாவும்.

## மலசலகூடம் கழுவும் திரவத்தில் தக்காளி சோஸ் கண்டுபிடிப்பு

மனித பாவனைக்கு உதவாத 2000 லீற்றர் தக்காளி சோஸ், 1000 கி.கிராம் மிளகாய்த்தூள், 500 கி.கிராம் மஞ்சள் தூள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் பலவற்றை கொழும்பு, கொம்பனி வீதியில் அமைந்துள்ள உற்பத்தி தொழிற்சாலை ஒன்றிலிருந்து கைப்பற்றியதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சோளமா மற்றும் சிவப்பு நிறச் சாயம் கலக்கப்பட்ட மிளகாய்த்தூள், சுயிங்கம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பசையொன்றுக்கு ஆடைகளுக்கு இடப்படும் நிறச்சாயம் கலக்கப்பட்டு தக்காளி சோஸ், மலசலகூடம் மற்றும் பீங்கான்களை துப்புரவு செய்யப் பயன்படுத்தப்படும் திரவமொன்றில் தயாரிக்கப்பட்ட தக்காளி சோஸ் போன்றனவே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக அதிகாரசபை மேலும் குறிப்பிட்டது.

# இராணுவம் நிலைகொண்டிருப்பதே முக்கிய பிரச்சினை

– வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

"வலி. வடக்கில் 6.000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமை தொடர்பிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் எவ்வளவு, எவ்வளவு ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து இராணுவம் பயன்படுத்தி வருகின்றது என்பது தொடர்பிலும் எடுத்துக் கூறியிருந்தேன்." என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரையும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் சந்தித்துக் கலந்துரையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.



கியூப அதிபர் ரவுல் காஸ்ரோ

## யாழ் குடாநாட்டில் கட்சி அலுவலகங்களில் மாற்றம், திடீர் நடவடிக்கை அல்ல

ஈ. பி. டி. பி. விளக்கம்

நெடுந்தீவிலிருந்து எமது அலுவலகம் நீக்கப் பட்டதையும், யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் உள்ள எமது அலுவலகங்களில் சிலவற்றை எதிர்காலத்தில் அகற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதையும் திடீர் நடவடிக்கையாகவோ அவசர நடவடிக்கையாகவோ நாம் முன்னெடுக்கவில்லை. நீண்ட காலமாகவே எமது அலுவலகங்களை ஒழுங்கமைப்பது மற்றும் கட்சியின் கட்டமைப்பை மீள் ஒழுங்கு செய்வது என்ற எமது ஆய்வுகளும், ஆதரவாளர்களின் அபிப்பிராயங்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இடையில் தேர்தல் வந்ததாலும் குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்த அரசியல் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டிய தேவை இருந்ததாலும் எமது சீரமைப்புச் செயற்பாடுகள் கால தாமதமடைந்திருந்தன. தற்போது மாறியிருக்கும் அரசியல் சூழலையும் நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட கட்சியின் செயற்பாடுகளின் மறுசீரமைப்புக்கான தேவையையும் கவனத்தில் கொண்டு மாற்றங்களை ஒழுங்கு செய்வதையும் உள்ளக நிர்வாகக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்வதையும் கட்சி செயற்படுத்தவுள்ளது. அதன் ஒரு நடவடிக்கையாகவே நெடுந்தீவு அலுவலகம் மூடப்பட்டதும் தீவகத்திலுள்ள சில அலுவலகங்களை அகற்றிக் கொள்வதற்கான திட்டமுமாகும்.

எமது கட்சியின் திட்டங்களும் நடவடிக்கைகளும் எமது மக்களுக்கான நலன்களில் இருந்தும் எமது அரசியல் கொள்கைகளுக்கு வலுச் சேர்க்கும் விதமாகவுமே இருக்கும் எனவும் அண்மையில் ஈ.பி.டி.பி. கட்சியினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்களை பஸ் நடத்துனர்களாகவும் சாரதிகளாகவும் பார ஊர்திகளின் நடவழக்கைகளை நியமிப்பதற்கான முன்னெடுக்கவுள்ளதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

### பொதுப் போக்குவரத்து பஸ்களில் பெண் நடத்துநர்கள் போதுமா? பெண் சாரதிகளும் வேண்டும்!

# உளவுத்தகவல் திரட்டல்:

## அமெரிக்காவைத் தொடர்ந்து சீனா, கனடா மீதும் குற்றச்சாட்டு

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்புக்காக, உலக நாடுகள் பலவற்றை கனடா உளவு பார்த்தது என்று ஆவணங்களில் இருந்து திடுக்கிடும் தகவல் தெரியவந்துள்ளது. சிபிசி தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இதுகுறித்து செய்திகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கனடா அரசின் தொலைத் தொடர்பு நிறுவனம், "கனடா தகவல் பாதுகாப்பு நிறுவனம்". சுருக்கமாக இது சிஎஸ்இசி என்று அழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் உளவு பார்க்க முடியாத சில விஷயங்களையும் கனடாவில் உளவு பார்க்கலாம். புவியியல் ரீதியாக கனடாவில் இதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதன் அடிப்படையில் சிஎஸ்இசியுடன் இணைந்து, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்பான என்எஸ்ஏ இருபது நாடுகளை உளவு பார்த்துள்ளது.

இதில் முக்கியமான விஷயம், இந்த நாடுகள், அமெரிக்காவுடன் நெருங்கிய வர்த்தக தொடர்பை வைத்துக் கொண்டிருப்பவை. இந்த விஷயத்தில் தனக்கு நெருக்கமான நாடுகளையும் கூட அமெரிக்கா கனடாவின் தொலைத் தொடர்பு நிறுவனம் மூலம் உளவு பார்த்துள்ளது. இந்நாட்டு தலைவர்களின் மனதில் தோன்றும் எண்ணங்கள் எவை? அந்த நாடுகள் எந்தெந்த நாடுகளுடன் வர்த்தகத்தை மேம்படுத்துகின்றன என்பது தொடர்பாகவும், பல்வேறு ரகசிய தகவல்களையும் திரட்டியுள்ளது.

**உளவு பார்த்து வெறுப்படைந்த அமெரிக்க விற்பன்னர்கள் ஆற்றாமையால் கொட்டித் தீர்க்கிறார்கள்**



அசாஞ்சே – விக்கிலீக்ஸ்



ஸ்னோடன் – கம்பியூட்டர் அதிகாரி, அமெரிக்க புலனாய்வு நிறுவனம்



தோமஸ் ட்ராக்
அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை

இந்த ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதியிடப்பட்ட நான்கு பக்க இரகசிய ஆவணத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் அடங்கியுள்ளன. அதில் உள்ள விஷயங்களை இப்போதைக்கு வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. என்எஸ்ஏவில் உயரதிகாரியாக பணியாற்றிய தாமஸ் டிராக் என்பவர், தற்போது அமெரிக்காவின் உளவு நடவடிக்கைக்கு எதிராக திரும்பியுள்ளார். அவர் கூறுகையில்,

"2010ம் ஆண்டு கனடாவில் நடந்த ஜி20 மாநாட்டின் போது, தலைவர்களின் பேச்சை முழுமையாக அமெரிக்கா ஒட்டுக் கேட்டுள்ளது. இதேபோல் ஜி-8 நாடுகளின் தலைவர்களின் பேச்சையும் ஒட்டுக்கேட்டுள்ளது" என்றார். இந்த செயல்களின் மூலம் தன்னுடைய நட்பு நாடுகளையே அமெரிக்கா உளவு பார்த்துள்ளது ஆதாரத்துடன் தெரியவந்துள்ளது. இவ்வாறு சிபிசி தொலைக்காட்சி கூறியது.

ஏற்கனவே, என்எஸ்ஏ கம்ப்யூட்டர் அதிகாரி ஸ்னோடன் வெளியிட்ட தகவல்களே உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், சிபிசியின் இந்த செய்தி, அடுத்தகட்ட பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கடந்த செப்டம்பர் மாதம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஜி-20 உச்சி மாநாடு நடப்பதற்கு முன்பாக சீன நபர்கள், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் அமைச்சகங்களின் கம்ப்யூட்டர்களில் இருந்து ரகசியமாக உளவுத் தகவல்களை திரட்டியதாக சர்ச்சை எழுந்துள்ளது.

உள்நாட்டில் கிளர்ச்சியாளர்கள் மீது சிரியா இரசாயன தாக்குதல்களை நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்து, அமெரிக்கா அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது. அதேநேரத்தில் பெயர் வெளிக்காட்டப்படாத ஐந்து ஐரோப்பிய நாடுகளிலிருந்து சீனர்கள், கம்ப்யூட்டர் வாயிலாக உளவுத் தகவல்களை திரட்டி உள்ளனர். இந்தச் செய்தியை அமெரிக்காவைச் சேர்ந்த பயர் ஐ இன்க் என்ற கம்ப்யூட்டர் வைரஸ் எதிர்ப்பு தொழில்நுட்ப விற்பனை நிறுவனம் வெளியிட்டுள்ளது.

*பரீஸ் கர்பாதவ் எழுதிய ரஷ்ய சிறுகதையின் தமிழாக்கம். 1990களில் சோவியத்யூனியனில் வெளிவந்த சிறுகதை இது. ருஷ்யப் பெயர்கள் உங்கள் வாய்களில் நுழையாவிட்டாலும், பரபரப்பும், உறுதியும், உள்ளார்ந்த நேசமும் இழையோடும் இக்கதையை வாசித்து இதயத்தை இதமாக்குவீர்கள் என்றே நம்புகிறோம்.*

# வெள்ளரி நிலத்தில் பிள்ளைப் பேறு..

வெள்ளரி நிலத்தில் சங்கடம் நேர்ந்து விட்டது. வெள்ளரி நிலம் என்பது ஆர்க்டிக் (வடதுருவக்) கடலில் எங்கோ தொலைவில் தன்னந்தனியாக இருக்கும் ஒரு தீவு. உலக வரைபடத்தில் இந்தப் பெயரைத் தேடுவது வீண் முயற்சியாகும். வரைபடத்தில் இந்தச் சிறு புள்ளிக்கு உள்ள பெயர் இன்னொலியும் கவிநயமும் கொண்டது. ஆனால் துருவப் பரப்பிலுள்ள வானொலி இயக்குநர்கள் இதை வெள்ளரி நிலம் என்றே பிடிவாதமாக அழைத்து வருகிறார்கள். அவர்கள் கருத்தை மாற்றுவது முடியாத காரியம்! இந்த வானொலி இயக்குநர்களே இப்படித்தான். ஒரே கிண்டல் பேர்வழிகள். சிறிய அறைகளுக்குள் அடைபட்டிருப்பதால் அவர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டிருக்கலாம்!

ஆயினும் இந்த விந்தைப் பெயருக்கும் ஒரு வரலாறு உண்டு. தீவு சமீபத்தில் தான், மிக அண்மையில் தான், கண்டுபிடிக்கப்பட்டது. தேடுதல் குழுத் தலைவன் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிலத்தின் வரைபடத்தை விரைவாகத் தயாரித்து (பனி உடைக்கும் கப்பலைச் சுற்றிலும் விடாது படிந்த பனிக்கட்டி அவனை அவசரப்படுத்தியது), அக்கணமே இப்படி அறிக்கை அனுப்பினான்: "புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தீவு வெள்ளரிக்காய் வடிவாக இருக்கிறது". அந்தப் பகுதிகளில் எந்த விஷயம் ஆனாலும் வானொலி இயக்குநர்கள் வாயிலாகத் தான் சொல்ல வேண்டும். ஆகவே அவர்கள் ஆர்க்டிக் தீவுக் கூட்டத்தின் இந்தப் புதுப்பகுதிக்கு வெள்ளரி நிலம் என்று பெயர் வைத்தார்கள்.

மிகவும் தொலை வடக்கில் இருந்த இத்தீவு விரைவிலேயே அதிக முக்கியத்துவம் பெற்றது. பனிக்கட்டி மூடிய ஆர்க்டிக் பெருங்கடலின் பல இரகசியங்களை இனித் துருவி ஆராயத் தங்களால் முடியும் என்று மனநிறைவுடன் ஆய்வாளர்கள் கைகளைத் தேய்த்துக் கொண்டார்கள். தங்கள் ஆய்வுக்கு இன்னொரு நிலையம் கிடைத்த மகிழ்ச்சியில் பருவ நிலை முன்னறிவிப்பாளர்களும் இது குறித்துப் பெருமூச்சு விட்டார்கள். இளம் துருவ ஆராய்ச்சியாளர்கள் காதலியைப் பற்றிக் கனவு காண்பது போல வெள்ளரி நிலத்தையும் அதன் ஒப்பற்ற கவர்ச்சிகளையும் பற்றிக் கனவு கண்டார்கள். அங்கே சென்று அதை வெற்றி கொள்ள எத்தகு துணிகரச் செயல்களையும் புரியத் தயாராக இருந்தார்கள். "டிக்ஸன், திக்ஸீ, செல்யூஸ்க்கின் இவை பற்றி என்ன சொல்ல! அவை முழுதும் ஆராயப் பட்டு விட்டன. அங்கே போவதும் ஒன்றுதான். வீட்டில் இருப்பதும் ஒன்றுதான்" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, "இதுவோ.. இது வேடிக்கையில்லை, எழுபத்து எட்டாவது அட்சமாக்கும்" எனக் கிளர்ச்சி பொங்கக் கிசுகிசுப்பார்கள்.

இவ்வாறாக, வெள்ளரி வடிவில் அமைந்த அத்தீவில் மக்கள் குடியேறினார்கள். கன்னி வெண்பனி மீது, கிண்ணங்கள் போன்று வளைவான கரடிகளின் பெரிய அடித் தடங்களுக்கு அருகே மாந்தர்களின் மனவுறுதியைக் காட்டும் கூர்ந்த காலடிச் சுவடுகள் தென்பட்டன. கட்டடங்கள் எழுந்தன. பனித் திடல்களில் வாழ்வு தளிர்த்தது. மக்களின் பழக்க வழக்கங்களும், களிப்பும், கவலையும், கிளர்ச்சியும் ஏற்கெனவே நிலை பெற்று விட்டன. பள பளக்கும் செப்புக் காப்பிப் பானையில் காப்பி கொதிக்கும் இரவு நேரத்தில் சதுரங்க ஆட்டம் மும்முரமாய் நடந்தது. "ஆனாலும் சங்கடமும் வந்து சேர்ந்தது. பார்க்கப்போனால் உண்மையில் அது இன்பந்தான். ஆம், அது இன்பந்தான்!" ஆனால் விளைவு என்ன ஆகும் என்பது இன்னும் தெளிவாகவில்லை. விஷயம் இதுதான். ஒரு பெண் பயங்கரமாக, காட்டுக்கத்தாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள். அவளருகே நின்ற வெளிறிய கொழுத்த ஆடவனது கரங்கள் செய்வகையறியாது நடுங்கிக் கொண்டிருந்தன. அவனுடைய நெற்றியில் முத்துமுத்தாய் வியர்வைத் துளிகள் உருண் டோடின.

சோவியத் ஆர்க்டிக் பிரதேசங்களில் தொலை தூரத் தீவுகளில் வசிப்பவர்கள், தன்னந்தனியாக, அண்டை அயலாரைப் பற்றிய தகவல் எதுவுமின்றி வாழ்கிறார்கள் என்று நினைப்பது தவறு. மிக அண்மையில் உள்ள அயலார்களுக்கிடையே, அக்கம் பக்கத்துத் தீவுகளுக்கிடையே இருக்கும் தொலைவு ஆயிரம் கிலோமீட்டர்கள், அதுவும் எத்தகைய பிரதேசத்தில் என்பது

உண்மையே! ஆயினும் வானொலி இயக்குநர்கள் இருக்கிறார்களே! தொலையிலுள்ள வெள்ளரி நிலத்தில் ஒரு பெண் பிரசவ வேதனையால் துடித்ததை ஆர்க்டிக் முழுவதிலும் பரப்பி விட்டார்கள். ஆர்க்டிக் வாசிகள் அனைவரும், நார்த்விக் சுரங்கக்காரர்கள், செல்யூஸ்க்கின் விஞ்ஞானிகள், டிக்ஸன் வானொலி இயக்குநர்கள், திக்ஸீ துறைமுகக் கொத்தர்கள், பேலிய் தீவில் வாழ்பவர்கள் ஆகிய, கடுகடுப்பும் அச்சமின்மையும் கொண்ட இம்மனிதர்கள் எல்லாரும், தாங்களே கர்ப்பிணியின் படுக்கைக்கு அருகே, இருமுவதற்குக் கூட அஞ்சியவர்களாய், குழந்தையின் பிறப்பை எதிர்நோக்கி, அதன் முதலாவது அதிகாரக் கத்தலைக் கேட்டு, தந்தையர் போன்று முறுவலிக்கக் காத்திருப்பவர்கள் போன்று, இந்தப் பிரசவத்தின் முடிவை மூச்சுக்கூட விடாமல் எதிர்பார்த்திருந்தார்கள்.


"என்ன சேதி? என்ன ஆயிற்று?" என்று காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் ஒருவரையொருவர் விசாரித்த வண்ணமாயிருந்தார்கள்.

கர்ப்பிணியோ கூச்சலிட்டவாறு இருந்தாள். அவளது கூக்குரல்கள் ஆர்க்டிக் பிரதேசம் முழுவதிலும் சென்று ஒலிப்பது போலத் தோன்றியது. அவளுடைய கணவன், இத்தகைய சந்தர்ப்பத்தில் எல்லா ஆண்களும் நடந்து கொள்வது போலவே, செய்வது அறியாது அவளருகே நின்று கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தான். மருத்துவரோ, ஒன்றும் செய்ய முடியாமல் பதற்றத்துடன் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அவர் பேறு காலம் பார்க்கும் மருத்துவர் அல்ல. அத்துடன் குழந்தையும் கருப்பையில் குறுக்காகக் கிடந்தது, இது அசாதாரண பிரசவம்.

அன்றைய தினம் உளத் தவிப்பு நிறைந்த செய்தி ஒன்று வெள்ளரி நிலத்திலிருந்து வானொலி மூலம் ஒலி பரப்பப்பட்டது.

"காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்! ஏதாவது செய்து தாயையும் குழந்தையையும் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினான் அவளுடைய கணவன்.

என்ன செய்வது? செய்தியைப் பெற்றுப் பதிவு செய்த வானொலி இயக்குநர் வேதனையுடன் முகத்தைச் சுளித்து, ரிசீவரைக்



கழற்றி வைத்துவிட்டு, நிலையத் தலைவனிடம் சொன்னான்: "என்ன செய்யலாம்? பாவம் நிறைமாத கர்ப்பிணி" குழந்தை வேறு ஆபத்தில் இருக்கிறது...

நிலையத் தலைவனும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளனும் அவளுக்கு எப்படி உதவலாம் என்பது பற்றி ஆலோசித்தார்கள்" மருத்துவரை விமானத்தில் ஏற்றி அனுப்பவும் வகையில்லை. நிலையத்தில் ஒரு விமானம் கூடக் கிடையாது. அத்துடன் குளிர்காலம் வேறு. வடதுருவ இரவு. பறக்கத்தான் முடியுமா? கட்சிச் செயலாளன் புருவத்தைச் சுளித்துக் கொண்டு மருத்துவரைப் பார்க்க மருத்துவமனைக்குச் சென்றான்.

மருத்துவரின் பெயர் ஸெர்கேய் மாத்வேயிச். அவரைப் பற்றி என்ன சொல்வது? சாதாரணமான மருத்துவர். எதிலும் வியப்போ, மனத்தாங்கலோ, அச்சமோ - அடையாத வகை ஆட்களில் ஒருவர். அவரது தோற்றமும் மிகச் சாதாரணமானது: அளவான வயிறு அறுவை மருத்துவருக்கு இயல்பான பெரிய சிவப்புக் கரங்கள் நல்லியல்பு தொனிக்கும் கட்டைக் குரல் வழுக்கைத் தலையை மறைத்து வாரி விடப்பட்ட அருகிய முடி கொம்புப் பிரேம் போட்ட கறுப்பு மூக்குக் கண்ணாடி உடை, கைகள் எல்லாவற்றிலும் கார்பாலிக் அமிலம், மருந்துகள், மருத்துவ மனை வாடை, ஆக ஒரே வார்த்தையில் சொன்னால், மருத்துவருக்கு உரிய தோற்றம். அவரிடம் இருந்த ஒரே அசாதாரண இயல்பு என்னவென்றால் அவர் ஆர்க்டிக் பிரதேச மருத்துவரான போதிலும் மிகச் சாதாரணமாக இருந்தார் என்பதே. இருப்பினும் ஆர்க்டிக் மருத்துவர், ஒரு வகையில் கவிதைப் பாங்கு கொண்டவர் ஆயிற்றே. ஆனால் ஸெர்கேய் மாத்வேயிச்சிடமோ இத்தகைய கவிதைப் பாங்கு மருந்துக்குக் கூடக் கிடையாது. அவர் சர்வ சாதாரணமான, விவகாரப் போக்குள்ள மருத்துவர். பனிப்பாளங்கள், புயல்கள், ஆடிக் குலுங்கும் கப்பல் மேல் தளம், டப்பா உணவு, கடலின் உவர் நாற்றம் எல்லாவற்றையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் துணிச்சலான கப்பல் மருத்துவர்கள் போல் கூட இல்லை அவர். ஒருவேளை அவர் மருத்துவ ஆராய்ச்சியாளரோ, விஞ்ஞானியோ?

ஸெர்கேய் மாத்வேயிச், இறால்களை ஸ்பிரிட்டில் இடவுமில்லை, பாசிக் காளான்களை உலர்த்தவும் இல்லை. தமது நாட்குறிப்பில் "மருத்துவத் தொழில் சம்பந்தமான அக்கறைக்குரிய சிறு குறிப்புக்களை"க் கூட எழுதி வைத்துக்கொள்ளவில்லை. ஒரு

தரம் ஏதோ செய்ய முயன்றார், ஆனால், நேரமின்மையால் விட்டுவிட்டார்: நோயாளிகள், கவலைகள், மருத்துவமனை.

காந்த இயல் அறிஞனான மோதரவ் என்ற இளைஞன் கப்பலிலேயே ஸெர்கேய் மாத்வேயிச்சைச் சந்தித்தான். அறிவியலின் பொருட்டே அத்துறையில் ஊக்கம் காட்டுபவர்களும், வட துருவ நிலையங்களில் அறிவியல் கண்டு பிடிப்புகளுக்கு மிகுதியும் ஏற்ற வாய்ப்பு உண்டு என்று கருதுபவர்களும் ஆகியவர்களில் மோதாவும் ஒருவன். குதூகலப் புன்னகையுடன் மருத்துவரிடம் சொன்னான்:

"உங்கள் நோக்கு எனக்குப் புரிகிறது. வட துருவத்தில் வேலை செய்கிற எங்கள் அனைவரையும் பற்றிய உங்கள் கருத்தும் எனக்குப் புரிகிறது. உங்கள் கண்களுக்கு நாங்கள் எல்லாரும் சோதனை விலங்குகள் தாம். எங்களை ஆராயப் போகிறீர்கள், அப்படித்தானே? அவசர வேலைக்கு முன்பும் பின்பும் எங்கள் நாடித் துடிப்பைக் கணக்கெடுப்பீர்கள், துருவ இரவின் போதும் பகலின் போதும் எங்கள் இருதயங்கள் எப்படி அடித்துக்கொள்கின்றன என்று கேட்பீர்கள். பின்னர் அறிவியல் ஆராய்ச்சி நூல் எழுதி வெளியிடுவீர்கள், இல்லையா? சரிதானே விலங்காகப் பயன்படத் தயாராக இருக்கிறேன்!"

ஆனால் அவர் அப்போது தவித்த தவிப்பைக் கண்ட மோதாவு, "சோதனை விலங்கு"கள் பற்றியோ அறிவியல் ஆய்வு பற்றியோ அவரிடம் மறுபடி பேசவே இல்லை. நோயாளிகளுக்கு மருத்துவம் செய்வது மட்டுமே அவர் இங்கு வந்ததன் ஒரே நோக்கம் என்று தெரிந்தது.

இன்றிற்காக அவருக்கு மருத்துவமனை தேவைப் பட்டது. மருத்துவமனை இல்லாத மருத்துவன் "கப்பல் இல்லாத கொலம்பஸ்" மாதிரி என்று அவர் சொல்வதுண்டு. அதுவும் ஏனோ தானோவென்று பெயரளவிற்கு அது இருந்தால் அவருக்குப் போதவில்லை. ஆர்க்டிக்கோ ஆர்க்டிக் இல்லையோ,

நோயாளிக்குத் தக்க முறையில் சிகிச்சை அவசியம் என்று கருதினார். அதனால் தான் கப்பல் கரை சேர்ந்து சாமான்கள் இறக்கப்பட்டதோ இல்லையோ மருத்துவப் பெட்டிகளை அவரே தனது முதுகில் சுமந்து சென்றார். யாராவது உதவிக்கு வந்தால், "கவனமாக, பார்த்து! உடைத்து விடாதீர்கள்" என்று கோபத்துடன் இரைந்தார்.



பனி நாய்கள் இழுக்கும் ஸ்லெட்ஜ் வண்டி

மருத்துவமனை ஒன்றும் கட்டப் பட்டது. சிறியது, ஐந்தே படுக்கைகள் கொண்டது, எனினும் முற்றிலும் போதுமானது. ஸெர்கேய் மாத்வேயிச் எந்த மாதிரி மருத்துவ மனைகளில் தலை நரைத்து வழுக்கை விழுந்து, அயோடின் மணமும் கார்பாலிக்

அமில வாடையும் நிரந்தரமாக வீசும் அளவிற்கு வேலை செய்திருந்தாரோ, அந்த மாதிரியான மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் எல்லாம் இதில் இருந்தன.

நோயாளிகள் வந்தார்கள், பெரும்பாலும் பெண்களே. தொலை விலுள்ள கூட்டுறவுத் தொழிற் பண்ணைகளிலிருந்து, நாய் இழுத்த ஸ்லெட்ஜ்"களில் நெடுந்தூ ரத்தைக் கடந்து, பேறு காலத்திற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பாகவே வந்தார்கள். பாத வெடிப்பு, மூலம், குளிரில் மரத்த விரல்கள், எலும்பு முறிவு, பல்வலி ஆகியனவற்றிற்கு மருந்துவம் செய்து கொள்ள ஆண்களும் வந்தனர். ஸெர்கேய் மாத்வேயிச் பல் மருத்துவமும் பார்த்தார், பல் துளைகளை அடைத்தார். ஊரில் பற்களைச்

செவ்வைப்படுத்திக் கொள்ள வாய்ப்பில்லாது போனவர்கள், ஸெர்கேய் மாத்வேயிச்சிடம் பற்களைச் சரி செய்து கொண்டார்கள். ஆனால் அவர் அடிக்கடி சொல்வது இதுதான்:

"அடடா! இவ்வளவு மோசமாக இருக்கும் இந்தச் சொத்தைப் பல் உனக்கு எதற்காக? ஊம்? பிடுங்கிவிடுகிறேன், சரியா?"

பல் பிடுங்குவதற்கு முன்பு நோயாளிக்குத் துணிவு வருவ தற்காக முப்பது மில்லி சாராயம் குடிக்கக் கொடுப்பார். இது அவருடைய வழக்கம். ஆனால் ஆட்கள் தன்னை ஏமாற்றுவதைப் பின்னர் அவர் கண்டுகொண்டார். சாராயத்தைக் குடித்துவிட்டு, பல் பிடுங்கிக்கொள்ள மறுத்து விடுவார்கள். "அதாவது, டாக்டர், பல் வலி இப்போது குறைந்துவிட்டது. அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாம்" என்பார்கள். அது முதல் அவர் பல் பிடுங்கிய பிறகு சாராயம் கொடுப்பதை வழக்கப்படுத்திக் கொண்டார்.

உள் நோய்களை அவர் சந்தேகக் கண்ணோடு நோக்கினார்.

"இந்தா, உள்ளுக்கு மருந்து சாப்பிடுவது என்பது வெட்டிப் பணக்காரர்கள் செய்யும் வேலை. உங்களுக்கு இந்த நோய்கள் எல்லாம் எதற்காக வரவேண்டும், என்று ஆரம்பித்து, இவற்றை இயற்கையின் போக்கில் விடுங்கள்" இயற்கை விவேகம் நிறைந்தது. இங்கேயோ பருவநிலை அற்புதம், உடல் நலத்துக்கு ஏற்ற பருவநிலை, இல்லையா?" என்று நோயாளிக்கு ஆறுதல் கூறுவார்.

கட்சிச் செயலாளன் மருத்துவமனையில் மருத்துவருடன் அவரது அறையில் உரையாடினான்.

"எப்படியாவது உதவி செய்ய வேண்டும்" களைத்த விழிகளால் டாக்டரை நோக்கியவாறே சொன்னான்.

(இதழ் 3 வரை தொடரும்)

சீனாவின் தாயுவான் மாகாணத்தில் 1936இல் பிறந்தவர். இராணுவத்தில் பணி புரிந்தவர். இவரின் கவிதைகள் "சாங் யோவின் பாடல்கள்" என்ற தலைப்பில் 1986இல் வெளிவந்தன. சாங் யோவின் கவிதைகளில் ஒன்று இது.

## அழகியல் குறித்து தற்செயலான வரிகள்

என் வாழ்வின் பல துறைகள்
பின்னே விடப்பட்டுவிட்டன
ஒரு கடைக்கோடி வகுப்பினனாக

பகட்டான வணிகமயமான விளம்பரங்களின் தந்திரங்கள்
முடிவில் என் மனதில்
மிச்சமாய் விட்டுச் சென்றிருப்பது
மினுங்கும் வண்ணங்களின் அடுக்கை மட்டுமே

அவற்றைவிட என்னை மயக்குவன

ஒரு கிராமத்துத் தோணி
சுழலும் பனி
கீச்சிடும் சிறு படகுகள்
காற்று புகாத லாந்தர் விளக்கு

நான் வெட்கப்படுகிறேன்
பல பக்குவங்களைக் கடந்து வந்திருக்கிறேன்
காலங்கள்தோறும்

ஒரு பட்டறையிலிருந்து மற்றொன்றிற்கும்
ஓர் உலையிலிருந்து மற்றொன்றிற்கும் மாற்றப்பட்டு

சிதைக்கப்பட்டது என்னவெனில் என் கபடமின்மை
உருக்கப்படாமல் எஞ்சியது என்னவெனில்
என் நோக்கமற்ற வீண் பிடிவாதம்

நான் சிந்திய
ஒரு கண்ணீர்த்துளியைப் பொறுக்கி
நழுவவிடாமல் பிடித்திருக்கிறேன்
ஒரு வைரம் போலக் கருதி



சொல்லத் தேவையில்லை
எது அழகோ அதை நேசிக்கிறேன்

ஆனால் எவ்வகை வசீகரம்
என்னை ஆசைகாட்டி துறக்கவைக்க முடியும்
வரிவரியாய் உழப்பட்ட நிலம் குறித்த
என் தனிப்பட்ட வியப்பை

அந்த நீண்ட வரித்தடங்கள்
அழகாகவும் கவர்ச்சியாகவும் உள்ளன
விவசாயியின் முன்நெற்றியிலிருக்கும் சுருக்கங்களைப் போல

அவை நினைவுபடுத்துகின்றன
சூழ்நிலையால் மாசுபடுத்தப்படாத நேர்மைகளை

மேலும்
சுயநலத்திற்காகச் சரணடைப்படக் காத்திருக்கும்
வளமான செல்வங்களையும்

# பரந்து விரிந்து கிடக்கும் கடலில் வட பகுதி மீனவர்களின் பிரச்சினை

**வட பகுதி மீனவர்கள்:**
**பெரு முதலாளிகளின் ட்ரோலர் படகுகளே முதலாவது பிரச்சினை.**

**வட பகுதி மீனவர்கள்:**
**அத்து மீறும் இந்திய மீனவர்கள் இரண்டாவது பிரச்சினை**

**கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள்:**
**நாங்கள் கூலியாட்கள். முதலாளிகளின் நிர்ப்பந்தத்தினால் வருகிறோம்.**

**ஜெயலலிதா, கருணாநிதி இந்தியப் பிரதமருக்குக் கடிதம்:**
**இலங்கைக் கடற்படையினர் எமது மீனவர்களைத் தாக்கிறார்கள்**

**இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா :**
**வடபகுதி மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு :**
**..............................................................................................**

**இலங்கை அரசு:**
**இந்தியத் தரப்பினருடன் பேசித் தீர்ப்போம்.**

**இந்திய அரசு :**
**இலங்கைத் தரப்பினருடன் பேசித் தீர்ப்போம்.**

இந்திய மீனவர்களின் அத்துமீறல் இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கே பிரச்சினையாக இருக்கிறது. தமிழகக் கரையிலிருந்து ஓரே தடவையில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ட்ரோலர்கள் புறப்பட்டு வந்து கொள்ளைக்காரர்கள் போல கடலிலுள்ள வளங்கள் அனைத்தையும் அள்ளிச் செல்கின்றன. மீன்கள் மாத்திரமல்ல. குஞ்சுகள். முட்டைகள். கடல்வாழ் சிறிய உயிரினங்கள். கடற்தாவரங்கள் அனைத்தையும் கூட இவை அழிக்கின்றன. இவ்வாறு வட பகுதி மீனவர்கள் கூறுகின்றனர்.

வடபகுதியில் பெரும்பான்மை மக்களின் வாக்கு வங்கியைக் கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் மீனவ மக்களின் பிரச்சினை பற்றி வாயே திறப்பதில்லை. இலங்கை அரசின் நற்சான்றிதழ் அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தாது ஆனால் இந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் நெருங்கிய உறவு அவர்களுக்கு மிகுதியான வாய்ப்பு வசதிகளைத் தரக் கூடியன என்பதே உண்மை. இந்தக் கருத்தினையே இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற டாக்டர் வி.சூரியநாராயணனும் தெற்காசிய மீனவர் பிரச்சினை சம்பந்தமான தனது ஆய்வில் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

மேலும், பாக் நீரிணையைச் சர்ச்சைக்குரிய பகுதியாகக் கருதக்கூடாது. தமிழக மீனவர்கள் பயன்படுத்தும் ட்ரோலர்கள்தான் பிரச்சினை ட்ரோலர்களின் பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.
மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்திய சஞ்சிகையொன்றின் கேள்விகளுக்கு டாக்டர் சூரியநாராயணன் பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்.

1974 வரை பெரிதாகப் பிரச்சினை கிடையாது. 1974 மற்றும் 76இல் இரு நாடுகளுக்கும் இடையில் கடல் எல்லையைப் பிரித்த பிறகுதான் பிரச்சினை தொடங்கியது. அதன் பிறகு, இது உங்கள் பகுதி இது எங்கள் பகுதி என்று ஆகிவிட்டது. ஆனால் மீனவர்கள் அதைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

1974 ஒப்பந்தத்தின் மூலம் கச்சத்தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. இது பெரிய தவறு. அந்த ஒப்பந்தத்தின் 5 மற்றும் 6ஆம் பிரிவுகளின்படி கச்சத்தீவைச் சுற்றிலும் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது. "தமிழக மீனவர்கள் கச்சத்தீவில் வலைகளை உலர்த்தலாம், புனித அந்தோனியார் கோவிலுக்கு வரலாம்" என்று மட்டும் இலங்கை கூறியது. அப்போது எல்லோரும் பருத்தி வலைகளையே பயன்படுத்தினர். அவற்றை உலர்த்த வேண்டியிருந்தது. இப்போது நைலான் வலைகள் வந்துவிட்டன. இவற்றை உலர்த்தும் கேள்வியே இல்லை. அதனால் வலைகளை உலர்த்தக் கச்சத் தீவு தேவை என்ற முக்கியத்துவம் போய்விட்டது.

முதல்முறையாக 1983 ஆகஸ்ட் மாதம்தான் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. போர் நடந்த காலத்தில் அவர்கள் போராளிகளா மீனவர்களா என்பது தெரியாமல் சுட்டார்கள். படகின் அருகில் சென்று சோதிக்கப் பயந்து கூட ஆரம்பித்தார்கள்.

அச்சம்பவங்கள் அனைத்துமே இலங்கைக் கடற்பகுதிக்குள்தான் நடந்தன.
1968இல் இந்தியா பெரும் அன்னியச் செலாவணிச் சிக்கலில் இருந்தது. அப்போது இந்திய அரசு ஏற்றுமதியைப் பெரிய அளவில் ஊக்குவித்தது. அந்த நேரத்தில் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இறால், குறிப்பாகச் சிங்கிறால் மிக விருப்பமான உணவாக இருந்தது. அவற்றைப் பெரிய அளவில் பிடிப்பதற்காக தமிழகத்தில் பாக் நீரிணையில் ட்ரோலர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை கடலின் அடிப்பகுதியையே சுரண்டிவிடக் கூடியவை. பெருமளவில் அந்நியச் செலாவணி தேவை. அதனால் மீன்களை எவ்வளவு சீக்கிரம் பிடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பிடிக்க வேண்டும் என்றானது.

இதனால், சில வருடங்களில் இந்தியப் பகுதிகளில் மீனே இல்லாமல் போனது. தவிர, இந்த மீன்பிடித் தொழிலில் நிறைய வருமானம் வர ஆரம்பிக்கவும் மீனவர் அல்லாத ஜாதியினரும் இந்தத் தொழிலில் குதித்தனர். பாரம்பரியமாக மீன் பிடித்துக் கொண்டிருந் தவர்கள் கூலித் தொழிலாளர்க ளானார்கள். இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டவர்கள்கூட, "ட்ரோலர் முதலாளிகள்தாம் தங்களை இலங்கைப் பகுதிக்குள் சென்று மீன் பிடிக்குமாறு வற்புறுத்துவதாகக் கூறியுள்ளனர்."



ட்ரோலர்கள் பெருமளவில் மீன்களைச் சுரண்ட ஆரம்பித்ததும் பாரம்பரியமாகக் கட்டுமரங்களைப் பயன்படுத்து பவர்களுக்கும் ட்ரோலர்களில் மீன் பிடிப்பவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, கரையை ஒட்டிய முதல் 5 நாட்டிகல் மைல் பகுதியில் ட்ராலர்கள் மீன்பிடிக்கக் கூடாது என முடிவு செய்யப்பட்டது.

எஞ்சின் பொருத்தப்பட்ட வள்ளங்களே இலங்கையை

செல்கின்றன. தவிர ட்ராலர்களில் பொதுவாக வாரத்தில் மூன்று நாட்கள் மீன்பிடிக்கச் செல்கிறார்கள். கிட்டத்தட்ட 2500 ட்ராலர்கள் செல்கின்றன. இவர்கள் பெரும் எண்ணிக் கையில் செல்வதாலும் இந்திய மீனவர்கள் என்பதாலும் இந்தியக் கடலோரக் காவல் படை எதுவும் செய்வதில்லை.

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கச்



செல்லும் மூன்று நாட்களில் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் கடலுக்கே செல்ல மாட்டார்கள். காரணம். இந்தியப் படகுகளால் அவர்களது வலைகள் அறுக்கப்படுவதுதான். இரண்டு ட்ராலர்களுக்கு நடுவில் இரும்பு உருளையுடன்கூடிய வலை போடப்பட்டிருக்கும். இதற்கு நடுவில் செல்லும் சிறிய படகுகளின் வலைகள் அறுக்கப்பட்டுவிடும். இதனால். அவர்கள் சுத்தமாக மீன் பிடிக்க முடியாமலே போய்விடுகிறது.

இது தொடர்பாக ஆகஸ்ட் 2010இல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. முதல் முறையாகத் தமிழக மீனவர்கள். ட்ராலர்கள் கடல் வளத்தை நாசமாக்குகின்றன என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தை எல்லா மீனவரும் ஆதரிக்கவில்லை. இதனால் நம் மீனவர்கள் இந்த ஒப்பந்தத்தை மீற ஆரம்பித்தனர். இப்போது இது மிக மிக அதிக அளவில் நடக்கிறது. இதனால்தான். அந்த மீனவர்கள் நம்முடைய மீனவர்களைப் பிடித்துச் செல்ல ஆரம்பித்துவிட்டனர். நம்முடைய மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் கருணாநிதியும் ஜெயலலிதாவும் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார்கள். உடனே அவரும் இவர்களுக்குப் பதில் எழுதுகிறார். பிறகு மீனவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். இது. தீப்பிடித்த பிறகு தீயை அணைப்பது போல. தீப்பிடிப்பதற்கான காரணத்தையே அகற்றுவதுதான் சரியானதாக இருக்கும். இலங்கையின் தமிழ்ப் பகுதி அரசியல்வாதிகள். எம்.பிக்கள் ஆகியோர் இதைப் பற்றிப் பேசுவதில்லை. அவர்கள் இந்தியாவுடனான உறவைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இருதரப்புக்கும் ஏற்புடைய தீர்வை நாட வேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இந்தத் துப்பாக்கிச் சூடு. கைது எல்லாமே இலங்கைப் பகுதியில்தான் நடக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (2010ஆம் ஆண்டில் இவ்வாறான கருத்துகள் நிலவின. எனினும் மீனவர் பிரச்சினையில் இதுவரை எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.)

# அச்சம் தவிர்



மனிதர்களின் பெரும்பாலான மோசமான நடவடிக்கைகளுக்கு அச்சம்தான் பிரதான காரணமாக உள்ளது. அச்சம் அனைத்தையும் அழிக்கிறது. இதனால், மனிதர்களை நல்வழிப்படுத்துபவர்கள் 'அச்சம் தவிர்' என்று சொல்லிச் சென்றுள்ளார்கள்.

உயர் பதவிகளில் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள், அதிகாரம் எங்கே தமது கையைவிட்டுப் போய்விடுமோ என்று அச்சம் கொள்கிறார்கள். அதனால் நேர்மையற்ற வழிகளை நாடுகிறார்கள். ஆட்சி பீடத்திலுள்ள கட்சி, ஆளும் அதிகாரத்தை இழந்து விடுவோமோ என்று அச்சம் கொள்கிறது. ஆட்சியில்லாத கட்சி மக்கள் தங்களை ஒரேயடியாக ஒதுக்கிவிடுவார்களோ என்று அச்சம் கொள்கிறது.

அவர்கள் மாத்திரமல்ல. சாமான்ய மனிதனும் அச்சத்தின் வசத்தில் ஆட்டிப் படைக்கப்படுகிறான். சமூகம் தன்னை மதிக்காமல் விட்டுவிடுமோ என்ற அச்சம், மனைவி தன்னை நேசிக்கவில்லையோ என்ற அச்சம். பிள்ளைகள் தன்னை மதிக்காமல் தான்தோன்றித்தனமாக நடக்கிறார்களோ என்ற அச்சம். மனிதர்களின் அச்சத்திற்கு எல்லையே இல்லை.

ஆனால் அச்சத்தின் பிடியில் மனிதர்களுக்கு கிடைக்கும் வெகுமானம் துர்க்குணங்கள். அறியாமை. மூடநம்பிக்கைகள் மட்டுமே. அச்சத்திலிருந்து விடுதலை பெற்ற சுதந்திரமான மனிதர்களைக் கொண்ட சமூகமே வளர்ச்சி பெறும்.

(10ஆம் பக்க தொடர்ச்சி)
பதில்: இலங்கையிலுள்ள ஒரு கோடியே பத்து இலட்சம் பனைகளில் 96 வீதமானவை வடக்கு கிழக்கிலேயே காணப்படுகின்றன. அதிலும் 94 சதவீதம் வடக்கிலேயே காணப்படுகின்றன. வடக்கு மாகாணசபை இலட்சனையிலும் பனையே காணப்படுகின்றது. எனவே மூலதனம் இருக்கும் இடத்தில் பணிகள் ஒருங்கிணைக்கப்படுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும் சிறப்பாக அமையும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கை அரச வர்த்தமானி அறிவித்தலிலும் பனை அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலம் வடக்கிலேயே அமைய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பானத்தில் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்ட பின்னர் சபையின் பெருமளவு செலவுகள் குறைந்துள்ளது. இவ்வாறான பல நன்மைகளை அடைந்துள்ளோம்.

**யுத்தம், இயற்கை அழிவு மற்றும் பிற தேவைகளுக்குமாக, அதிகளவு பனைகள் அழிவடைந்துபோயுள்ளன. இவற்றை ஈடுசெய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி கூறுங்கள்?**

யுத்த காலத்தில் பனைகள் அழிக்கப்பட்டாலும் அன்றும் பனை மர மீள்நடுகை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். தேசியவளம் என்ற அடிப்படையில் யுத்தத்தில் ஈடுபட்டவர்களும் பனைமர நடுகைக்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள் என்பதை மறுக்கமுடியாது.

தற்போது பனை தறிப்பது எம்மால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முறிந்த பனைகள், மக்கள் குடியிருக்கும் வீட்டுக்கு பாதுகாப்பற்ற சூழலில் இருக்கும் பனைகள், பயன்பாடுகள் அற்ற பனைகள் எனத் தெரிவு செய்யப்பட்டே பெரும்பாலும் தறிக்கப்படுகின்றன. அத்துடன் ஒரு வருடத்தில் 20 ஆயிரம் பனைக்கு மேல் தறிக்க அனுமதிப்பதில்லை என்பதும் ஒரு இலட்சம் பனைகள் மீள் நடுகை செய்யப்படவேண்டும் என்ற தீர்மானமும் உறுதியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பனை மரத் தேவையின் பொருட்டு பனை தறிக்க விண்ணப்பிப்போரிடம் ஒரு பனைக்குப் பதிலாக அவர்கள் 10 பனைகளை நாட்ட வேண்டும் என்பது எம்மால் வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் எமது ஆராய்ச்சி நிலையம் மூலம் குட்டைப் பனை நடுகை, கூடிய பயனைத் தரக்கூடிய விதை தெரிவு போன்ற விடயங்கள் தீவிரமாக ஆராயப்படுகின்றது.

**வடக்கு, கிழக்கு பகுதிக்குரிய சிறப்பம்சமே விவசாயம், கடல்வளம் பனைவளம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தேசியளவில் பனை வளமேம்பாட்டிற்காக எத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

தற்போது பனைவளம் வடக்கு கிழக்கிலேயே உள்ளபோதும் அதனை இலங்கையின் தேசிய வளமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எமது "கற்பகச் சோலை முன்மாதிரிப் பனம் தோட்டம்" உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விட, குருநாகல், புத்தளம், கற்பிட்டி, அநுராதபுரம் போன்ற இடங்களில் பனை ஓலை சார்ந்த கைப்பணிப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் பனை நடுகையையும் ஊக்குவிக்கின்றோம். பனை வளம் இல்லாத இடங்களில் பனை சம்மந்தமான கைத்தொழில் பயிற்சியை பெற்றவர்களிற்கான மூலப் பொருளை அவர்களிற்கு வழங்கி அவர்கள் கைப்பணி தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான ஊக்குவிப்பையும் செய்து வருகின்றோம்.

**பனை வள உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்கள் எவ்வாறுள்ளது?**

எமது "கற்பகம்" விற்பனை நிலையங்களை அதிகரிப்பதன் மூலம் எமது சந்தைப்படுத்தலை விஸ்தரித்து வருகின்றோம். கார்கில்ஸ் பூட் சிற்றி போன்ற வர்த்தக நிறுவனங்கள் ஊடாகவும் சந்தைப்படுத்துகின்றோம். அத்துடன் சகல மாவட்டங்களிலும் விசேட கண்காட்சிகளை நடத்தி பனைசார் உற்பத்திகளுக்கு சந்தைப்படுத்தலை விரிவுபடுத்தி வருகின்றோம்.

**வெளிநாடுகளுக்கான சந்தை வாய்ப்பு எவ்வாறுள்ளது?**

வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பு இரண்டு வகையாக உள்ளது. ஒன்று பனைசார் உணவுப் பொருட்களை விரும்பும் புலம்பெயர் தமிழர்கள். இரண்டாவது வகையினர் பெரும்பாலும் பனைசார் கைப்பணிப் பொருட்களை விரும்பும் வெளிநாட்டவர். இவ்வாறான பொருட்களை வெளிநாட்டு முகவர் நிலையங்களுடன் தொடர்பு கொண்டும், அங்கிருந்து வரும் கேள்விகளை ஏற்றும் செய்கின்றோம். அத்துடன் எமது கற்பகச்சோலை இணையத் தளத்தினூடாகவும் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை விஸ்தரிக்கின்றோம்.

**மீண்டும் இயங்கும் பனை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் எவ்வகையான முன்னேற்றங்களைக் கண்டுள்ளீர்கள்?**

யாழ்ப்பானம், கைதடியில் அமைந்துள்ள இந்த பனை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாட்டின் மூலம் இதுவரை மூன்று விடயங்களில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம்.

ஒன்று கைப்பணிப் பொருட்களை செய்வதற்கான ஓலையை பங்கசிலிருந்து பாதுகாத்தல், கவர்ச்சிகரமான நிறமூட்டலை ஏற்படுத்தல் - இதன்மூலம் நீண்டகாலப் பாவனைக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, பனை சார்ந்த உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச் சத்துக்களையும் மருத்துவக் குணாம்சங்களையும் கண்டு கொள்ளல். இதன் மூலம் நுகர்வை அதிகரிக்கச் செய்யமுடியும். மூன்றாவதாக பனைசார் உணவுப் பொருட்களின் பதனிடல் முறைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.


(கலந்துரையாடல் தொடரும்)

# எங்களையும் வாழவிடுங்கள்!

துள்ளி ஓடும் புள்ளி மானை, கொன்று புசிக்கும் கொடுமை வேண்டாம்!




## வெண் புலிகள்



உலகில் சுமார் நூற்றுக்கும் குறைவான வெண்புலிகளே தற்போது உயிர் வாழ்கின்றன. சாதாரண புலியைப் போன்ற உருவ அமைப்பைக் கொண்டிருந்தாலும், பால் போன்ற வெள்ளை நிறமானவை இந்தப் புலிகள். இவற்றில் காணப்படும் வரிகள் கன்னங் கரேலானவை.

குட்டிகள் நான்கு கடந்த மார்ச் மாதம் இறுதி வாரத்தில் ஜப்பானின் ரோபு மிருகக் காட்சிச் சாலைகளில் பிறந்தன. இந்த நான்கு குட்டிகளில் ஒன்று மட்டுமே பெண் ஏனைய மூன்றும் ஆண் குட்டிகளாகும். இந்த மிருகக் காட்சிச் சாலைக்கு வருகைதரும் பார்வையாளர்களின் கவனத்தை இந்த வெண் புலிக் குட்டிகள் பெரிதும் கவர்ந்துள்ளன.


## தங்கத்தை விடப் பெறுமதியான கொம்புகள்



தங்கத்தை விடக் காண்டாமிருகத்தின் கொம்புகளுக்கு மவுசும், பெறுமதியும் அதிகம். எங்கு தெரியுமா? தென்கிழக்காசிய நாடுகளில்தான் மருத்துவக் குணாம்சங்கள் காண்டாமிருகக் கொம்புகளில் அதிகம் இருப்பதாக மக்கள் கருதுவதாலேயே இந்த மவுசு ஏற்பட்டிருக்கிறது. தென்னாபிரிக்க காடுகளில் காண்டாமிருக வேட்டை ஒரு சட்ட விரோத தொழிலாகவே இடம்பெறுகிறது. கடந்த வருடம் மட்டும் தென்னாபிரிக்காவில் 668 காண்டாமிருகங்கள் வேட்டையாடப்பட்டன என்று அந்த நாட்டு சூழல் விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகமாக இருக்கலாமென நம்பப்படுகிறது. ஆனால் இந்த வருடம் செப்டம்பர் மாதம் இறுதிவரை 688 காண்டாமிருகங்கள் தென்னாபிரிக்காவில் வேட்டையாடப் பட்டுள்ளன என்று சூழல் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உவக அசிங்க இராணிகள்





அசிங்கமான பிராணிகளைப் பாதுகாப்பதற்கென ஓர் அமைப்பு இவுஸ்திரேலியாவில், உலகில் மிக அசிங்கமான பிராணியைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியொன்றினை இந்த அமைப்பு அண்மையில் நடத்தியது.

புளொப்மீன் என்ற ஒருவகை மீன் இனமே மிகவும் அசிங்கமான பிராணியென அதிகமானோர் தெரிவு செய்தனர்.

அவுஸ்திரேலியாவின் தென் கிழக்குச் சமுத்திரப் பகுதியில் வாழும் இந்த மீன் கடலின் ஆழமான பகுதியில் சஞ்சரிக்கும். இருட்டில் மட்டுமே இது அசைந்து திரியும்.

உலகில் அழிந்துவரும் அசிங்கமான பிராணிகளைப் தேர்ந்தெடுப்பதற்காகவே மேற்படி அமைப்பு இந்தப் போட்டியை நடத்தியது. காக்கபோ என்ற ஒருவகைக் கிளியும் வெற்றியாளர்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது. உலகிலேயே பறக்க முடியாத ஒரு கிளி இனம் இதுதான்.

### மிருக பலியிடல்

இலங்கையில் சில ஆலயங்களில் மிருக பலியிடல் இன்னமும் நடைமுறையில் உள்ளது. இதனை மிருக வதை என்று சொல்லமுடியாவிட்டாலும் மிருகங்களை கொலை செய்வதை ஒரு விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இது நாகரீகமடைந்த ஒரு மனித சமூகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே உள்ளது.

உலகப் பிரசித்திபெற்ற முல்லாவின் கதைகளில் ஒன்று

## சகுனப் பிழை


அரசர் வேட்டையாடச் செல்கையில். முல்லா எதிரே வருவதைக் கண்டார். "முல்லாவைப் பார்த்தால் நல்ல சகுனம் இல்லை. அவனை அடித்து விரட்டுங்கள்" என ஆணையிட்டார்.

முல்லா அடித்து விரட்டப்பட்டார்.

வேட்டை வெற்றிகரமாய் முடிந்து திரும்பினார் அரசர். முல்லாவைக் கூப்பிட்டு "என்னை மன்னித்துக்கொள். நீ வந்தால் நல்ல சகுனம் இல்லை என எண்ணினேன். ஆனால் அது தவறு. வேட்டை நன்றாய் அமைந்தது என்றான் அரசன்.

"உங்களுக்கு நல்ல வேட்டை அமைந்தது. நான் உங்கள் முகத்தைப் பார்த்ததால் எனக்குக் கசையடி கிடைத்தது. யார் யாருக்குக் கெட்ட சகுனம் என்றார் முல்லா.

# ஹா..ஹி:



*தகப்பன்: நீ படிக்காமல் விளையாடிக் கொண்டு திரிந்தாயெண்டால். நாளைக்கு நடு ரோட்டில நிக்க வேண்டிவரும்.*

*மகன்: ட்ரபிக் பொலிஸ் படிக்கேல்லையா அப்பா?*

-சுதன்

## ஊடக சுதந்திரம்....?

**மனைவி:** என்ன கவலையா இருக்கிறீங்கள்?

**(கணவன்)முதலாளி:** இந்த ஆசிரியர் இனி சரிவராது! கொஞ்ச நாளா எங்கட பத்திரிகைக்கு மிரட்டல் ஒன்றுமில்லை.

**மனைவி:** நல்லது தானே. அதுக்கேன் கவலைப்படுறீங்கள்.

**முதலாளி:** இதால எனக்கு வாற பிரச்சினையைப் பற்றி உனக்கென்ன தெரியும்!

**மனைவி:** எங்க போறீங்கள்?

**முதலாளி:** நான்தான் ஏதாவது ஏற்பாடு செய்ய வேணும்.

*கணவன்:*
*கவலைப்படாத டியுசன் டீச்சரெல்லாம் ஏற்பாடு செய்திட்டன். வீட்டில இருக்கிற நேரம் படிக்க அறையும் துப்பரவ செய்து வைச்சிட்டன்.*



*மனைவி:*
*பிறக்கிற எங்கட பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில பாஸ் பண்ணுவானா?*

## என்னடா உலகம் இது......?



பிரதீப்: ஏண்டா ! உங்கட மாமா கல்யாணத்தில எல்லாருக்கும் சில்வர் தட்டு கொடுத்தவை?

தனுஷ்: எங்கட பெரிய மாமின்ர மகன் ஹரிஸ் அண்ணாவின்ர கல்யாணத்தில சில்வர் டம்ளர் எல்லாருக்கும் கொடுத்தவை, அதுதான்.

பிரதீப்: அவை ஏன் சில்வர் டம்ளர் கொடுத்தவை?

தனுஷ்: எங்கட சின்ன மாமின்ர மகள் சுபா அக்காவோட கல்யாணத்தில சில்வர் குங்கும சிமிழ் கொடுத்தவையாம்.

பிரதீப்: ஏண்டா..டா... குங்கும சிமிழ் கொடுத்தவை?

தனுஷ்: எங்கட கஜன் அண்ணாவின்ர கல்யாணம் 5 வருஷத்திற்கு முந்தி நடந்தது. அப்ப, தமிழ் கலாசாரமெண்டு வெற்றிலை பழம் பாக்கு கொடுத்தவையாம்.

பிரதீப்: அப்ப.. உங்கட அக்காவின்ர கல்யாணத்திற்கு என்ன கொடுக்கப் போறீங்கள்?

தனுஷ்: அப்பா சொன்னவர், எல்லாருக்கும் ஒரு சின்ன சில்வர் குத்துவிளக்கு கொடுக்கப் போறாராம்.

பிரதீப்: நிறைய செலவாகுமே!

தனுஷ்: அம்மா சொன்னவ. எங்கட தோட்டக் காணி 2 பரப்பையும் வித்து குத்துவிளக்கு வாங்கலாமெண்டு.

# வன்முறை வாழ்வில் சிதைக்கப்படும் சிறு பயிர்களைப் பாதுகாக்க அனைவரும் விழித்திருங்கள்!



என்
சகோதரியைச்
சிதைத்தவன்
அயல்நாட்டு படைவீரன்
என் தாயைக் கொன்றவன்
என் தேசத்து படைவீரன்
என் தந்தையைச் சுட்டவன்
என் இனத்தின் காவல் தலைவன்
என்னைக் கிழித்து நாராக்கி
என் வாழ்வை அழித்தவனே
நீ யார்?
எனக்கு சொக்லெட்டி பாராட்டி
பரிசும் தந்த
என் எதிர் வீட்டு
மாமா அன்றோ நீ...
ரே...

## பெண்கள், சிறுவர்களுக்காக நடைமுறையிலுள்ள சர்வதேச தினங்கள்

**மார்ச் 8 : சர்வதேச பெண்கள் தினம்.**

1908ஆம ஆண்டில் நியூயோர்க் நகரத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் வீதியில் இறங்கி, பெண்களுக்கு வாக்குக் கொடு எனப் போராடினார்கள். உலகளாவிய ரீதியில் போராட்டங்களில் பெண்கள் ஈடுபட்டதன் முடிவில் மார்ச் 8ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச பெண்கள் உரிமைகளுக்கான தினமாக பிரகடனப்படுத்தியது.

**ஜூன் 12 : சிறுவர் தொழிலாளர்கள் தினம்**

**அக்டோபர் 1 : சிறுவர் உரிமைகள் தினம்** (ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு தினங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றது)


**அக்டோபர் 11 : சர்வதேச பெண் பிள்ளைகள் தினம்.**

பெண் பிள்ளைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்கள் அதிகரித்து வருகின்றதை மனதில் கொண்டு, கடந்த வருடம் இத் தினம் ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

**அக்டோபர் 15 : கிராமியப் பெண்கள் தினம்**

**நவம்பர் 25 – டிசம்பர் 10 : பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்பு தினம்.**

உலகளாவிய ரீதியில் 50 வீதமான பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப்படுவதாகவும், 603 மில்லியன் பெண்கள் குடும்ப வன்முறைகளுக்கும் 60 மில்லியன் பிள்ளைத் திருமணங்கள் நடைபெறுவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் நவ.25 - டிச.10 வரையான 16 நாட்களையும் பெண்கள் மீதான வன்முறைகள் ஒழிப்பு நாட்கள் என ஐ.நா. 2013ஆம் ஆண்டில் பிரகடனம் செய்துள்ளது.




இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றன சமூக வலைத்தளங்கள். இதில் மூஞ்சிப் புத்தகம் (பேஸ்புக் என்றால் தமிழில் முகப் புத்தகம் அல்லது மூஞ்சிப் புத்தகம் தானே?) மிகவும் பிரபலமானது. இதன் உறுப்பினர்களாக 115 கோடிக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனராம்.

மூஞ்சிப் புத்தகம் மூலம் தனிப்பட்ட தகவல்கள், செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் என சகல விபரங்களும் குடும்பத்தினர்களிடையேயும், பொதுவாகவும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. எனினும் பேஸ்புக்கில் தகவல்கள் பரிமாற சில கட்டுப்பாடுகள் உள்ளன. இன, மத துவேஷம் மற்றும் வன்முறையைத் தூண்டும் தகவல்கள், ஆபாசப் படங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆனால் சமீபத்தில் ஃபேஸ்புக்கில் பகிர்ந்து கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பான வீடியோ காட்சி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மெக்சிகோ நாட்டில் படமாக்கப்பட்டதாக கருதப்படும் அந்த வீடியோவில் முகமூடி மனிதர் ஒருவர் பெண்ணின் தலையைக் கொய்வது போல அமைந்திருந்தது. "சவால்" உங்களில் யாரால் இந்த வீடியோவைப் பார்க்க முடியுமா? என்ற தலைப்பில் இந்த வீடியோ வெளியானது.

இந்த வீடியோவைப் பார்த்த பலரும் திடுக்கிட்டுப் போயினர். இந்த வீடியோவால் இளம் மனதுகள் பாதிக்கப்படும் உடனடியாக இதை நீக்கவும் என பலரும் வேண்டுகோள் விடுத்தனர். ஃபேஸ்புக் தரப்பில் முதலில் தரப்பட்ட பதில் அதிர்ச்சியாக இருந்தது. இது போன்ற வீடியோக்களை பகிர அனுமதிப்பதாக ஃபேஸ்புக் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

"ஃபேஸ்புக்கை உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக மனித உரிமை மீறல், தீவிரவாத செயல் மற்றும் பிற வன்முறை தொடர்பான சம்பவங்கள் குறித்த கருத்தை தெரிவிக்க பயன்படுத்துகின்றனர்" என்று ஃபேஸ்புக் தரப்பில் கூறப்பட்டது. "இது போன்ற செயல்களை கண்டிக்கவே மக்கள் இவற்றை பகிர்ந்து கொள்கின்றனர்" என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஃபேஸ்புக்கின் இந்த பதில் சர்ச்சையை ஏற்படுத்தியது. மே மாத வாக்கில் வன்முறை வீடியோக்களுக்கு தற்காலிக தடை விதித்திருந்த நிலையில், இது போன்ற வீடியோக்களை அனுமதிக்க ஃபேஸ்புக் மீண்டும் முடிவு செய்திருப்பதாக கூறப்பட்டு பெரும் விவாதம் எழுந்தது.

எந்த நோக்கில் வன்முறை வீடியோக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் அவை ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் தீவிரமானவை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வீடியோக்களை சில நொடிகள் பார்த்தாலும் அவற்றின் பாதிப்பு காலமெல்லாம் இருக்கும் என்று உளவியல் நிபுணர்கள் எச்சரித்தனர்.

இப்படி பரவலாக எழுந்த எதிர்ப்பை அடுத்து, பேஸ்புக் வன்முறை வீடியோ தொடர்பான தனது கொள்கையை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது.

வன்முறை தொடர்பான தகவல்கள் பற்றி புகார் வந்தால், அது பற்றி ஒட்டுமொத்த நோக்கில் ஆராய்ந்து அதை நீக்குவது பற்றி முடிவெடுக்கப்படும் என்றும், குறிப்பிட்ட அந்த வீடியோவை பகிர்பவரின் நோக்கத்தின் அடிப்படையிலும் இந்த முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் ஃபேஸ்புக் பதிவு ஒன்று தெரிவிக்கிறது.

எனினும், பேஸ்புக் நிர்வாகம் உறுதியான முடிவுக்கு இதுவரை வரவில்லையென்றே தெரிகிறது. வீடியோ, படங்கள், செய்திகளைப் பகிர்பவரின் நோக்கம் எதுவாக இருந்தபோதிலும் விளைவு பற்றி கவலைப்பட வேண்டியது சமூக வலைத்தளம் ஒன்றின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

தகவலைப் பகிர்பவரின் நோக்கம் பற்றி உணர்ந்து கொள்வதற்கு பேஸ்புக் நிர்வாகம் ஒருபோதும் கடவுளாக இருக்க முடியாது என்றே நாம் நினைக்கிறோம்.

கணனியிலிருந்து கைத்தொலைபேசிக்கே வந்துவிட்டது மூஞ்சிப் புத்தகம். இந்த நிலையில் பெற்றோரின் பொறுப்பு மேலும் அதிகரித்துள்ளது.

எங்கள் பிள்ளைகளின் மன ஆரோக்கியம் முதலாவது அவசிய தேவையாக உள்ளதனால் பெற்றோர், ஆசிரியர்களின் கண்காணிப்பு மேலும்

# வேண்டாத இணையத் தளங்களை தடை செய்யும் வழி!



இணையத் தொடர்புள்ள உங்கள் கணனியில் விரும்பத்தகாதது என நீங்கள் கருதும் தளங்களை நீங்கள் தடை செய்து கொள்ள முடியும். உங்கள் வீட்டிலுள்ள சிறுவர்களோ அல்லது ஏனையவர்களோ அந்த இணையத்தளங்களை பார்ப்பதைத் தடுப்பதற்கு சுலபமான வழியொன்றுண்டு. இதற்காக நீங்கள் எந்தவொரு மென்பொருட்களையும் தரவிறக்கம் செய்யவேண்டியதில்லை.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். முதலில் கீழே காட்டப்பட்ட பாதை ஒழுங்கில் etc. என்ற இடம் வரை செல்லவும்.

My computer → C Drive → windows → system 32 → drivers → etc
(C:\WINDOWS\system 32\drivers\etc]

இப்போது etc என்றதில் HOSTS என்ற கோப்பு காணப்படும். இதனை double clock செய்து ஒரு ழெவநியன இல் திறந்து கொள்ளுங்கள். இப்போது இந்த Notepad,d; இறுதியில் "127.0.0.1 localhost என்பது காணப்படும். இதன் கீழே நீங்கள் தடைசெய்ய விரும்பும் தளத்திற்கான முகவரியை 127.0.0.2 என்ற இலக்கத்திற்குப் பின்னால் கொடுக்கவும்.

உதாரணத்திற்குக் கீழே பார்கக்வும்.
127.0.0.1 locathost
127.0.0.2 www.blockedsite.com

இவ்வாறே மேலும் பல தளங்களைச் சேர்க்க விரும்பினால் 127.0.0.2 என்ற எண்ணில் உள்ள இறுதி இலக்கத்தை ஒவ்வொன்றாக அதிகரித்து எழுதவேண்டும்.

உதாரணத்திற்கு கீழே பார்க்கவும்:
127.0.0.1 localhost
127.0.0.2 www.xxxxx.com
127.0.0.3 www.bbbbbb.com
127.0.0.4 www.mmmm.com

பின்னர் save என்பதைக் கொடுத்து அவ் Notepad ஐ சேமித்துக் கொள்க. இனிமேல் உங்கள் கணனியில் நீங்கள் குறிப்பிட்ட விரும்பத்தகாத இணையத்தளங்களைப் பார்வையிட முடியாது.

# இயற்கையின் ஒலியைக் கேட்க ஒரு இணையதளம்

இந்தத்தளத்திற்கு சென்று நமக்கு எந்த ஒலி தேவையோ அதை தட்டச்சு செய்து ளூநயசஉா என்ற பொத்தானை சொடுக்கி தேடலாம். ஒன்றல்ல இரண்டல்ல 20 லட்சம் வித்தியாசமன ஒலிகள் இந்தத்தளத்தில் இடம் பெற்றுள்ளது. எந்த பார்ஃமெட் -ல் தேவையோ அதை தேர்ந்தெடுத்து தரவிரக்கலாம். அழகான இயற்கையின் ஒலியை கேட்க விரும்பும் நம்மவர்களுக்கும் இந்ததளம் பயனுள்ளதாக இருக்கும்.

http://www.findsounds.com/types.html



## விரும்பும் காட்சியை தேர்ந்தெடுக்க..

வீடியோ கோப்பு ஒன்றில் கணத்திற்கு கணம் காட்சி மாறிக்கொண்டே இருக்கும். இந்த காட்சி மாற்றத்தின் இடையே குறித்த ஒரு காட்சியை மட்டும் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் மென்பொருட்களை பயன்படுத்துதல் ஆகும்.

தற்போது இந்த வசதியை தரும் Video Snapshot Wizard எனும் மென்பொருளின் புதிய பதிப்பு வெளியாகியுள்ளது.

இம்மென்பொருளானது AVI, FLV, ASF, MOV, RM, RMVB, WMV, MKV, VOB, MPG, MPEG போன்ற பல்வேறு வீடியோ கோப்புக்களிலுள்ள காட்சிகளை தனியாக பெற்றுக்கொள்வதற்கு உதவியாக காணப்படுகின்றது.

மேலும் தனியாக பெறப்பட்ட காட்சிகளை BMP, JPG, GIF ஆகிய கோப்பு வகைகளாக சேமிக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

# முச்சந்திப் பிள்ளையாரை வருத்தும் ஐந்தாம் தரம்..

- மனோஷா -

**"ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.."**

எனக்கு மிகவும் பிடித்த தேவாரம். எனது பக்தர்கள் இதைப் பாடினால் என் மனம் உருகிவிடும். அவர்கள் கேட்கிற வரத்தைக் கொடுத்துவிடுவேன். ஆனால் இப்பல்லாம் ஐந்து என்று தொடங்கினாலே நெஞ்சு பட படக்குது.

இந்த முச்சந்தியிலை என்னை இருத்திப்போட்டு போறவன் வாறவனெல்லாம் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையிலை என்ர பிள்ளை பாஸ் பண்ண வேணும் என்று கேட்கிறாங்கள். அதுவும் இந்தத் தாய்மார் இருக்கினமே பெரிய கஷ்டம்.

பிள்ளை பாஸ் பண்ணினா எனக்கு அவை தருவம் என்று ஒப்பந்தம் போடுகிற லிஸ்ட்டே என்னால நம்ப முடியாது.


அரசியல்வாதிகள் மக்களுக்கு தருவோம் என்று சொன்னதை மறந்து போவாங்கள். ஆனால், மக்கள் எனக்கு தருவோம் என்று சொன்னதெல்லாம் நான் மறந்துபோடுவன். அவையின்ரை கோரிக்கை நிறைவேறிவிட்டால் ஒரு தேங்காயைக் கொண்டுவந்து உடைத்துப்போட்டுப் போடுவினம்.

தேங்காய் விலை ஏறிட்டுது எண்டு சொல்லி இப்ப அதுவும் குறைஞ்சு போட்டுது. கொஞ்சம் பூக்களைக் கொண்டு வந்து வைச்சிட்டுப் போகினம்.

கயந்தன்ர அம்மா மோட்ட சைக்கிளிலிருந்து இறங்காமலே "பிள்ளையாரப்பனே, என்ரை பிள்ளை ஐந்தாம் தர ஸ்கொலர்சிப் பாஸ் பண்ண வேணும்" என்று ஏதொவொன்றைத் தாறன் என்றும் சொல்லிப் போட்டுப் போவா.

அவவின்ர சிநேகிதி வந்து அவ தாறதைவிட உனக்கு நான் கூடத்தான் செய்வன் என்ர பிள்ளை கிஷோர் அவவின்ரை பிள்ளையை விட அதிகம் மார்க்ஸ் எடுக்க வேணும் என்று சொல்லுவா.

அதுக்குப் பின்னாலை அவவின்ரை தங்கச்சி வருவா.
பிள்ளையார் அப்பனே! என்ரை மகள்



அக்காவின்ர மகன் கிஷோரை விட கூட மார்க்ஸ் எடுக்க வேணும். எல்லாம் உன்ரை கையிலதான் இருக்கு எண்டு ஒரு மிரட்டல் போடுவா. அவ தூர வர்றதைக் கண்டால் நான் மரத்துக்குப் பின்னாலே போய் மறைந்திடுவன்.

"எனக்கு இப்ப பசிக்குது......"

அடுத்த றோட்டிலை எனக்குப் பெரியதொரு கோயில் இருக்கு. அங்க போய் ஏதாவது சாப்பிட்டிட்டு வருவம். அந்தப் பெரிய கோயிலிலை இருக்க எனக்கு விருப்பமில்லை.

இந்த முச்சந்தியில் இருக்கிற கலகலப்பு அங்க

இல்லை. ஐயர் கதவையும் பூட்டிப்போட்டுப் போடுவார். நான் தனிய நித்திரைதான் கொள்ள வேணும். அல்லது மோதகம், பொங்கல் எல்லாம் சாப்பிட்டு வயிறுதான் பெருக்கும்.

அதுக்கும் மேலால என்ர சிநேகிதன் சுதன் இந்த வழியாலதான் போவான்.

சுதனுக்கு என்னிலை சரியான விருப்பம். தனக்கு கிடைக்கிற இனிப்புகளிலை எனக்கும் ஒன்று தந்திட்டுப் போவான்.

சுதன் அம்மாவோட நடந்து போவான். இங்க பக்கத்திலதான் இருக்கிறான். அவன் முதலாம் தரம் படிக்கத் தொடங்கின நாள் தொடக்கம் எனக்கு அவனோட பழக்கம்.

முதலாம் தரம் படிக்கிறபோது, என்ரை தும்பிக்கையைத் தொட்டுப் பார்க்க அவனுக்கு விருப்பம். "இது என்ன யானையா?" என்று தன்ரை அம்மாவிடம் கேட்பான்.

"ஏ! தொடாதே. யானை இல்லை. இவர்தான் பிள்ளையார் கடவுள். நல்லாப் படிக்க வேணும் என்று பிள்ளையாரைக் கும்பிடு" என்று அம்மா சொல்லுவா.

அவனுக்கு கடவுள் என்றால் என்னவென்றும் புரியவில்லை. "கடவுளே! இன்றைக்கு டீச்சர் எங்களை கூட நேரம் விளையாட விட வேணும்" என்றே கேட்பான்.

இப்ப சுதன் நான்காம் தரத்திற்கு வந்துவிட்டான். பாடசாலைக்கும், ரியூசனுக்கும் மாறி மாறிப் போய் வந்துகொண்டிருப்பான். என்றாலும் அவன் என்னை மறக்கமாட்டான். சுதனிடம் இப்போதெல்லாம் பழைய உற்சாகம் இல்லை. படிப்பிலை களைத்துப் போய்விட்டான் போலிருக்கிறது. அவனுடைய அம்மாகூட மெலிந்துபோய்விட்டா.

இருவரும் எனக்குப் பக்கத்தில் வந்து நின்றார்கள். அம்மா, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சுதன் நல்ல மார்க்ஸ் வாங்கினால் எனக்கு மோதகப் படையல் வைப்பதாக வேண்டிப் பிரார்த்திக்கொண்டிருந்தா.

சுதன், "பிள்ளையாரே! நீ என்ரை நண்பனல்லோ! எப்படியாவது இந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்திவிடு. பிள்ளையாரே! நீ பாடசாலையே போகவில்லையே. உனக்குத் தெரியாது நாங்கள் படுகிற கஷ்டம். நான் இப்பல்லாம் வீட்டில விளையாடுறதே இல்லை. அம்மா, அம்மம்மா, பாட்டி, பாட்டா, மாமா, சித்தி, சித்தப்பா எல்லாரும் சொல்லுறது ஒண்டுதான், "சுதன்! தெரியும்தானே அடுத்த வருஷம் நீ ஸ்கொலர்ஷிப். விளையாடிக் கொண்டிருந்தாயெண்டால் பெயில்தான். பிறகு நல்ல பாடசாலையும் கிடைக்காது. உன்ரை படிப்பே நாசமாயிடும்" இப்படியே ஏதாவது சொல்லி மிரட்டிக்கொண்டே இருப்பார்கள்" சுதன் மனதிற்குள் புலம்பிக்கொண்டிருந்தான்.

இங்கதான் நிறைய பாடசாலைகள் இருக்கே. இதெல்லாம் நல்ல பாடசாலைகள் இல்லையோ? இந்த ஆசிரியர்கள் எல்லாம் சரியில்லாதவர்களோ? அப்ப அங்க படிக்கிற பிள்ளையள் எல்லாம் வீணாய் போயிடுங்களோ? இதென்னடா கொடுமை! எனக்கு சரியான கவலை வந்திட்டுது.

சரி! அப்பா, அம்மாவிடம் இலங்கையில இருக்கிற இந்த ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையைப் பற்றி கலந்தாலோசிக்க வேணும். எப்படியாவது இதை நிறுத்தி இந்தப் பிள்ளைகள் சிரித்து விளையாட உதவி செய்ய வேணும். எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளும் படிப்பில் உயர வழிகாட்ட வேணும்●

## தண்டவாளங்கள்




இலங்கையில் முதலாவது ரயில் தண்டவாளத்தை அமைக்கும் வேலைகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது 1858ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அதிகாரத்திலிருந்த பிரிட்டிஷ் கவர்னர் சேர் ஹென்றி வார்ட இதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் ரயில் போக்குவரத்துக்கு ஏற்றவாறு தண்டவாளம் அமைக்கும் வேலைகள் 1864ஆம் ஆண்டிலேயே பூர்த்தியாகின.

இதற்கிணங்க கொழும்பிலிருந்து கம்பஹா மற்றும் அம்பேபுஸ்ஸ வரை மட்டுமே ரயில் செல்லக் கூடியதாக அமைந்தது. 1927ஆம் ஆண்டளவில் 1530 கிலோ மீற்றர்கள் வரையே தண்டவாளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ரயில் சேவைகளும் இடம் பெற்றன.

1867ஆம் ஆண்டு கண்டி வரை ரயில் தண்டவாளம் போடப்பட்டது. திருகோணமலை வரை 1926ஆம் ஆண்டிலேயே பூர்த்தியாகின. ஆரம்பத்தில் மலையகத்திலிருந்து கோப்பியைக் கொண்டு வரும் வர்த்தகத் தேவைக்காகவே ரயில் பயன்படுத்தப்பட்டது. கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்த பின்னர், தேயிலையை ரயில் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்ல பயன்பட்டது.

தற்போது, தனியார் தமது உல்லாசப் பயணத்திற்காக புகையிரதத்தை பதிவு செய்யும் வசதியுள்ளது. 60 முதல் 100 பேர் வரை ஹித்தாச்சி என்ற சொகுசு புகையிரதத்தில் பயணிக்க முடியும். கட்டணம் அதிகம்தான். அடிப்படை கட்டணமாக 5000 ரூபாவும் பின்னர் கிலோமீற்றருக்கு 1400 உம் செலுத்த வேண்டும்.

# அறமும் சட்டமும்



"அரசு ஒரு நெறியைச் செயல்படுத்தினால் மட்டுமே அது சட்டமாகிறது. அரசால் செயலுறுத்தப்படுவன எல்லாம் அறநெறிகளாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. எனவே அறநெறிக்கு மாறுபட்டதாகக் கூடச் சட்டநெறி இருக்கலாம்" என்கிறார் ஹாலண்ட் என்ற சட்ட அறிஞர்.

அறநெறிகள் பலவும் சட்டநெறிகள் ஆவதில்லை. அன்புடைமையும் அருளுடைமையும் அறநெறிகள். ஆனால் அவை சட்டநெறிகளல்ல. ஒருவர் உண்மையே பேசவேண்டும் என்பது ஒழுக்கநெறி. ஆனால் எங்கும் எப்பொழுதும் ஒருவர் உண்மையே உரைக்க வேண்டும் என்று சட்டம் விதிப்பதில்லை. நீதிமன்றத்தில் சான்றளிப்போர் உண்மையைக் கூற வேண்டும் என்றும் பிறருக்குத் தீங்கிழைக்கும் வகையில் உண்மையை மறைத்துப் பேசுதல் கூடாது என்று மட்டுமே சட்டம் விதிக்கின்றது. ஒருவர் தாம் அளித்த வாக்கினை நிறைவேற்ற வாக்குறுதியைப் பேண வேண்டும் என்பது அறநெறி. ஆனால் சட்டம் பிறரிடமிருந்து எதிர்ப்பயன் பெற்று அல்லது பெறுவதற்கென்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மட்டுமே கட்டாயமாக நிறைவேற்ற வேண்டுமென விதிக்கின்றது. இவ்வாறு இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற வகையில் அறநெறிகளில் சில மட்டுமே சட்டவிதிகளாக இயற்றப் பெறுகின்றன. "உயர்ந்த நற்பண்புகளை ஆய்ந்து நல்லவையனைத்தையும் அறம் ஏற்றுக் கொள்கிறது. அவற்றில் காலத்திற்கும் .இடத்திற்கும் ஏற்றவை மட்டுமே சட்டவிதிகள் ஆகின்றன" என்று பேட்டன் என்ற சட்ட நூலறிஞர் கூறுகின்றார்.

## வாசகர்களே!

நீங்கள் தொழில் செய்யும் இடங்களிலோ அல்லது வீட்டிலோ, சமூகத்திலோ உங்கள் உரிமைகள் மீறப்படுவதாக அல்லது துர்ப்பிரயோகம் செய்யப்படுவதாக, நீங்கள் உணர்ந்தால் அதனை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். விஷயம் உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும் பட்சத்தில், உங்களை அடையாளம் காட்டாமலே உங்கள் பிரச்சினையை நாம் வெளிப்படுத்துவோம். தயவுசெய்து எந்தவித கற்பனையும் இல்லாமல், உண்மையானவற்றை மட்டும் எழுதி அனுப்பவும். இரகசியம் பேணப்படும்.

தபால் முகவரி:
பனங்கூடல் சஞ்சிகை
"எனது உரிமை"
ஜீவ பவனம்
மல்வம், உடுவில்
panangkoodal@gmail.com


# பழமொழிகளில் தெய்வங்கள்

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை பாழ்பட்டுவிடும். நம்பிக்கை அதீதமாகவும் இருப்பது துன்பம் தரும். ஆனாலும் மனிதனுக்கு நம்பிக்கை என்பது மிகவும் இன்றியமையாதது. இந்நம்பிக்கையில் அதிகமாகக் காணப்படுவது தெய்வங்கள் குறித்த நம்பிக்கையே. ஏதாவதொரு நம்பிக்கை இருக்குமாயின், வாழ்க்கையில் மனிதனுக்கு மனச் சோர்வு ஏற்படாது அது காக்கின்றது. நம்பிக்கை தளர்கின்றபோது மனிதன் தன்னம்பிக்கையை இழக்கின்றான். தன்னப்பிக்கையை மனிதன் இழக்கின்ற நிலையில் விரக்தியின் விளிம்பு நிலையைத் தொட்டு விடுகின்றான். மனிதன் மனத்தின் விரக்தியை விரட்டும் நம்பிக்கையாக தெய்வ நம்பிக்கையானது திகழ்கிறது. இந்து சமயத்தைச் சேர்ந்த முன்னோர்கள் பழமொழிகள் வாயிலாகத் தெய்வங்களைப் பற்றிக் கூறி அதன்வழி வாழ்வியல் நெறிகளை எடுத்துரைத்துள்ளனர்.



முழுமுதற் பொருளாக விளங்குபவர் பிள்ளையார் ஆவார். அவரே கணத்திற்குத் தலைவராக விளங்குவதால் கணபதி என்றும் விநாயகன் என்றும் அழைக்கப்படுகின்றார். மக்கள் அனைவரும் எந்தச் செயலையும் தொடர்வதற்கு முன்பாகப் பிள்ளையாரை, மண், மஞ்சள், பசுவின் சாணம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு உருவாக்கி வணங்கி வழிபடுவர். அதன் பின்னர் தங்களின் செயல்களைத் தொடங்குவர். சில சமயம் இப்பிள்ளையாரை உருவாக்கும்போது அனுமனைப் போன்றதொரு உருவம் ஏற்பட்டுவிடுவதுண்டு. அதுபோல நாம் ஏதேனும் ஒரு செயலைச் செய்ய அது வேறொன்றில் போய் முடிந்து சிக்கலை உருவாக்கும். "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைதான்".

# மனித மூளை



மனிதனின் சமீபத்திய அறிவ-் இயல் கண்டுபிடிப்புகள் பலவும் வியப்பின் விளிம்பிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றன .இதற்குக் காரணம் மனித மூளையின் சக்திதான்.

முன் மனித மூளை பற்றி ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் பலர் திறமையற்ற மனிதர்கள் தனது மூளையின் சக்தியில் குறைந்த அளவு மட்டுமே பயன்படுத்துவதாகவும் திறமையானவர்கள் (விஞ்ஞானிகள் போன்றோர்) தங்கள் மூளையின் ஆற்றலை அதிக அளவு பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

ஆனால் அண்மையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் ஒவ்வொரு மனிதனும் தனது மூளையை 100 வீதமும் பயன்படுத்துகிறான் எனவும் மனித மூளையின் சக்தி இவ்வளவுதான் எனவும் கூறியுள்ளார்கள் .

நரம்பு உயிரியல் பேராசிரியர் "சைமன் லாவின்" மூளை சிறப்பான வடிவத்தை பெறுவதற்கும் திறமையாக செயல்படுத்துவதற்கும் தகுந்த ஆற்றல் தேவை என்றும் மனிதனால் தனது மூளையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் செயல்படுத்த முடியாது என்றும் கூறுகிறார்.

மூளையின் வெவ்வேறு பகுதிகள் இழைகளால் இணைக்கப் பட்டுள்ளதாகவும் மிகுந்த அறிவாளிகளின் மூளையில் இந்த இணைப்புகள் சிறப்பாக உள்ளதாகவும் குறைவான அறிவுடையவர்களுக்கு இந்த இணைப்பு சிறப்பாக இல்லாமல் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் .

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் உளவியல் துறை பேராசிரியர் "எட் புல்மோர்" கூறுகையில் மிகுந்த அறிவாளிகளுக்கு மூளையில் இழைகள் சிறப்பான இணைப்பை கொண்டிருப்பதால் கட்டளைகள் உடனடியாக மூளையின் பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாகவும் இந்த இணைப்பு சிறப்பாக அமையப் பெறாதவர்கள் மூளையில் கட்டளைகள் மிக மெதுவாக பரிமாற்றம் செய்யப்படுவதாகவும் கூறுகிறார். .

சிறந்த மூளைத் தொகுப்பிற்கும் சிறந்த நுண்ணறிவு திறனுக்கும் (IQ) நெருங்கிய தொடர்பு உண்டு என்கிறார் இவர் .இவர்கள் ஆராய்ச்சியில் ஆறுதல் தரும் விடயம் உடலின் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மூளையின் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்யலாம் என்பதுதான்.

சுவரில்லாமல் சித்திரம் வரையமுடியாது. முற்காலத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தலையில் குட்டிக் குட்டித்தான் கற்பித்தார்கள். எப்படியானாலும் எங்கள் மூளை சுறுசுறுப்பாக இயங்குவது எம்மைப் பொறுத்த விஷயம்தான்.

# உங்களை நீங்களே ஏமாற்ற வேண்டாம்

நீரிழிவைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் மருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் நீரிழிவுநோய் பாதித்த ஒருவர் 5 வருடங்கள் மட்டுமே உயிர் வாழ முடிந்தது.

நீரிழிவு நோய் இப்போது உலகப் பொது எதிரியாகிவிட்டது.ஆனால் நோயை நண்பனாக்கிக் கொள்வது எங்களில் தங்கியுள்ளது. நீரிழிவு நோயாளி ஒருவர் இன்சுலின் ஊசியையோ அல்லது குளிசையையோ எடுத் துக் கொண்டால் மட்டும் போதும் என நினைப்பது தவறு. உடல் எடை, உணவில் மாற்றம், தினமும் 20 நிமிட நடைப் பயிற்சி, வாரம் ஒருமுறை குருதியிலுள்ள சீனியின் அளவை அறிந்துகொள்ளல் அவசியமானது.

சிறிதாக அடிபட்டாலோ அல்லது சிறிய காயங்கள் ஏற்பட்டாலோ உடனே கவனத்திலெடுக்க வேண்டும். மேலும், உணவில் மாற்றம் என்பது, நீங்கள் வழமையாக உண்ணும் உணவில் மாற்றம் ஏற்படுத்துவதுதான். அதாவது மாச்சத்து உணவுகளைக் குறைத்து காய்கறி வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்வதே அது. பொதி செய்யப்பட்டு இறக்குமதியாகும் வெளிநாட்டு உணவுகளை உண்ணவேண்டும் என்று நினைக்க வேண்டாம்.

இரத்த பரிசோதனைக்கு செல்வதற்கு முன்னர் சில நாட்கள் மட்டும் உணவுக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வது தவறு. இது உங்களை நீங்களே ஏமாற்றும் சிறுபிள்ளைத்தனமானது.

சினிமா விமர்சனம் - சினிமா விமர்சனம் -

# ராவண தேசம்

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பார்கள். உலகத் தமிழர்களிடையே தற்போது வியாபாரமாகக் கூடிய கதை இலங்கைத் தமிழர்களின் கண்ணீர் கதைகள்தான். உணர்ச்சிபூர்வமான காதல் கதைகளை சொல்லும்போது யாரும் சொல்லாத விஷயங்களை, காட்சியமைப்புகளை, நடிப்பை வெளிக்கொண்டு வருவது மிகவும் கஷ்டம். ஆனால் இலகுவாக ரசிகர்களை உணர்ச்சிவசப்படச் செய்வதற்கு இலங்கைத் தமிழர்களின் அவலத்தின் சில காட்சிகளே போதுமானது. இதன் அடிப்படையில் வெளிவந்திருப்பதே "ராவண தேசம்"



இப்படத்தை இயக்கி, நடித்துள்ள அஜெய் நூத்தகியும், இப்படத்தை தயாரித்துள்ளவர்களும் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை வைத்து சினிமா செய்த தமிழர்களே சரியான புரிதலின்றி செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் தெலுங்கு மொழித் தயாரிப்பாளர்களிடமிருந்து நாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது.

அரச படைக்கும் புலிப் படைக்கும் இடையே மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த இரு அட்டூழியங்களிலிருந்தும் தப்பிக்கொள்ள இந்தியாவுக்கு அகதிகளாக சிலர் புறப்படுகிறார்கள். அகதிகளாக கடல் வழியாக செல்லும்போது அவர்கள் படும் துன்பங்கள், தடைகளை வைத்தே இப்படம் புனையப்பட்டுள்ளது.

எல்லாத் தமிழ் மசாலாப் படங்களையும் போல, ஒரு கதாநாயகன், அவரை துரத்தி துரத்தி காதலிக்கும் ஒரு காதலி, நண்பர்களின் கலாட்டா என்று தான் இப்படமும் ஆரம்பிக்கின்றது. இந்தியாவுக்கு அகதிகளாக செல்ல நினைக்கும் மக்களுக்கு அஜெய் உதவி செய்கிறார். ஆனால், புலிகளோ, தமிழர்களை இங்கிருந்து செல்ல வேண்டாம், விரைவில் நமக்கு சுதந்திரம் கிடைக்கும் என்று மக்களுக்கு கட்டளையிடுகிறார்கள்.

தமிழ் மக்களை உலகம் முழுவதும் பரவச் செய்வது எனது போராட்டம் என்று கூறி தமிழர்களை அகதிகளாக கடல் வழியாக அனுப்புகிறார். (புலிகளின் மத்தியில் இன்னொருவர் தலைமை தாங்கி, அதுவும் புலிகள் விரும்பாத ஒன்றை செய்வதற்காக, எந்த வடிவத்திலும் போராட்டம் நடத்த முடியாது என்பது தெலுங்கு இயக்குநருக்கு தெரிந்திருக்காது)

ஒரு கட்டத்தில், இலங்கை ராணுவம் தாக்குதல் நடத்தி, அந்தப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள். இராணுவத்தினால் ஏற்படும் கரைச்சல்களிலிருந்து தப்ப அங்கிருந்து அஜெயும் இந்தியாவுக்கு புறப்பட முடிவு செய்கிறார். அதன்படி அஜெய், அவருடைய காதலி, நண்பர்கள் உள்ளிட்ட சிலர் ஒரு படகில் இந்தியாவுக்கு செல்கிறார்கள். இடை நடுவில் நடந்த சில குழப்பங்களால், 10 நாட்கள் ஆகியும் கரையை அடையாமல் நடுக் கடலில் தவிக்கிறார்கள். இதனை எளிமையாக ரசிகர்களுக்கு இப்படம் புரியவைத்துள்ளது.

இப்படத்தில் கதாநாயகன் அஜெய், இயக்குநரும் இவர்தான். நந்திதா என்ற நடிகை ஜெனிபர் என்று பெயரை மாற்றிக்கொண்டு இப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார். குறிப்பிட்ட சில கதாபாத்திரங்களை இயக்குநர் மனதை உருக்கும் விதத்தில் அமைத்திருக்கிறார். அனைத்து தொழில்நுட்பங்களும், திரைக்கதையில் எந்தவித குழப்பங்களும் இல்லாமல், செல்கிறது.

முள்ளிவாய்க்கால் அவலப் படங்களையும், காதில் விழுந்த கடல் அகதிகளின் கதைகளையும் மனதில் வைத்து அஜெய் படம் பண்ணியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

ராவணன் என்றால் இந்தியர்களைப் பொறுத்தவரை ஒரு அரக்கன். ராவண தேசம் என்றால் அரக்கர்களின் தேசம்தான் எனக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அந்த ராவண தேசத்தின் மக்கள்தான் நாங்களும்.














தமிழ் சினிமா இன்னும் 25 வருடங்களுக்குப் பிறகு பார்க்க வேண்டிய படத்தை இயக்குநர் செல்வராகவன், இப்போதே காண்பித்திருக்கிறார். அவருடைய கற்பனையும், தேடலும் இவ்வுலகத்தையும் கடந்து அவரை வேறு ஒரு உலகத்திற்கு பயணிக்க வைத்திருக்கும் படம் தான் 'இரண்டாம் உலகம்'. இந்த பிரபஞ்சத்தில் பூமி மட்டும் இன்றி இன்னும் பல உலகங்கள் இருப்பதாகவும், அவற்றில் நம்மைப் போன்றே மனிதர்கள் வாழ்வதாகவும், படத்தில் ஆரம்பத்தில் சொல்லப்படுகிறது.

காதல் என்றால் என்ன என்று தெரியாத அந்த உலகத்தில் வெட்டு குத்து என்று வாழும் மனிதர்களுக்கு இடையே காதல் ஏற்பட்டு, மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்று அந்த உலகத்தின் கடவுள் நினைக்கிறார். அதன்படியே, அந்த உலகத்திற்கு காதல் என்றால் என்ன என்பதை கற்றுக்கொடுக்கும் வேலையை பூமியில் இருந்து சென்ற ஆர்யா மேற்கொள்ள, இறுதியில் அவர்கள் காதலை கற்றுக்கொண்டார்களா? அதன்பிறகு நடந்தது என்ன என்ற ரீதியில் படம் பயணிக்கிறது.

செல்வராகவன் பாணி படம் இல்லை இது என்கிறார்கள் விமர்சகர்கள். பொதுவாக இதுபோன்ற கிராபிக்ஸ் படங்கள் என்றால், அதில் திரைக்கதையும், காட்சியும் விறுவிறுப்பாக இருக்க வேண்டும். இங்கு அதிலேயே மிகப்பெரிய ஓட்டை. என்ன தான் வித்தியாசமான முயற்சியில் செல்வா, இறங்கினாலும், காதல் என்ற கருவை மட்டும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறார்.

இந்தகாதலைக்கொண்டேஇரண்டுஉலகங்களையும் ஒன்றாக இணைக்கிறார். அப்படி அவர் இணைக்கும் போது நடக்கும் சம்பவங்கள், ஒரு கற்பனை படத்திற்கு ஏற்றவாறு இருந்தாலும், அதை சொல்லும் விதமும், மற்றொரு உலகத்தில் நடைபெறும் சம்பவங்களும் வெறும் சப்பைக்கட்டுக்களாகவே உள்ளன.

# சினிமா விமர்சனம்

2011ம் வருடத்தில் வந்த பிறமொழிப் படங்களுக்கான போட்டியில் சிறந்த பிறமொழிப் படத்துக்கான ஆஸ்கர் விருதை வென்றது இந்த ஈரானியத் திரைப்படம். இதுவொரு பெர்சிய மொழி திரைப்படம். உலகெங்கும் திரையிடப்பட்டு 53க்கு மேற்பட்ட விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.


ஒரு குடும்பக்கதை இது. கணவன். மனைவி. மகள். கணவனின் தந்தை. அவர் ஞாககமறதி நோயுள்ளவர். தன்னுடைய கணவனான "நாடேர்"ரிடம் (Peyman Moadi) இருந்து விவாகரத்து கோரும் "சிமின்" (Laila Hatami) கோர்ட்டில் நீதிபதியிடம் பேசுவதாக ஆரம்பிக்கிறது படம். ஈரானில் இப்போது வாழும் சூழல் சரியில்லை என்றும் எனவே தன்னுடைய ஒரே மகளின் எதிர்காலம் சிறந்ததாக அமைய வெளிநாடு சென்று தன் 11 வயதுப் பெண் குழந்தை "டெர்மே"வை வளர்க்க விரும்பும் சிமின் தன்னுடன் வர மறுக்கும் தனது கணவன் நாடேரிடம் இருந்து விவாகரத்து கோருகிறார். நாடேரோ அல்ஜீமர் என்கிற மூளைச் செல்கள் இறப்பு நோயால் அவதிப்படும் அவனது தந்தையை யார் பார்த்துக் கொள்வார்கள் என்கிறான்.

நாடேரைத் தனது பிள்ளையென்று கூட அறிந்து கொள்ளாத நிலையில் இருக்கும் தந்தையை ஏதாவது மனநல காப்பகத்தில் விடவேண்டியது தானே என்கிறாள் சிமின்.

"அவருக்கு நான் தான் அவர் பையனென்று அடையாளம் காணத்தெரியாது.. ஆனால் எனக்கு அவர் தான் அப்பா என்று தெரியுமில்லையா?". அவரை எப்படி நான் விட்டுச் செல்லமுடியும் என்கிறான் நாடேர்.

நீதிபதியோ விவாகரத்து கோருவதற்கு. கணவர் குடிகாரர். பெண்ணை அடிப்பவர் என்பது போன்ற தீவிர காரணங்கள் வேண்டும் என்கிறார். சிமின் அதை மறுத்து தன் கணவர் மிக நல்லவர் என்கிறாள். குழந்தையை தன்னுடன் அனுப்பி விடும்படி கோருகிறாள். நீதிபதியோ அதற்கு குழந்தையிடமும் கருத்து கேட்கப்படவேண்டும் என்கிறார். எனினும் விவாகரத்து பெற கொஞ்ச நாட்கள் கழித்து வரும்படி நீதிபதி கூறுகிறார். சிமின் தற்காலிகமாக தனது தாய் வீட்டிற்குச் செல்கிறார்.

நாடேர்-சிமின்-டெர்மே குடும்பம் ஒரு உயர் மத்தியதர வர்க்க ஈரானியக் குடும்பம். பாங்க் ஒன்றில் க்ளார்க்காக வேலை செய்யும் நாடேர் தனியே தன் குழந்தையையும். தந்தையையும் பார்த்துக் கொள்ள விழைகிறார். தனது கணவர் சிரமப்படக் கூடாதென்று சிமின் ஒரு வறுமையான குடும்பத்தைச் சேரந்த பெண்ணான "ரஷயா"வை வீட்டு வேலைக்காக சிபாரிசு செய்கிறாள். கர்ப்பிணியான ரஷயா தனது கணவனுக்குத் தெரியாமல் (இஸ்லாமிய முறைப்படி இது சட்ட விரோதம்) நாடேர். அவனது தந்தை மற்றும் டெர்மே இம்மூவரும் வசிக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டிற்கு வந்து வீட்டு வேலை செய்கிறாள். வயதான அல்ஜீமர் நோயால் யாரையும் அடையாளம் காணக்கூட இயலாத நாடேரின் தந்தையையும் கவனித்துக் கொள்கிறாள்.. ஒரு நாள் சுய நிதானமில்லாத நாடேரின் தந்தை திறந்திருந்த வாசல் வழியே வீட்டை விட்டு வெளியே சென்று








விடுகிறார். அவரைத் தேடி ஓடுகிறாள் ரஷயா. அதைத் தொடர்ந்து நடக்கும் சங்கிலித் தொடர் நிகழ்வுகளே இத் திரைப்படம்.

கதாபாத்திரங்களுடன் எம்மையும் ஓடச் செய்யும் ஒரு யுக்தி இந்தப் படத்தில் காணப்படுகிறது. திரையை விட்டு கண்களை அகற்றமுடியாமல் காட்சியமைப்பு அமைந்துள்ளது.

நடிப்பு என்றே நாம் உணர இயலாத அளவுக்கு மிகையில்லாத நடிப்பு. இயக்குநரின் நுணுக்கமான படப்பிடிப்பை பார்க்க விரும்புபவர்கள் இரண்டாவது தடவையாகவும் இந்தப் படத்தைப் பார்த்தால் புதிய விடயங்களைக் கண்டுகொள்வீர்கள்.

யதார்த்த வாழ்வின் நிகழ்வுகள் அப்படியே காட்சியமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது. குழந்தை களுக்கு முன்மாதிரியாக இருக்க விரும்பும் பெரியவர்கள் எவ்வாறு சிறிய தவறிழைக்கிறார்கள் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய குடும்ப அமைப்பில் சரி எது? தவறு எது? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு பார்வையாளர்களிடமே விவாதத்திற்கு விடப்பட்டுள்ள கதை இது. இயக்குநரே கதையையும் எழுதியுள்ளார். படத்தின் முடிவும் பார்வையாளர்களிடமே விடப்பட்டுள்ளது..

# ஒடியல் கூழ்



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| ஒடியல் மா | - 250 கிராம் |
| இறால் | - 500 கிராம் |
| மீன் | - 500 கிராம் |
| நண்டு | - 500 கிராம் |
| செத்தல் மிளகாய் | - 15 கிராம் |
| வெள்ளைப் பூடு | - 50 கிராம் |
| பயற்றங்காய் | - 100 கிராம் |
| மரவள்ளிக்கிழங்கு | - 200 கிராம் |
| நீர் | - 2.5 லீற்றர் |

பழப்புளி, உப்பு, மஞ்சள் தூள், மிளகு ஆகியவற்றை தேவையான அளவு எடுத்துக்கொள்ளவும்.

**செய்முறை**

முதலில் மிளகாய், வெள்ளைப்பூடு, மிளகு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். ஒடியல்மாவை (பனங்கிழங்கை பச்சையாக வெட்டி காயவைத்து இடித்து பெறப்படுவது ஒடியல் மா) நீரில் கழுவி ஊற வைக்க வேண்டும். அரை மணித்தியாலம் வரை ஊறிய பின்பு மேலே ஊறிநிற்கும் மஞ்சள் நிறமான திரவத்தை வடித்து எடுத்த பின்னர், மாவை ஒரு துணியில் கட்டி பிழிந்தெடுத்து உலரவிடல் வேண்டும்.

சிறு துண்டுகளாக வெட்டிய பயற்றங்காய், மரவள்ளிக்கிழங்கு, பலாக்கொட்டையுடன் மஞ்சள்தூள், உப்பு சேர்த்து தண்ணீரை விட்டு அவியவிட வேண்டும். இதனுடன் சுத்தப்படுத்திய மீன், இறால், நண்டு, (மட்டி கிடைத்தால் சேர்த்துக் கொள்ளலாம்) ஆகியவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பாத்திரத்தில் அவிந்துகொண்டிருக்கும் இந்தக் கலவைக்குள், அரைத்து வைத்துள்ள மிளகாய்கூடு, புளித்தண்ணீர், உலர்த்தி வைத்திருக்கும் ஒடியல் மா எல்லாவற்றையும் போட்டு சிறிது கொதிக்கவிட்டு இறக்கிவைக்கவும். சுவையும், சத்தும் மிகுந்த ஒடியல் கூழ் தயார்.

# ஒடியல் பிட்டு தயாரிக்கலாம்



ஒரு குவளை ஒடியல் மாவை 2 - 3 கப் தண்ணீரில் கரைத்து ஊற விடவும். மா பாத்திரத்தின் அடியில் அடைந்ததும் தண்ணீரை வடித்து நீக்கி விடவும். இவ்வாறு 2 - 3 தடவைகள் செய்யவும். இதனால் மாவின் கயர்ப்பு சுவை நீங்கும். பின்னர் மாவை ஒரு சுத்தமான துணியில் நன்கு பிழிந்து வடித்தெடுத்து உதிர்க்கவும். உதிர்த்த மாவுடன் உப்பு சேர்த்து கலந்து 3-4 மேசைக்கரண்டி சுடு தண்ணீர் சேர்த்து குழைத்து மணி மணியாக உதிர்த்திக் கொள்ளவும்.

உதிர்த்திய மாவுடன் தேங்காய்ப்பூ சிறிதளவு சேர்த்து ஆவியில் வைத்து அவித்து எடுக்கவும். அவித்த சூடான பிட்டினுள் சீனி அல்லது துருவிய சர்க்கரையுடன் விரும்பினால் பட்டரையும் சேர்த்து கலக்கவும்.சுவையான ஒடியல் பிட்டு தயார். இதனை அப்படியே சாப்பிடலாம். பக்க சுவை உணவுகள் தேவையில்லை.

மூலிகை

# தூதுவளை




தூதுவளையை வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கலாம். சிறகாக உடைந்த முள்ளுள்ள இலைகளையும், ஊதா நிறப் பூக்களையும், உருண்டையான பச்சை நிறக் காய்கள் சுண்டைக் காய் மாதிரி இருக்கும். சிவப்புப் பழங்களையும் வளைந்த முட்கள் நிறைந்த தண்டினையும் உடைய ஏறு கொடி. விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றது. வேர் முதல் பழம் வரை பயன்படுத்தலாம்.

இலையை நெய்யில் வதக்கி துவையலாக குழம்பாகக் கடைந்தோ சாப்பிட கபக் கட்டு நீங்கி உடல் பலமும் அறிவுத் தெளிவும் உண்டாகும். இலைச் சாற்றை சம அளவு நெய்யில் காய்ச்சிக் காலை மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டுவர என்புருக்கிக் காசம், மார்புச் சளி நீங்கும்.

காயை உலர்த்தித் தயிர், உப்பு ஆகியவற்றில் பதப்படுத்தி எண்ணெயில் வறுத்து உண்டுவர மூளை நரம்பு பலம்பெறும், இதய பலவீனம், மலச்சிக்கல் ஆகியவை நீங்கும். ஆஸ்துமா மூச்சுத் திணறலுக்கு பழத்துளைப் புகைபிடிக்கச் சளி இளகி குணப்படும்.

நாள்தோறும் 10 பூவைக் காய்ச்சிப் பால், சீனி சேர்த்து ஒரு மண்டலம் (45 நாட்கள்) பருக உடல் பலம், முக வசீகரம், அழகும் பெறலாம். தூதுவளை இலையில் ரசம் வைத்துச் சாப்பிடலாம். உடல்வலிக் கோளாறு, நுரையீரல் கோளாறுகளைக் குணப்படுத்தும்.




வசதியாகத்தான் இருக்கிறது
மகனே!
நீ கொண்டு வந்து சேர்த்த
முதியோர் இல்லம்
பொறுப்பாய் என்னை
ஒப்படைத்து விட்டு
சலனமின்றி
நீ வெளியேறிய போது,
முன்பு நானும் இது போல்
உன்னை
வகுப்பறையில் விட்டு விட்டு
என் முதுகுக்குப் பின்னால்
நீ கதறக் கதறக்
கண்ணீரை மறைத்தபடி
புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுகிறது..!

முதல் தரமிக்க
இந்த இல்லத்தை
தேடித் திரிந்து
நீ தேர்ந்தெடுத்ததை
அறிகையில்கூட
அன்று உனக்காக நானும்
பொருத்தமான பள்ளி
எதுவென்றே
ஓடி அலைந்ததை
ஒப்பீடு செய்கிறேன்..!

இதுவரையில்
ஒருமுறையேனும்
என் முகம் பார்க்க
நீ வராமல் போனாலும்
என் பராமரிப்பிற்கான
மாதத் தொகையை
மறக்காமல்
அனுப்பி வைப்பதற்காக
மனம் மகிழ்ச்சியடைகிறது

நீ விடுதியில்
தங்கிப் படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க வேண்டும்
என்ற
ஆவல் இருந்தாலும்
படிப்பை நினைத்து
உன்னை சந்திக்க
மறுத்ததன்
எதிர்வினையே இதுவென்று
இப்போது அறிகிறேன்..!

இளம் வயதினில்
நீ சிறுகச் சிறுக சேமித்த
அனுபவத்தை
என் முதுமைப் பருவத்தில்
மொத்தமாக எனக்கே
செலவு செய்கிறாய்
ஆயினும்,
உனக்கும் எனக்கும்
ஒரு சிறு வேறுபாடு
நான் கற்றுக்கொடுத்தேன்
உனக்கு!
வாழ்க்கை இதுதானென்று
நீ கற்றுக் கொடுக்கிறாய்
எனக்கு!
உறவுகள் இதுதானென்று..!

- யாரோ-

# WES

World • Express • Services

# WORLD EXPRESS SERVICES

INTERNATIONAL LOCAL COURIER SERVICE

## எதிர்வரும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு
## சிறப்பு விலைச் சலுகைகள்

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும், பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

**எமது சேவையின் சிறப்பியல்புகள்**

விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.

எந்தவொரு நாட்டுக்கும் மூன்று அல்லது நான்கு வேலைநாட்களில் உரியவரிடம் ஒப்படைக்கப்படும்.

10kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக் கழிவுகள்.

தேவையேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரித கதியிலான சேவை.

**நாடளாவிய எமது கிளை நிறுவனங்களில் இச்சலுகையை பெற்று மகிழுங்கள்**

**Hotline:**
077 3 870 952
011 2 520 894

**Head office**
338, Aluth Mawatha Road
Colombo-15, Sri Lanka
Tel: 011-2520894, 011-4574586

WORLD EXPRESS SERVICES
INTERNATIONAL LOCAL COURIER SERVICE

180/5, Station Road,
Vairavapuliyam Kulam,
Tel: 024-4903200

95, Sea Street,
Negombo, Sri Lanka
Tel: 031-2224544

Jaffna : 021 2220 356
Batticaloa : 065 2228 995

E-mail : worldexpress.ser@gmail, worldexpr@yahoo.com

# பனை அபிவிருத்திச் சபை
# Palmyrah Development Board

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

## பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" நிலையங்களில் விற்பனைக்குள்ள பிரதான பனம் பொருள் உற்பத்திகள்

- பனம் கோடியல்
- பனம் பானம்
- பனங்களி
- பனங்கட்டி
- பனம்பாணி
- பனாட்டு
- பாணிப்பனாட்டு
- கல்லாக்காரம்
- பனங்காய்ப் பலகாரம்
- ஒடியல்
- ஒடியல்மா
- புழுக்கொடியல்
- புழுக்கொடியல் மா
- பாம்போஷா
- கைவினைப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- பற்பசை
- மற்றும் ஏனைய பனை சார்ந்த உற்பத்திகள்




**பனை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அதி உயர் தரத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன**



**மேலதிக விபரங்களுக்கு:-**

பனை அபிவிருத்திச் சபை
தலைமை அலுவலகம்:-
தேசிய வீடமைப்பு செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222034, தொலைநகல்: 021-2224154
மின்னஞ்சல்: slpdbho@yahoo.com, info@katpahacholai.com
இணையம்: www.katpahachcholai.com

நகர அலுவலகம்:-
இல.244, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 011-2586820, தொலைநகல்:011-2553697
மின்னஞ்சல்: slpalmyrah@yahoo.com

**பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம்**

452ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1962 ஒக்டோபர் 13ஆந் திகதிய 13,346ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அட்டவணை, 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் பனைமரம், கருப்பனை மற்றும் பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Print By:- Eeswaa Digital Press, Jaffna.